வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 34 ■ சுடர்: 28 ■ கதிர்: 344 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 20, புதன் 06.11.2013


மழைக்கான சாத்தியம் உண்டு.

27.°C 26.°C

# பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இன்று பொதுநலவாயம் குறித்து விவாதம்

## புலம்பெயர் தமிழருடன் கமரூன் நாளை பேச்சு

லண்டன், நவ.06
இலங்கையில் இம்மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாடு தொடர்பான விவாதம் ஒன்று இன்று புதன் கிழமை பிரிட்டன் நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது.
அத்துடன் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் நாளை வியாழக்கிழமை சந்தித்துப் பேசுகிறார்.
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் இடம்பெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்குப் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி உட்பட பல அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.
இந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் விவாதம்

# மன்மோகனை மாநாட்டில் பங்கேற்குமாறு அழுத்தம்

கொழும்பு, நவ.06
பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சு, பிரதமர் மன்மோகன்சிங் மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன் தமிழக மாணவர்கள், தமிழக அரசியல்

# இசைப்பிரியாவின் காணொலி இராணுவச் சிப்பாயே தந்தார்

## 'சனல் - 4' இயக்குநர் கெலும் மக்ரே அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, நவம்பர் 06
இசைப்பிரியா இலங்கை இராணுவத்தினரால் உயிருடன் பிடித்துச் செல்லப்படுகின்றகாணொலியைஇலங்கை இராணுவ சிப்பாய் ஒருவரே தனக்குத் தந்தார் என அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார் சனல் - 4 இயக்குநர் கெலும் மக்ரே.



இந்தக் காட்சிகளை ஏற்கனவே இலங்கை அரசு பார்த்திருக்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்திய தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
தமிழீழத் தேசியத் தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாளரான இசைப்பிரியா இராணுவத்தினரால் உயிருடன் பிடித்துச் செல்லப்படும் காணொலியை சனல் - 4 ஊடகம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது.
இசைப்பிரியா கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சிகளையும் கடந்த வருடம் சனல் - 4 ஊடகமே வெளியிட்டிருந்தது. இந்தக் காட்சிகள் மற்றும் இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் இரு ஆவணப் படங்களை தயாரித்து வெளியிட்ட கெலும் மக்ரேக்கு இந்தியா செல்வதற்காக நுழைவிசைவு

### மக்ரேக்கு 'விஸா' மறுப்பு


லண்டன், நவ.06
இலங்கையின் போர்க் குற்றங்களைத் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வரும் 'சனல் -4' ஊடகவியலாளரான கெலும் மக்ரே, தனது ஆவணப் படத்தைத் திரையிடுவதற்காக இந்தியா செல்வதற்கு அவருக்கு நுழைவிசைவு (விஸா) வழங்க இந்தியா மறுத்துள்ளது.
எட்டு மாதங்களுக்கு முன்னரே அவர் இதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் தனக்கு இன்னமும் நுழை விசைவு வழங்கப்படவில்லை என்றும் இது அசாதாரணமானது என்றும் கெலும்

# வலி. வடக்கு வீடழிப்பு தொடர்பில் என்னிடம் விசாரித்தார் ஜனாதிபதி

## படை முகாம்களையே நிறுவுகிறோம் என்கிறார் ஹத்துருசிங்க

யாழ்ப்பாணம், நவ.06
வலி. வடக்கு வீடழிப்புத் தொடர்பில் ஜனாதிபதி தன்னிடம் விசாரித்துள்ளார் என்று தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, தற்போது பலாலியில் புதிய படை முகாம்களை நிறுவும்நடவடிக்கைகளையே மேற்கொண்டுள்ளோம் என்று கூறியுள்ளார்.
வலி. வடக்கில் குறிப்பாக புன்னாலைக் கட்டுவன் வடக்கில் இலங்கை இராணுவத்தினருக்கு வீடுகளை அமைப்பதற்காக தமிழ் மக்களின் வீடுகள் அழிக்கப்பட்டு வருவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ள குற்றச்

### இரவோடிரவாக இடம்பெயர்ந்தார் வள்ளுவர்



யாழ். சத்திரச் சந்தியில் அழகுற நீண்டகாலமாக அமைந்திருந்த திருவள்ளுவர் சிலை நேற்று இரவு திடீரென யாழ். மாநகர சபையினால் 'பைக்கோ' வாகனம் மூலம் இடித்து அகற்றப்பட்டது. சத்திரச் சந்தியில் அமைக்கப்பட்டுவரும் வீதிச் சமிக்ஞை விளக்குகளுக்கு இந்தச் சிலை இடைஞ்சலாக இருப்பதாகத் தெரிவித்தே அது நேற்றிரவு இடித்து உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட்டது. (த-17)

# 30 இந்திய மீனவர் கைது



யாழ்ப்பாணம், நவ.06
காங்கேசன்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாகத் தெரிவித்து இந்திய மீனவர்கள் 30 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
கடற்படையினரும் கடலோரக் காவல் படையினரும் இணைந்தே இவர்களை கைது செய்ததாகத்

### இடம்மாறியது வீடழிப்பு

யாழ்ப்பாணம், நவ.06
வலி.வடக்கின் உயர்பாதுகாப்பு வலய எல்லையுடன் உள்ள வீடுகள் இடித்தழிக்கப்பட்டு தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தினுள்ளே வீடழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
வலி.வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 6 ஆயிரத்து 382 ஏக்கர் நிலப்பரப்பையும் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.
இந்தப் பாதுகாப்பு வேலியின் எல்லை

# நாவற்குழியில் சிங்களவருக்கு விரைவில் காணி ஆவணங்கள்

## வீடமைப்பு அதிகார சபைத் தலைவர் வழங்குவார்

யாழ்ப்பாணம், நவ.06
நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கான காணிஆவணங்கள், கொழும்பிலிருந்து வருகை தரும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரினால் விரைவில் கையளிக்கப்படவுள்ளன என நம்பகரமாகத் தெரிய வருகின்றது.
கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ்.ரயில் நிலையத்தில் வந்திறங்கிய சிங்களக் குடும்

### முதலமைச்சரின் செயலாளர்கள் நியமிப்பு

யாழ்ப்பாணம், நவ. 06
வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் மற்றும் இணைப்புச் செயலாளர்கள், பிரத்தியேக செயலாளர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய நிலங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும்

## விவசாய அமைச்சர் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ.6
பொதுமக்களின் வளமான விவசாய நிலங்கள் மாத்திரமல்லாமல், வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சுக்கு உரித்தான பண்ணைகள் கூட இராணுவத்தினர் வசமே உள்ளன. வடக்கு மாகாணப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு இனிமேலும் தடையாக நிற்காமல் இந்த நிலங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடலும் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது விவசாயிகள் பாரம்பரிய வேளாண் முறைகளில் கை தேர்ந்தவர்கள். பாரம்பரிய விதைகள், விதைப்புக் காலம், அவற்றுக்கான இயற்கைப் பசளை என்பவை தொடர்பில் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இருப்பினும் இயற்கைச் சூழலுக்கும், காலத்துக்கும் ஒவ்வாத நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. பயிர்களுக்குத் தேவையான அளவு நீரிலும் பார்க்க பன்மடங்கு நீரையே இறைத்துக் கொண்டிருக்கின்றோம். நிலத்தடி நீர் வற்றாத வளம் என்ற எமது தவறான கணிப்பினால் நேர்ந்த அவலம். விவசாயத்துக்கு மாத்திரமல்லாமல் எந்தத் தேவைகளுக்காகவும் ஒரு சொட்டு தண்ணீரையும் வீணாகப் பயன்படுத்தக் கூடாது என்பதை நாம் உணர வேண்டும்.

உலகில் நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நாடுகள் தூவல் நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம் என்று மாற்று நவீன நீர்ப்பாசன உத்திகளைக் கையாளத் தொடங்கியுள்ளன. அது மாத்திரமல்லாமல் நீர் அதிகம் தேவைப்படாத பயிர்களை அடையாளம் கண்டு பயிரிடவும் ஆரம்பித்துள்ளன.

நாமும் நமது பாரம்பரிய விவசாய அறிவோடு நவீன விவசாயத் தொழில்நுட்பங்களையும், அறிவையும் உள்வாங்கினாலேயே எமது விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

விவசாயிகளை அறிவூட்டுவதற்கு விவசாயப் போதனாசிரியர்கள் உள்ளார்கள். இவர்களது அறிவை மேம்படுத்துவதற்கென சேவைக் காலப் பயிற்சி நிலையங்கள் நாட்டில் உள்ளன. ஆனால் இரணைமடுவில் உள்ள எமது மாகாண அமைச்சுக்குச் சொந்தமான எட்டு ஏக்கர் பரப்பளவு கொண்ட சேவைக்கால பயிற்சி நிலையத்தில் இராணுவமே நிலை கொண்டிருக்கின்றது.

இது மட்டுமல்ல, வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு சொந்தமான விதை உற்பத்திப் பண்ணை, தாய்த் தாவரப் பண்ணை, அலுவலகங்கள் என்று 400 ஏக்கர்களுக்கும் அதிகமான பரப்பளவை இராணுவம் தன் வசப்படுத்தி வைத்திருக்கின்றது. இந்த நிலையில் நாம் எமது விவசாயத்துறையை எவ்வாறு மேம்படுத்த முடியும்?

விடுதலைப் புலிகள் பயன்படுத்திய இடங்கள் எல்லாவற்றிலும், போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இராணுவம் நிலை கொண்டிருக்க வேண்டும் என்று அரசு நினைப்பது வீம்பான செயலே அன்றி வேறில்லை.

எனவே, இனிமேலாவது இராணுவத்தை எமது வேளாண்மை நிலங்களிலிருந்து வெளியேற்றி, வடக்கின் விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அரசு ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஜ-5)

# வலைப்பாடுக் கடலில் இழுவைப் படகில் மீன்பிடி

## 8 மீனவர்கள் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், நவ.6
பூநகரி வலைப்பாடு கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த குருநகர் மீனவர்களின் இரண்டு இழுவைப் படகுகளை அப்பகுதி மீனவர்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது.

குருநகர் பிரதேசத்தை சேர்ந்த 8 மீனவர்கள் இரண்டு இழுவைப் படகுகள் மூலம் வலைப்பாட்டுக் கடற் பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அவதானித்துவிட்டு உடனடியாகப் படகுகளில் அங்கு விரைந்த வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இந்த இரண்டு இழுவைப் படகுகளையும் சுற்றி வளைத்து மீனவர்களைப் பிடித்தனர்.

பின்னர் இந்த எட்டு மீனவர்களும் முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த தீபாவளி திருநாளுக்கு முதல் நாளும் இக்கடற் பகுதியில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த நான்கு படகுகளை மீனவர்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.. (கு-17)

# கூரையற்ற பஸ் நிலையத்தால் மழையில் நனைந்த பயணிகள்



யாழ்ப்பாணம், நவ.6
யாழ்.முற்ற வெளியில் அமைந்துள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் உள்ள கட்டடங்களின் மேற் கூரைகள் இல்லாமையால் மழைநேரங்களில் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். நேற்று இரவு மழை பெய்த வேளை அவர்கள் ஒதுங்க இடமின்றி அந்தரித்தனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யும் பயணிகள் முற்றவெளி பஸ் நிலையத்தில் மழையில் நனைந்த வாறே பஸ்களுக்காக காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு திடீரென பெய்த மழையினால் ஒதுங்குவதற்கு இடமின்றி பயணிகள் நனைந்து கொண்டிருந்ததையும் அவர்கள் நனைந்த நிலையிலேயே தமது பயணத்தைத் தொடர்ந்ததையும் அவதானிக்க முடிந்தது.

பஸ் நிலையத்தில் உள்ள கூரைகளுக்குப் போடப்பட்டிருந்த கூரைத் தகடுகள் அண்மையில் வீசிய கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டன. அவ்வாறு வீசப்பட்ட மேற்கூரைத்தகடுகளைப் பொருத்துவதற்கு யாழ்.மாநகர சபை இதுவரை உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமையே இந்த அவல நிலைக்குக் காரணம். இதனைப் புனரமைப்புச் செய்து தருமாறு பஸ் சாரதிகளும், நடத்துநர்களும் பல தடவைகள் மாநகர சபையினரிடம் கோரிக்கை விடுத்த போதும் அது நிறைவேற்றப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே இந்தபஸ்தரிப்பிடத்தை உடனடியாகப் புனரமைப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வடக்கு மாகாண முதலமைச்சரும் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-17-400)

# கோப்பாய் இரும்புக் கடையில் திங்கள் இரவும் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.06
கோப்பாய் சந்தியில் உள்ள மற்றுமொரு இரும்பு விற்பனை நிலையத்திலும் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

அங்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்த விற்பனை நிலையத்தின் கூரை ஓடுகளைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த மின் மோட்டர்கள், பெறுமதி வாய்ந்த வர்ணப்பூச்சுகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பவற்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை கடந்த இருவாரத்துக்கு முன்னரும் இதே பகுதியில் இரும்புக் கடை ஒன்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு-17)

# 'பாதை' பழுதடைந்ததால் பாதியில் திரும்பியது பஸ்

## குறிகாட்டுவானில் நேற்றுச் சம்பவம்



யாழ்ப்பாணம், நவ. 6
நயினாதீவுக்கு கொண்டு செல்லப்படவிருந்த இ.போ.ச. பஸ், 'பாதை' பழுதடைந்தமையால் மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

புதிதாக சேவையில் ஈடுபடுத்துவதற்காக குறித்த பஸ் குறிகாட்டுவானுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து 'பாதை' ஊடாக நயினாதீவுக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்றுக்காலை 8.15 மணியில் இருந்து பஸ்ஸுடன் பணியாளர்கள் காத்துநின்றனர். 'பாதை' பழுதடைந்து விட்டதாகவும் 12 மணியளவில் சீர்செய்து பஸ்ஸை கொண்டுசெல்ல ஏற்பாடு செய்து தருவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். மாலை வரை 'பாதை' சீர் செய்யப்படவில்லை. இந்த நிலையில் ஏமாற்றத்துடன் பஸ் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டது. (ஜ-7)

# மானிய முத்திரைக்கு மீன்பிடி உபகரணம்

## கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை

யாழ். குடாநாட்டு மீனவர்களுக்கான மானிய முத்திரைக்குக்கடற்றொழில் உபகரணங்களை விநியோகிக்கும் புதிய திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என் கணேசமூர்த்தி தெரிவித்தார்.

தற்போது மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானிய முத்திரைக்கான எரிபொருள் விநியோகம் இந்த மாதத்துடன் நிறுத்தப்படவுள்ளது.

எரிபொருளுக்குப் பதிலாக மானிய அடிப்படையில் மீனவர்களுக்குத் தேவையான கடற்றொழில் உபகரணங்களை விநியோகிப்பதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

குடாநாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 800 க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு மானிய முத்திரைக்கு எரிபொருள் விநியோகிக்கபட்டது.

இந்த எரிபொருளை மீனவர்கள் உரிய முறையில் பயன்படுத்தவில்லை. எரிபொருள் வீண் விரயமாக்கப்படுவதால் கடற்றொழில் அமைச்சுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது.

இதனால் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தி அதற்கு பதிலாகக் கடற்றொழில் உபகரணங்களை வழங்க அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கு-17)

# வீட்டுக்குத் தீ

உடுவில் தெற்கு ஈஞ்சடி வைரவர் ஆலயப் பகுதியில் வீடு ஒன்று தீப்பற்றியதில் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள் எரிந்து நாசமாகின. குறித்த வீட்டுக்கு யாரோ தீ வைத்தே கொழுத்தியதாக உரிமையாளரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

தீபாவளி தினத்தில் இரண்டு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து பழிவாங்கும் முயற்சியாகவே வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஜ-86)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடிச் சந்தியில் பாதீனியம்

தென்மராட்சி, நவ.6

கைதடிச் சந்தியில் பெருமளவு பாதீனியச் செடிகள் காணப்படுகின்றன. விஷப் பயிரான இவற்றை அழிக்க பிரதேச சபையினரும் கைதடி பொது அமைப் புகளும் முன்வர வேண்டும்.

கைதடி தனியார் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமாகி ஏ-9 வீதி, கோப்பாய் வீதி போன்ற இடங்களில் பெருமளவில் பாதீனியம் காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர். (வ-9)

## பஸ் தரிப்பிடம் இல்லாமையால் மக்கள் அவதி

தென்மராட்சி, நவ.6

கைதடிச் சந்தியில் ஏ-9 வீதியில் நீண்டகாலமாக இருந்து வந்த பஸ் தரிப்பிடம் வீதி அகலிப்பின் போது உடைக்கப்பட்டதால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் தரிப்பிடம் உடைக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் அது புதிதாக அமைக்கப்படாததால் மக்கள் ஒதுங்கி நிற்க இடமில்லாமல் மழையிலும் வெயிலிலும் நிற்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## சஞ்சிகை வெளியீடு

கைதடி, நவ.6

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் முதலாம் தர மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'ஆணிவேர்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையும் இரண்டாம் தர மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'ஆலம்சிட்டு' கையெழுத்துச் சஞ்சிகையும் இன்று புதன்கிழமை வெளியிடப்படவுள்ளன.

வித்தியாலய அதிபர் சி.சிவானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சர்வேஸ்வரன் கலந்து கொள்வார். (த-288-400)





# துர்நாற்றம் வீசும் நீர் வடிகான்கள்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியான சோனக தெரு, கல்லூரி வீதி, ஜின்னா வீதிகளில் நீர் வடிகான்கள் துப்புரவற்ற நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் மேலும் கூறுகையில்;

"முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் இந்தப் பகுதியில் உள்ள வடிகான்களில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் ஏற்படும் துர்நாற்றம் இந்தப் பகுதியில் பரவி சுவாசம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது. அத்துடன் நுளம்புப் பெருக்கம், வீடு மற்றும் ஹோட்டல்களின் கழிவு நீரின் தேக்கமும் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது.

இதனை வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் கவனத்தில் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

இது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்ததாவது:-

"இந்த விடயம் குறித்து எனக்கு தெரியப்படுத்தியமைக்கு நன்றி. இருப்பினும் இது யாழ்.மாநகர சபை நிர்வாகத்துக்குபட்ட விடயம். இது குறித்து யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் எம்.எம்.எம்.றமீஸ், மாநகர சபை உறுப்பினர் எம்.பி.எம்.சுபியான் ஆகியோரிடம் தொடர்பு கொள்வது சிறந்தது. நானும் இந்த நிலையில் இருந்து மீள்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவேன்" என்றார். (வ-10)

# மாகாண சபை மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்ப்போம்

### சாவற்காடு மக்களிடம் சித்தார்த்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.6

ஆனைக்கோட்டை சாவற்காடு பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாகாண சபையூடாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

சாவற்காடு மக்களுடன் அண்மையில் சந்திப் பொன்று இடம்பெற்றது. பிரதேச சபை உறுப்பினர் பரமகுரு தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மக்கள் தங்களது பிரதேசத்தில் தாம் அன்றாடம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர்களுக்குத் தெரி வித்தனர்.

இதன் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர்கள், தமக்கு வாக்களித்த மக்களுக்கு தங்களது நன்றிகளைத் தெரிவித்தனர்.

இந்த மாகாண சபைக்கு எந்தளவு நிதி கிடைக்கப் போகின்றது. எந்தளவு நிதி கைவசம் உள்ளது என்பது தொடர்பில் எதுவும் தெரியாது. அரசு மாகாண சபைக்கு எவ்வளவு நிதியை குறித்தொதுக்கும் என்று எதுவும் தெரியாது.

ஆனாலும் உங்களின் குறைபாடுகளையும், தேவைகளையும் நிவர்த்தி செய்ய எம்மால் முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் - சித்தார்த் தன். (ஒ-5)

### இந்திய புடைவை வியாபாரிகளுக்குத் தடை விதிக்குக

# வாணிப அமைச்சரிடம் சாவகச்சேரி வர்த்தகர்கள் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், நவ.6

சாவகச்சேரியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் இந்தியப் புடைவை வியாபாரி களைத் தடை செய்ய வேண்டும் என்று சாவகச்சேரி வர்த்தகர்கள் வட மாகாண வர்த்தக வாணிப அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வர்த்தகர்களுக்கும் வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மன்றத்தின் தலை வர் வ.ஶ்ரீபிரகாஸ் தனது உரையில், எங்களது வியாபார நடவடிக்கைகள் கடந்த ஆறு, ஏழு மாதங்களாகப் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

இந்த நிலையில் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பண்டிகைக்காக நடைபாதை வியாபாரிகள் இங்கு வந்து தங்களது வியாபாரத்தை மேற்கொள்வதால், இங்கு நிரந்தரமாக வியாபாரம் செய்யும் சாவகச்சேரி வர்த்தகர்கள் மேலும் பாதிப்பை எதிர் கொள்கின்றனர்.

எனவே இந்தியப் புடைவை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளை உடனடியாக தடைசெய்ய வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். (வ-5)

### சாவகச்சேரி மருத்துவமனையில்

# சிகிச்சை பெற பூநகரியில் இருந்து வருவோர் தொகை அதிகரிப்பு

தென்மராட்சி, நவ.6

பூநகரிப் பிரதேசத்திலிருந்து தினமும் பெருமளவு நோயாளர்கள் சாவகச்சேரி மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்வதைக் காணமுடிகிறது.

இது தொடர்பாக வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களிடம் 'பூநகரி பிரதேச மக்களுக்கென பிரதேச வைத்தியசாலை உள்ளது. அங்கு வைத்திய அதிகாரிகள் கடமை யாற்றுகின்றனர். இந்த நிலையில் ஏன் இந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெற வருகிறீர்கள் எனக் கேட்டபோது:

பூநகரி வைத்திய சாலைக்கு வைத்தியர் எந்த நேரம் வருவார் என்பது அங்கு வேலை செய்பவர்களுக்கே தெரியாத நிலை உள்ளது. எனவே நீண்ட நேரம் காத்திருப் பதை விட சாவகச்சேரி வைத்திய சாலைக்கு வந்தால் தொடர்ந்து கடமையாற்றும் வைத்தியர்களிடம் குறுகிய நேரத்தில் சிகிச்சை பெற்று வீடு திரும்பக் கூடியதாக உள்ளது" என அவர்கள் தெரிவித்தனர். (வ)

" "

**பூநகரி வைத்திய சாலைக்கு வைத்தியர் எந்த நேரம் வருவார் என்பது அங்கு வேலை செய்பவர்களுக்கே தெரியாத நிலை உள்ளது.**

# கொழும்பு வாசிகள் இருவருக்கும் பிணை: மூவரை மிரட்டி நிதி அறவிட்ட குற்றத்தில்

மட்டுவிலிலிருந்து கொழும்பு சென்ற மூவரைக் கடத்தி மிரட்டி 28 லட்சம் ரூபாவை அறவிட்ட நீர் கொழும்பைச் சேர்ந்த இருவரையும் சாவ கச்சேரி நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

இருவரையும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் இருவரின் கடவுச் சீட்டுக்களையும் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார்.

2011 ஆம் ஆண்டு மட்டுவில் மத்தியைச் சேர்ந்த குடும்பத்தினரின் மகன் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மகனை மீட்டுத் தருவதாக தொலைபேசியில் கூறி குறித்த தொகையுடன் வருமாறு அவ்விருவரும் கூறியுள்ளனர்.

அதை நம்பி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கொழும்பு சென்றவேளை அங்கு வைத்து அவர்களைக் கடத்தி மிரட்டி 28 லட்சம் ரூபாவை அறவிட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக குறித்த குடும்பத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இருவரையும் கடந்த மாதம் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிவானின் பணிப்பின் பேரில் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட அடையாள அணி வகுப்பில் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்த மூவரும் குறித்த இருவரையும் அடையாளம் காட்டியதையடுத்து நேற்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தார். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

வீடு வாடகைக்கு
கோண்டாவில் செல்வநாயகம் வீதியில் சகல வசதியுடன் உள்ள வீடு வாடகைக்குண்டு
தொடர்பு : சிவம், 0757278504

பொதுநலவாய மாநாடு தொடர்பில்

# மத்திய அரசைக் கண்டித்து நவ.8இல்ஆர்ப்பாட்டம்

## சரத்குமார் அறிவிப்பு.

சென்னை, நவ.6

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடு விவகாரத்தில் மத்திய அரசின் போக்கைக் கண்டித்து சமத்துவ மக்கள் கட்சி எதிர்வரும் 8 ஆம் திகதி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை நடத்தும் என்று அந்தக் கட்சியின் தலைவர் சரத்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளைத் தொடர்ந்து இலமுஉங்கைக அரசின் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

தமிழகசட்டசபையில் முதலமைச்சர் இதை வலியுறுத்தி வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி உலகத்தமிழர்கள் அனைவரது ஒட்டுமொத்த உணர்வுகளை உலகுக்கு உணர்த்தியுள்ளார். இரண்டு தினங்களுக்கு முன்பாக சனல் 4 இல் ஒளிபரப்பப்பட்ட இசைப்-பிரியாவின் கொடூர உயிரிழப்புகல் மனங்களைக் கூட கரைய வைப்பதாக இருக்கும் போது மத்திய அரசின் மெத்தனம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாக உள் ளது.

எனவே மத்திய அரசின் போக்கைக் கண்டித்தும் இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமரும் இந்தியாவின் பிரதிநிதிகளும் பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தமிழ கத்தின் அனைத்து மாநக ராட்சிகளிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்- என்றுள்ளது.(வ)

# எரி காயங்களுக்கு இலக்கான குடும்பப் பெண் நேற்று சாவு

தென்மராட்சி, நவ.06

எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண் சிகிச்சை பயனின்றி நான்கு நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த இந்தக் குடும்பப் பெண் கடந்த வெள்ளிக்கிழமை குப்பை எரிப்பதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்த போது உடையில் தீப்பற்றி எரிந்ததால் உடனடியாக யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த ஜஸ்ரின் டெய்ஸி (வயது -38) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சாவு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். யாழ் நீதிமன்ற நீதிவான் மூலம் சடலத்தைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-9-4)

# விஷமிகளால் சேதமாக்கப்பட்ட வர்த்தக நிலையம்

மந்துவில் கிழக்கு சின்னச் சந்தையில் நீண்டகாலமாக இயங்கிவந்த வர்த்தக நிலையமொன்று நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு கடையை மூடிவிட்டு வீடு சென்று காலையில் வந்து பார்த்தபோது கடை சேதமாக்கப்பட்டிருந்ததைக் கண்டு வர்த்தகர் அதிர்ச்சியடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னையா
பொன்னம்மா

மலர்வு
16.02.1944

உதிர்வு
18.10.2012



பாசத்தின் உறைவிடமாய் திகழ்ந்து
எல்லோர் மனதிலும் நிறைந்தவரே
ஓராண்டு சென்றாலும் உம் நினைவுகளை
நெஞ்சில் சுமந்து பிரார்த்திக்கின்றோம்.

மருதங்கண்டு,கரவெட்டிகிழக்கு,
கரவெட்டி.

உங்கள் பிரிவால்
துயருறும்
குடும்பத்தினர்.

(3.5.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் கதிர்காமு



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமு பூரணம் நேற்று (05.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அன்னப் பிள்ளை, நாகம்மா, சின்னத்தம்பி, வல்லிபுரம் மற்றும் கந்தவன், தங்கம்மா, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயகுமாரன், ஜெயக்குமாரன், விமலகுமாரன், அற்புதமலர், அற்பு தராணி, அற்புதலீலா, அற்புதலதா ஆகியோரின் அன்புத் தாயும், இரஞ்சிதமலர், செல்வராணி, வனிதா,அருணாசலம், ஸ்ரீகாந்தன், நவரத்தினம், கலைச்செல்வன், ஆகியோரின் அன்பு மாமியும், வனிதா, சிவகுமார், முஜிந்தா, கரிகரன், மாதங்கி, திலிபன், அபிரா, அதிரதன், அபர்ணா, சாரங்கன், சாந்தனா, சாலவன், அங்கவின், வித்தகன், ஆரூதன், அம்புஜன், ஆரபி, கோபிநாத், விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அறிவகன், அம்சனா, அதிஸ்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமாலை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு.

தகவல்:குடும்பத்தினர்.
021 2050481, 0212050445

(29595.14.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
15.03.1938

இறப்பு
07.10.2013

### அமரர் சின்னப்பொடி தங்கத்துரை JP

(ஓய்வு பெற்ற சாலைப் பரிசோதகர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை)

பெற்றோருக்கு நல்ல பிள்ளையாய்
மனைவிக்கு அன்புத் துணையாய்
பிள்ளைகளுக்கு நல் வழிகாட்டியாய்
சமூகத்துக்கு சேவகனாய்
தேசத்தின் விசுவாசியாய் வாழ்ந்து
வானுறை தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வத்தை
என்று நாம் காண்போம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (05.11.2013) செவ்வாய்க்கிழமை கன்னியா புனித நீரூற்றில் நடைபெற்றது. சபிண்டீகரண கிரியைகள் இன்று (06.11.2013) புதன்கிழமை திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

குறிப்பு:- அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் யாழ்ப்பாணத்தில் பிறிதொரு தினத்தில் நிகழவுள்ளது.

255/15, 1ஆம் ஒழுங்கை,
லிங்கநகர், திருகோணமலை.

(13568.14.17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கெஸ்ரன் யெய்சி

(எக்காளத் தொனி பூரண சுவிசேஷ சபை, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட யெய்சி கெஸ்ரன் (மெலித்தா கிருஸ்தவ சங்கம்) நேற்று (05.11.2013) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் பூபாலசிங்கம் கெஸ்ரனின் அன்பு மனைவியும், ஜெக்சன் (மாணவன் சென் பற்றிக் கல்லூரி), ஜெலஸ்ரினா (மாணவி, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி ) கரோளின் (மாணவி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், திரு.திருமதி யோசப்பின் அன்பு மகளும், திரு.திருமதி பூபாலசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், யோன்சன் (பிரான்ஸ்), ஷகிலா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெரோம், யோதினி (பிரான்ஸ்), ஜெகதீஸ் (தேவ ஊழியர், எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை, வவுனியா), ஜெரின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குயின் செல்வி,கிறிசாந்தன் (தேவ ஊழியர் எக்காளத் தொனி பூரண சுவி சேச சபை, மெலித்தா கிருஸ்தவ சங்கம்), லிங்கம் (பிரான்ஸ்), றூபி (வவுனியா), தர்மேந்திரா (பிரான்ஸ்), ஜோன்மதன் (தேவ ஊழியர், மாரநாதா சுவிசேஷ சபை), றூபன், அகிலன் , சுபாஷினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (07.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

50, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.
077 9198285, 077 8703596

தகவல்:
கணவன்

(29595.14.17)

## மரண அறிவித்தல்

### கிளமென்ற் மோசேஸ்

(கார் உரிமையாளர் - PL 7986)



பலாலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கிளெமன்ற் மோசேஸ் நேற்று முன்தினம் (04.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிளெமன்ற்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், நிர்மலா, வசந்தி ஆகியோரின் அன்புச் தந்தையும், செல்வம், விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற உஸ்தீனத்தின் அன்புச் சகோதரனும், நீற்றா, சில்வின் ஆகியோரின் அன்புத்தாய் மாமனும், சுலக்ஷன், றொஜிஸ்ரன், றகேஷன், றயுமின், ஜொனிலி (A.O.G திருச்சபைப் போதகர்- உடுப்பிட்டி), யூடித் கஜானி ஆகியோ ரின் செல்லப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (06.11.2013) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வல்லை சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேதக் கோயிலடி, யாழ் வீதி,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 39690644

(29595.14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டியில் 166 குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள்



வடமராட்சி, நவ.6

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் நாலாம் கட்டமாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கரணவாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 166 குடும்பங்களுக்கு பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் கீழ் தேசி, மாதுளை, கொய்யா போன்ற பழமரக் கன்றுகள் கரணவாய் தெற்கு சமுர்த்தி அலுவலகத்தில் வைத்து கரவெட்டி பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (வ-8)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் தொடர்ந்து இழுபறி நிலையில்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இந்த மாதத்துக்குள் நடத்தப்படலாம். ஆயினும் கூட்டத்துக்கு யார் தலைமை வகிப்பார்கள் என்பது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரச அதிபர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம்பெற்றது.

அதில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் கலந்துரையாடி முடிக்கப்படாமை காரணமாக நவம்பர் மாதம் இரண்டாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்திலும் தேவையான விடயங்கள் முழுமையாக கலந்துரையாடல் நடத்தி முடிக்கப்படாமையால் மூன்றாவது கூட்டம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அது இன்று வரை நடத்தப்படவில்லை.

இந்த நிலையில் இந்த வருடம் நடத்தப்பட வேண் டிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இந்த மாத இறுதிக்குள் நடத்தப்படலாம் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

கூட்டம் நடத்தப்பட்டால் அதன் தலைமைப் பொறுப்பை யார் வகிப்பார்கள் என்று அவரிடம் கேட்கப்பட்ட போது அது தொடர்பில் இப்போது எதுவும் சொல்ல முடியாதென்று அவர் தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரே இதுவரை காலமும் இருந்து வந்தனர்.

வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் முதலமைச்சராக உள்ள நிலையில் அவருக்கு இணைத் தலைமை வழங்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (த-5)

"–"

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரே இதுவரை காலமும் இருந்து வந்தனர்.

### சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக

# ஐரோப்பிய ஒன்றியம் வடக்குக்கு உதவி

யாழ்ப்பாணம், நவ.6

வடக்கின் சுற்றுலாத்துறை மேம்பாட்டினூடான பொருளாதார வளர்ச்சிக்கு தாம் உதவவுள்ளதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதர் டேவிட் டெய்லி உறுதியளித்துள்ளதாக, வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.



யாழ்.மாவட்டத்துக்கு பயணம்மேற்கொண்ட இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டேவிட் டெய்லிக்கும், வட மாகாண சபையின் சுற்றுலாத்துறைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனுக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை இரவு சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து கஜதீபன் தெரிவிக்கையில்:

இலங்கை அரசு வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக வினைத்திறனான திட்டங்களை முன்னெடுக்கவில்லை. இதனால் சுற்றுலாத்துறை வளர்ச்சி என்பது வடக்கில் மந்தமாகவே உள்ளது. எதிர்காலத்தில் இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

தமிழ் மக்களது தொல்லியல் சின்னங்களை, பிரதேசங்களை உரிய முறையில் அடையாளப்படுத்து வதனூடாக சுற்றுலாத்துறையை விருத்தி செய்ய முடியும். சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய தொழில்களுக்கு தமிழ் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பவை உள்ளிட்ட விடயங்களை ஐரோப்பிய ஒன்றியத் தூதுவருக்கு எடுத்துரைத்தேன். அதற்கு அவர், நிச்சயமாக வடக்கின் சுற்றுலாத் துறைக்கு தம்மாலான உதவிகள் வழங்கப்படும் என்று தெரிவித்தார் - என்றார். (ஜ-5)

### மழைக் காலம் தொடங்கிவிட்டது

## மின்சாதனங்களை மிகவும் அவதானமாகக் கையாளவும்

யாழ்ப்பாணம், நவ.6

பருவகால மழை ஆரம்பித்துள்ளதால் மின் சாதனங்களை கையாள்வதில் அவதானிப்புடன் செயற்படுமாறு இலங்கை மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

குடாநாடு முழுவதும் தற்போது மின் இணைப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ள நிலையில் மின் பாவனையாளர்களது எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தற்போது பருவகால மழை ஆரம்பித்துள்ளதால் இடி, மின்னல் தாக்கத்தால் மின்சார உபகரணங்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம். எனவே இடி, மின்னல் ஏற்படும் வேளைகளில் மின் உபகரணங்களை அவதானமாகப் பயன்படுத்த வேண்டும்.

அதேசமயம் களவாக மின் இணைப்புக்களை மேற்கொள்பவர்கள் உயிராபத்துக்களையும் சந்திக்க நேரிடலாம். சட்ட ரீதியாக மின் இணைப்புக்களைப் பெற்றவர்களும் இத்தகைய செயல்களால் பாதிப்புக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படலாம்.

எனவே மின் உபகரணங்களை பயன்படுத்துவோர் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தியுள்ளனர் மின்சார சபையினர். (ஒ-14)




## தேங்காய் திருடனுக்கு 14 நாள் மறியல்

தென்மராட்சி, நவ.6

உசன் பகுதி தென்னந்தோட்டமொன்றுக்குள் அத்து மீறி உள்நுழைந்து 18 தேங்காய்களை திருடிய கெற் பேலி வாசியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றம் உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9)



தீபாவளிப் பண்டிகையை பயனுள்ளவாறு கொண்டாடும் நோக்கில், யாழ்.இந்துக் கல்லூரியின் பாடலாக்கக் குழுவினரான யாழ்.இந்து மாணவர்கள், "வாழ்வகம்" மற்றும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவ சிறுவர் இல்லம் ஆகிய இடங்களில் பண்டிகையைக் கொண்டாடியுள்ளனர். யாழ்.இந்து இளைஞர்களின் உருவாக்கத்திலான "தீபாவளி" தொடர்பான சிறுவர் பாடல்கள் இந்த நிகழ்வில் இசைக்கப்பட்டன. மாணவர்கள் வீண் பொழுது போக்காமல் இது போன்ற சமூக அக்கறையுள்ள பணிகளில் ஈடுபட்டு வருவது பாராட்டப்படத்தக்கது. (ஒ-10)

## 'பொக்கற்' அடித்தவன் ஓடித் தப்பினான்

தென்மராட்சி, நவ.6

மருந்து வாங்குவதற்கு குவிந்திருந்த மக்களிடம் 'பொக்கற்' அடித்த திருடனை பொதுமக்கள் மடக்கிப் பிடிக்க முற்பட்ட வேளையில் அவர்கள் மீது கற்களை வீசிவிட்டு ஓடித் தப்பினான்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் இடம்பெற்றது.

மருந்து வாங்க வந்த ஒருவரின் சட்டைப் பையிலிருந்து பணத்தைத் திருடிய போது அங்கு நின்ற வைத்தியர் கண்டு சத்தமிட்டதால் திருடிய பணத்தை எறிந்து விட்டு தப்பியோடினான் திருடன். எனினும் திருடனை அங்கு நின்றவர்கள் துரத்திச் சென்றுள்ளனர்.

ஆயினும் அவர்கள் மீது கற்களை வீசித் தாக்கி விட்டு அங்கிருந்து டச்சு வீதி வழியாக திருடன் தப்பி விட்டான் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

# பெண்ணை உதைத்து வீழ்த்தி 2 லட்சம் ரூபா கொள்ளை

## பட்டப் பகலில் நவாலியில் சம்பவம்

நவாலி, நவ.6

வங்கியில் இருந்து பணத்தை எடுத்துச் சென்றவரிடமிருந்து 2 லட்சம் ரூபாவை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத்துணிகரக் கொள்ளை நேற்று முன்தினம் நண்பகல் மானிப்பாய் நவாலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நவாலிப் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் [illegible] பெற்று அதனைத் தனது சைக்கிளின் முன்கூடைக்குள் வைத்துக் கொண்டு வீடு நோக்கிச் சென்றுள்ளார்.

இவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரைக் காலால் உதைத்து சைக்கிளுடன் மழை வெள்ளத்துக்குள் வீழ்த்திவிட்டு கூடையில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு தப்பி விட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-100-400)

## மாடுகளை ஏற்றிச்சென்ற இருவர் கைது

தென்மராட்சி, நவ.6

மாடுகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

மறவன்புலோ மற்றும் அராலி தெற்கைச் சேர்ந்த இருவருக்கு எதிராக மிருகங்களை சித்திரவதை செய்யும் விதத்தில் வாகனத்தில் ஏற்றிச் சென்றதாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை நேற்று விசாரித்த நீதிவான் இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் அத்துமீறுகின்றது சீனா

## குற்றஞ் சாட்டுகின்றது இந்தியா

லடாக், நவ.6

இந்திய எல்லைப் பகுதியான லடாக்கில் இந்திய விமானங்களை கண்காணிக்கும் ரேடர் நிலையம் ஒன்றை சீனா அத்துமீறி அமைத்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளது இந்தியா.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே உள்ள தவூலத்பெக்கில் விமானத் தளத்தில் தரையிறங்கும் இந்திய விமானங்களைக் கண்காணிக்கும் நோக்குடனேயே இந்த ரேடர் நிலையத்தை சீனா அமைத்து வருகின்றது என்றும் இந்தியா மேலும் தெரிவித்துள்ளது.



இதுகுறித்துக் கடும் விசனம் தெரிவித்துள்ள இந்தியா "எல்லைப் பிரச்சினை தொடர்பாக அண்மையில் பேச்சுக்கள் நடத்தப்படிருக்கும் நிலையில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளமை கவலை தருகின்றது" என்று தெரிவித்துள்ளது.

எனினும் தாம் அமைத்துள்ளது வானிலை மையமே என்று சீனா விளக்கம் அளித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் தவூலத்பெக் விமானத் தளத்தில் இந்தியாதனது ஹெர்குலக்ஸ் விமானத்தை நிறுத்தியமைக்காக சீனா கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.(ற)

## மக்ரேக்கு விஸா இல்லை – இந்தியா




சென்னை. நவ.6

இலங்கையில் நிகழ்ந்த இனப் படுகொலைகளை காணொலிகள் மூலம் வெளி உலகுக்குக் கொண்டு வந்த சனல்-4 தொலைக்காட்சி ஊடகவியலாளர் கெலும் மக்ரே இந்தியா வருவதற்கு விஸா மறுக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நவம்பர் 7ஆம் திகதி லாபநோக்கற்ற அமைப்பு ஒன்று ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இந்தியா வருவதற்கு கெலும் மக்ரே திட்டமிட்டிருந்தார். எனினும் கெலும் மக்ரேக்கு விஸா வழங்குவதற்கு இந்திய அரசு மறுத்துள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் இடம் பெற்ற படுகொலைகள், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் கொல்லப்பட்டமை முதல் இறுதியாக விடுதலைப் புலிகளின் செய்தித் தொடர்புப் பிரிவில் பணியாற்றிய இசைப்பிரியா கொல்லப்பட்டமை வரையான அனைத்தையும் காணொலிகள் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த சனல் 4 தொலைக் காட்சி ஊடகவியலாளரான மக்ரேக்கு விஸா மறுக்கப் பட்டுள்ளமை இந்தியாவில் உள்ள தமிழின உணர்வாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



இந்திய கடற்படையுடன் இணைந்து கூட்டுப் பயிற்சி மேற்கொள்வதற்காக அமெரிக்க போர்க் கப்பலான "யுஎஸ்எஸ் மெக்கம்பெல் 320" அமெரிக்க இராணுவத்தினருடன் சென்னைத் துறைமுகத்துக்கு வந்துள்ளது. 5 நாள்கள் நடைபெறவுள்ள இந்தக் கூட்டுப் பயிற்சி நாளை ஆரம்பமாகின்றது. இது ஹெலி கொப்டர் இறங்குதளம் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட போர்க்கப்பலாகும். (ற)

# சிறுபிள்ளைத்தனமாக நடக்கிறது காங்கிரஸ்

## கிண்டலடிக்கின்றார் மோடி



பாட்னா, நவ.6

தேர்தல் கருத்துக் கணிப்புகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கோருவது சிறுபிள்ளைத்தனமானது என்று குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி கிண்டலடித்துள்ளார்.

இது தொடர்பாக தனது வலைத்தளத்தில் கருத்துத் தெரிவித்துள்ள மோடி,

"தோல்விகுறித்தபயம்காரணமாக காங்கிரஸ் என்ன பேசுகின்றது என்று தெரியாமல் பேசி வருகின்றது. கருத்துக் கணிப்புகளுக்கு தடைவிதிக்கக்கோரும் காங்கிரஸ், எதிர்காலத்தில் தேர்தல் கட்டுரை, தலையங்கம் போன்றவற்றைக்கூட தடை செய்யக் கோரலாம். இது ஓர் சிறுபிள்ளைத் தனமாக செயல்.

இந்தியாவின் சுதந்திரத்திற்கு பின்னர் காங்கிரசின் நடவடிக்கைகளை கவனித்து வருபவர்களுக்கு, அக்கட்சியின் நிலைப்பாடு ஆச்சரியம் அளிக்காது. ஜனநாயக விரோதமாக செயற்படும் காங்கிரஸ் கட்சியை மக்கள் தேர்தலில் நிராகரிப்பது தான் சரியானதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# வாக்களிக்கும்போது விரலில் மை வேண்டாம்

## தீவிரவாதிகள் அச்சுறுத்தலால் பொதுமக்கள் கோரிக்கை

பிஜப்பூர், நவ.6

சட்டசபை தேர்தலில் வாக்களிக்கும் போது விரல்களில்மைஅடையாளம்வைக்க வேண்டாம் என்று சத்தீஷ்கர் மாநில மக்கள் கோரியுள்ளனர்.



சத்தீஷ்கர் மாநிலத்தின் 8 மாவட்டங்களில் எதிர்வரும் 11 ஆம்திகதி முதற் கட்ட சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அந்த மாவட்டங்கள் அனைத்திலும் நக்சல்களின் ஆதிக்கம் அதிகம் உள்ளன. அங்குள்ள நக்சல்கள், "தேர்தலில் யாரும் வாக்களிக்கக் கூடாது. மீறி வாக்களித்தால், கையில் மை இருப்பதை பார்த்தால் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவர்களது விரலை துண்டிப்போம்" என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதையடுத்தே அந்தப் பகுதி மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் தேர்தல் ஆணையத்துக்கு அளித்துள்ள மனுவில், "நக்சல்கள் மிரட்டலுக்கு அஞ்சாமல் நாங்கள் வாக்களிக்கின்றோம். ஆனால் எங்கள் விரல்களில் மை அடையாளம் இட வேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# ஜார்க்கண்டில் மீட்கப்பட்டன சக்தி வாய்ந்த 9 குண்டுகள்

ராஞ்சி, நவ.6

பாட்னா தாக்குதலில் பயன்படுத்தப்பட்டவை போன்ற 9 வெடிகுண்டுகள் ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

ஹிண்ட்பிரி என்னுமிடத்தில் உள்ள விடுதி ஒன்றில் இருந்து இந்தக் குண்டுகள் கைப்பற்றப்பட்டன என்று ஜார்க்கண்ட் பொலிஸார் கூறுகின்றனர்.

> இந்தக் குண்டுகள் பாட்னா குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகளைப் போன்று வடிவமைக் கப்பட்டுள்ளன.

பாட்னா குண்டுவெடிப்பு தொடர்பாக கடந்த மாதம் 30ஆம் திகதி கைது செயயப்பட்ட உஜ்ஜைர் அகமத் அளித்த தகவலின் பேரில் இந்த வெடிகுண்டுகள் கைப் பற்றப்பட்டுள்ளன.

உரிய நேரத்தில் வெடிகுண்டுகள் கண்டெடுக்கப் பட்டு செயலிழக்கச் செய்யப் பட்டதால் பேராபத்து தவிர்க் கப்பட்டது என்று ஜார்க்கண்ட் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இந்த குண்டுகள் பாட்னா குண்டுவெடிப்பில் பயன் படுத்தப்பட்ட வெடிகுண்டுகளைப் போன்று வடிவமைக் கப்பட்டுள்ளன என்று கூறப் படுகின்றது. அதேவேளை பாட்னா குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட் டுள்ள குற்றவாளியான இம் தியாஸ் அன்சாரி ராஞ்சி யைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பிரணாப்புடன் ஆந்திர தலைவர்கள் சந்திப்பு

பாட்னா, நவ.6

ஆந்திரா சென்றுள்ள இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப்முகர்ஜியை, தெலுங்கானா எதிர்ப்பாளர்களும், ஆதரவாளர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, ஆந்திராவை இரண்டாகப் பிரிக்க சீமாந்த்ரா பகுதியினர் எதிர்ப்பு தெரிவித்தனர். அரசமைப்புச் சட்டத்தை தலைகீழாகப் புரட்டிப்போடும் வகையில் மத்திய அரசு செயற்படுவதாக அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.(ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு

நியூஜெர்ஸி, நவ.6

அமெரிக்காவின் நியூஜெர்ஸி மாகாணத்தில் உள்ள வணிக வளாகம் ஒன்றுக்குள் புகுந்த ஒருவர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சூட்டுச் சம்பவத்தால் உயிரிழப்புகள் ஏற்படதாக இதுவரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. சம்பவம் நடந்த இடம் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (ற)



தென்கொரியத் தலைநகர் சியோலில் நடைபெற்ற சர்வதேச விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கண்காட்சியில் தற்காப்புக் கலைத் திறன்களை வெளிக்காட்டும் தென்கொரிய இராணுவ சிறப்புப் படைப் பிரிவினர். (ற)

## அமைதிப் பேச்சுகளில் பங்கேற்போம் – சிரியா

டமஸ்கஸ், நவ.6

ஜெனிவாவில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுகளில் சிரிய அரசு பங்கேற்கும்என்று அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர்.

"அரசுக்கும் - கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுகளில் சிரிய அரசு கலந்துகொள்ளும். சிரியாவில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதில் எமது அரசு உறுதியாக உள்ளது. ஆனால் ஆயுதம் ஏந்திய குழுக்களுக்கு சர்வதேச நாடுகள் வழங்கி வரும் ஆயுத உதவிகள் அதற்குத் தடையாக உள்ளது. எனவே அவை ஆயுத உதவிகள் வழங்குவதைநிறுத்தவேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# எகிப்தின் சட்டபூர்வ ஜனாதிபதி நானே

## நீதிமன்றில் முர்ஸி உறுதிபடத் தெரிவிப்பு

கெய்ரோ, நவ.6

எகிப்தின் சட்டபூர்வ ஜனாதிபதி நானே. எனவே கைதி உடை அணிய முடியாது என்று நீதிமன்றில் உறுதிபடத் தெரிவித்துள்ளார் முகமது முர்ஸி.

2011ம் ஆண்டு எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நாட்டு அரசியலில் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட முகமது முர்ஸி, அதன்பின் 2012 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்று எகிப்தின் சட்டப்பூர்வ ஜனாதிபதியானார்.

அதன் பின்னர் அவருக்கெதிரான போராட்டங்கள் வெடித்ததை அடுத்து கடந்த ஜூலை மாதம் எகிப்து இராணுவத்தால் அவர் பதவி விலக்கப்பட்டார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் அவர் கெய்ரோ நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

கைதி உடை அணியாது, சாதாரண உடையில் நீதிமன்றம் வந்த முர்ஸி, "நான் தான் முகமது முர்ஸி. எகிப்து குடியரசின் ஜனாதிபதி" என்று நீதிமன்றில் கம்பீரமாகத் தெரிவித்தார்.

"எனது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஆட்சிக் கவிழ்ப்பு சட்டப்படி குற்றமாகும். அந்த குற்றத்தை செய்தவர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். சதிசெய்தவர்களை காப்பாற்ற நீதிமன்றம் முயற்சிக்க கூடாது. எகிப்து ஜனாதிபதியான என்னால் கைதிகளுக்கான உடையைஅணிய முடியாது." என்று நீதிமன்றில் வாதிட்டார். வழக்கு எதிர் வரும் ஜனவரி மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது. (ற)

# எட்வேர்ட் ஸ்நோடனுக்கு பொதுமன்னிப்பு கூடாது

## அமெ. நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர்கள் கோரிக்கை

வொஷிங்டன், நவ.6

நாட்டின் உளவு நடவடிக்கை தொடர்பான இரகசிய ஆவணங்களை அம்பலப்படுத்திய ஸ்நோடெனுக்கு பொது மன்னிப்பு வழங்கக்கூடாது என்று அமெரிக்க உளவுப் பணிகளுக்கான நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க செனட் அமைப்பின் உளவுப் பணிகளுக்கான குழுத் தலைவர்களில் ஒருவரான டயானி ஃபெய்ன்ஸ்டீன் கருத்துத் தெரிவிக்கும் போது,

"பொதுமன்னிப்புப் பெறுவதற்கான வாய்ப்பை எட்வேர்ட் ஸ்நோடென் இழந்து விட்டார். இரகசிய ஆவணங்களை அவர் கைப்பற்றிய பின்னர், செனட் உளவுப் பணிக்குழுவிடம் அவற்றைக் கையளித்திருக்க வேண்டும்.

அந்த ஆவணங்களை ஆராய்ந்து நாம் உரிய நடவடிக்கைகளை எடுத்திருப்போம். ஆனால் அது நடைபெறவில்லை. எனவே அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கும் பேச்சுக்கே இடமில்லை" - என்று தெரிவித்தார்.

பிரதிநிதிகள் சபையின் உளவுப் பணிக்குழுத் தலைவரான மைக் ரோஜஸூம் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். "அவர் (ஸ்நோடென்) ஆவணங்களை திருடியதற்கும், இரகசியக் காப்புப் பிரமாணத்தை மீறி இரகசியங்களை வெளிப்படுத்தியதற்கும் பொறுப்பேற்றே ஆக வேண்டும்" என்று ரோஜஸ் கூறியுள்ளார். (ற)

# அமெரிக்காவுக்கு எதிராக ஈரானில் ஆர்ப்பாட்டம்




தெஹ்ரான், நவ.6

அமெரிக்காவுக்கு எதிராக ஈரானில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் டெஹ்ரான் அணுஉலை தொடர்பாக அமெரிக்காவுடன் சமரசப் போக்கை கடைப்பிடித்துவருவதாக ஈரான் அரசுக்கு எதிராக அவர்கள் கோஷமிட்டனர்.

ஈரானில் 1979ஆம் ஆண்டு நடைபெற்ற இஸ்லாமியர்களின் புரட்சியைக் குறிக்கும் வகையில் ஆண்டு தோறும் அமெரிக்க எதிர்ப்பாளர்கள் இந்தத் தினத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மிக அதிகமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஈரான் உயர் அதிகாரத் தலைவர் அயதுல்லா அஹ்மேனி கூறுகையில், "அணு உலை தொடர்பான முக்கிய பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அவற்றில் யாராலும் எவ்வித பின்னடைவையும் ஏற்படுத்த முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## 40 சதவீத சிரியர்களுக்கு உதவி தேவை

நியூயோர்க், நவ.6

சிரிய மக்கள் தொகையில் 40 சதவிகிதம் பேருக்கு மனிதநேய உதவிகள் தேவைப்படுகின்றன என்று ஐ.நா.சபையின் மனிதநேய குழுவின் தலைவர் வலேரி அமோஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"சிரிய மக்களின் நிலை வேகமாக மோசமடைந்து வருகின்றது. மனிதநேய அமைப்புகள் சிரியாவுக்கு சென்று உதவ முன்வந்துள்ளபோதும், சிரிய அரசு மற்றும் கிளர்ச்சியாளர்களிடம் அனுமதிபெறவேண்டியிருப்பதால் அவை தாமதமடைந்து வருகின்றன" என்று தெரிவித்துள்ளார். (ற)



ஜேர்மனியில் இரண்டாம் உலகப் போரின் போது (1939 - 1945) பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் அவ்வப்போது கிடைத்து வருகின்றன. சிலவேளைகளில் அதிக எடை கொண்ட ராட்சத குண்டுகளும் கிடைப்பதுண்டு. அதேபோன்று முக்கிய தொழில் பிரதேசமான ரூர் மாகாணத்தில் 4 ஆயிரம் பவுண்ட் எடை கொண்ட குண்டு ஒன்று கிடைத்தது. இந்த குண்டை செயலிழக்க வைக்கும் முயற்சியில் வெடிகுண்டு நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர். அதற்காக அருகில் வசிக்கும் 20 ஆயிரம் மக்கள் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாடு நடைபெறும்வேளை கொழும்பிலும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.6

கொழும்பில் பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள நிலையில் பொது எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித் துள்ளன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் 13ஆம், 14 ஆம் திகதிகளில் கோட்டை ரயில் நிலையம், சுதந்திர சதுக்கம் ஆகிய முக் கியமான இடங்களில் நடத்தப்பட வுள்ளன. இப்போராட்டமானது, வடக்கு தமிழர்களின் பிரச்சினைகள், அர சியல்கைதிகள், காணா மற் போனவர்கள் தொடர்பிலான விசா ரணைகள் மற்றும் அரசின்அசமந்தசெயற் பாடுகள் போன்ற வற்றை பொது நல வாய மாநாட்டுக்கு வருகை தரவிருக் கும் சர்வதேசத் தலை வர்களுக்கு விளக்க மளிக்கும் வகையி லேயே நடைபெற வுள்ளதாகத் தெரிய வருகிறது.

13 ஆம் திகதி பகல் கோட்டை ரயில் நிலை யத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்ப மாகவுள்ளது.

14 ஆம் திகதி காலை யில் கொழும்பு- 7 இல் அமைந்துள்ள சுதந்திர சதுக்கத் திற்கு முன்பாக ஆர்ப் பாட்டம் மீண்டும் நடைபெறும்.

இதில் முக்கியமாக நாட்டில் நிலவும் மனித உரிமைமீறல் கள் மற்றும் மக் களின் வாழ்வாதாரச் சிக்கல்கள் தொடர் பில் கவனம் எடுக்கப் படவுள்ளது. (ச-சி)


**வயற்காணி விற்பனைக்கு**

சுன்னாகம், ஐயனார் கோயிலுக்குப் பின் புறமாகவுள்ள 36 பரப்பு கிணற்றுடன் கூடிய வயற்காணி முழுமை யாகவோ அல்லது பிரித்தோ விற்கப்படும்.

தொடர்பு:077 718 6233

**துன்பம் தீர அருள் வாக்கு வெள்ளவத்தை அருள் மிகு நாகபூசணி அம்மன் ஷேஸ்த்திரம், நாகபூசணி அம்மா அவர்கள் யாழ் வருகிறார்**

திருமணத்தடை, கல்வித்தடை, தொழில்தடை, நோய், நாகதோஷம், குழந்தைப் பேறு இல்லாதவர்கள், ஏனைய துன்பம் உள்ளவர்கள் வந்து அருள் வாக்கு கேட்கலாம். அருள் வாக்கு கூறப்படும் திகதி 09.11.2013 இல் இருந்து 11.11.2013 வரை அருள் வாக்கு கூறப்படவுள்ளது. நேரம்: காலை 10.30-12.00 மணி வரை, மாலை 4.30-6.00 மணி வரை. 11.11.2013 அன்னதானம் நடைபெறவுள்ளது. யாழ். ஆலய முகவரி:

2 ஆவது ஒழுங்கை, ... வீதி. (... முன் ஒழுங்கை), திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 801 2226

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கியிருக்கும் கணவன், மனைவி இருவர் கொண்ட சிறிய தமிழ் குடும்பம் ஒன்றுக்கு சமையல் மற்றும் ஏனைய வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

(நேர்முகத் தேர்வு சாவகச்சேரியில் நடைபெறும்)

(29690)(4.6.3)

தொடர்பு:077 985 9218

**தேவை**

சுஜித் என்ரபிறைசஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய கிளைகளுக்கு

**விற்பனைப் பிரதிநிதிகள், விற்பனை முகவர்கள்**

தேவை. மாதாந்தம் ரூபா 25000/= தொடக்கம் ரூபா 30000/= வரை சம்பாதிக்கலாம். உணவு, இருப்பிடம் இலவசம்.

தொடர்பு: மட்டக்களப்பு - 065 205 2431

வவுனியா - 024 222 6382

யாழ்ப்பாணம் - 021 227 0586

**சுஜித் என்ரபிறைசஸ்** (C/2778)(3.6.4)

**வீடு வாடகைக்குத் தேவை**

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இயங்கும் பிளாஸ்ரிக் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் அல்லது கொடிகாமம் தொடக்கம் நாவற்குழி வரையிலான பகுதியில் ஏ - 9 வீதியுடனும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை.

வாகனங்கள் நிறுத்தவும் பொருள்கள் வைப்பதற்கும் இடவசதி உள்ளமை விரும்பத்தக்கது. (சி2779)(12.3.6)

தொடர்பு: 075 242 9533/021 227 0586

**உடனடித் தேவை**

யாழ். நகர மத்தியில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.




- காசாளர் (பெண்-01)
- கணக்கு உதவியாளர் HNDA தகைமை (01)
- இந்திய உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவமும் தராதரமும் வாய்ந்த சமையற்காரர்கள்(Vegetarian Cook-01)
- Sweet and Snacks Maker இனிப்பு வகை மற்றும் சிற்றுண்டி வகை தயாரிப்பாளர்கள் (01)

★உணவு மற்றும் தங்குமிட வசதியுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 07...

நிர்வாகம்.



முதன் முறையாக

**PHOTOBOOKS**

ஸ்ரீ லங்காவில் தயாரிக்கப்படுகிறது

- இலகுவான பாரமில்லா நிழற்பட புத்தகம்.
- பல்வேறுவிதமான முன்அட்டைகள் மற்றும் கட்டும் தெரிவுகள்.
- பரந்த தெரிவுடன் உயர்தர பரிமாணங்கள்.
- நீர் மூலம் பாதிப்பு இல்லை.
- தலைமுறையாக நீடிக்கும் அச்சு பிரதிகள்.
- கிழிக்க இயலாத புத்தகம்.
- 5"x7" தொடக்கம் 12"x17"வரை அளவுகள்.
- இதில் இரசாயன பொருள்கள் சேர்க்கையில்லாத காரணத்திலும் மற்றும் வெளிப்படுத்தாத காரணத்திலும் சூழல் நற்புடையதாகும்.

Suresh:0712198108 Patrick:0777666100

அழையுங்கள் - 011-7389721-2

அழகிய கதைகளை உருவாக்குவது அர்த்தமுள்ள உறவுகள்.

JAMPHOTO தொழில் நுட்பத்தை மட்டும் அல்ல அது இனிய காவியங்களை உருவாக்குவதைப் பற்றியது.



திருமணங்கள் - விடுமுறைகள் களியாட்டம் - குடும்ப வைபவங்கள்

JAMPHOTO

நிரந்தர அழகிய கதைகள்

Powered By hp INDIGO

எமக்கு கொடுக்கப்படும் நிழற்படங்களுக்கு பூரண அந்தரங்கமும் உத்தரவாதமும் தரப்படும்

PHOTOBOOK நிறுவனம் முதன்முறையாக யாழ்ப்பாணத்திற்கு வருகைத்தரவிருக்கிறது. நாம் 2014 தைமாதம் 17ம், 18ம், 19ம் திகதிகளில் நிகழவுள்ள JITFல் (11) இலக்க ஸ்தானத்தில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப் பொருளைப்பற்றிய மேலதிக விபரங்கள் பெற விரும்புவோர் தைமாதம் 16ம் திகதி 4:00 மணிமுதல் 6:00 மணிவரை (ஹோட்டல் சுபாசில்) நடை பெறவிருக்கும் விழிப்புணர்வு கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம். கீழ் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் உங்களின் பங்கேற்றலை உறுதிப்படுத்துங்கள்.

கீழ் இருக்கும் படிவத்தை நிரப்பி மார்கழி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் ART WORK க்குடன் எமக்கு அனுப்புபவருக்கு ஒரு PHOTOBOOK இலவசமாக கொடுக்கப்படும்.

CUSTOMER NAME: ..........

STUDIO NAME : ..........

TEL NUMBER : ..........

ADDRESS : ..........

RETURN ADDRESS

Jam Photo (Pvt) Ltd

91, Galle Road, Colombo 4, Sri Lanka

Tel: +94 11 7389721-22 / +94 11 4933481 Fax: +94 11 2055129

Email: info@jamphoto.lk Web: www.jamphotobooks.com

(C/13561)(10.6.3)


## சாவகச்சேரி நகராட்சிமன்றம்

### 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 2014ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 19.11.2013ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி வரை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் அன்று முற்பகல் 10.00 மணிக் குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக் கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் 18.11.2013 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியை 26.11.2013 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

❖ இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.

**2014 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக் கடை 01 | 1,540,000.00 | 15,400.00 | 1,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை 02 | 1,540,000.00 | 15,400.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை 01 | 660,000.00 | 6,600.00 | 1,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை 02 | 660,000.00 | 6,600.00 | 1,000.00 |
| 05 | கோழி இறைச்சிக் கடை 01 | 935,000.00 | 9,350.00 | 1,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை 02 | 935,000.00 | 9,350.00 | 1,000.00 |

குறிப்பு: இந்நகராட்சிமன்றத்தின் நிர்வாக எல்லைக்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம் சாவகச்சேரி.

(C/2777)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பு ஆலைக் காணியை விடுவிக்கவே முடியாது

## இராணுவம் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

அக்கராயன், நவ.6
கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் அமைந்துள்ள கரும்பு ஆலைக்குரிய காணியை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்க முடியாது என கிளிநொச்சி அரச உயர் அதிகாரிகளுக்கு இராணுவம் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலும் ஸ்கந்தபுரத்திலுள்ள கரும்புக் காணிக்குப் பதிலாக அக்கராயன் சமாதானபுரம் பகுதியில் உள்ள 50 ஏக்கர் காணியைப் பயன்படுத்துமாறு இராணுவத்தினர் அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

1965 ஆம் ஆண்டிலிருந்து ஸ்கந்தபுரத்தில் உள்ள 200 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் செய்கை இடம்பெற்றுள்ளதுடன் கரும்பு ஆலையொன்றும் இயங்கி வந்தது.

போர்க் காலத்தில் கரும்பு ஆலை செயலிழந்தது. போர் முடிவுற்று மக்கள் மீள் குடியமர்ந்த பின்னர் கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன், ஆனைவிழுந்தான் குளம், வன்னேரிக் குளம் ஆகிய பகுதிகளில் 30 விவசாயிகள் வரை கரும்புச் செய்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் ஸ்கந்தபுரத்தில் கரும்பு ஆலையொன்று இயங்கவேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்பு ஸ்கந்தபுரத்துக்கு வருகை தந்த சீனித் தொழிற்துறை அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ன கரும்பு ஆலைக்குரிய காணியை இராணுவத்திடமிருந்து பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் கரும்பு ஆலைக்குரிய காணியைப் பயிற்சித் தளமாகப் பயன்படுத்தவுள்ளதாகவும் அக்கராயன் சமாதானபுரத்தை இதற்கு மாற்றீடாகப் பயன்படுத்துமாறும் இராணுவத்தினர் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராணுவத்தினர் அடையாளப்படுத்தியுள்ள இடம் மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் வயல் நிலங்கள் உள்ள பகுதிகளாகும். குறிப்பாக அக்கராயன் குளத்தின் வான் வெள்ளம் பாய்கின்ற பகுதியில் எவ்வாறு கரும்பு ஆலையை அமைக்க முடியுமென மக்களும், அரச அதிகாரிகளும் குழப்பம் அடைந்துள்ளனர்.

ஸ்கந்தபுரம் கரும்பு ஆலைக்குரிய வளமான காணியில் இராணுவ பயிற்சி நிலையமாவெனவும் மீளக் குடியமர்ந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-18)

## வளப் பற்றாக்குறையுடன் வள்ளிபுனம் பாடசாலை

புதுக்குடியிருப்பு, நவ.6
புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் வளப் பற்றாக்குறை நிலவுவதால் இங்கு கல்வி கற்கும் 850 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

போர்க் காலத்தில் இந்தப் பாடசாலை எவ்வாறு இயங்கியதோ அந்த நிலையிலேயே இந்தப் பாடசாலை தற்போதும் இயங்குவதாகவும், 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்னமும் சேதமடைந்த ஓலைக்குடில்களிலேயே கல்வி கற்று வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு 10க்கும் மேற்பட்ட வகுப்புக்கள் ஓலைக் கொட்டிலுக்குக் கீழ் இயங்கி வருவதாகத் தெரிய வருகின்றது. தரம் 3, 4, 5 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் திறந்த மண்டபம் கடுமையான காற்று, மழை என்பனவற்றின் தாக்கம் ஏற்படும்போது சரிந்துவிழும் அபாயக் கட்டத்தில் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.


மேலும் மாணவர்களுக்குத் தேவையான கதிரை, மேசை போன்ற தளபாட வசதிகளும் இங்கு கிடையாதெனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கல்விக் கோட்டத்தினால் ஏதாவது நிகழ்வொன்று இந்தப் பாடசாலையில் நடத்தப்படும் சூழ்நிலை ஏற்படும்போது மாணவர்கள் நிலத்தில் அமர்ந்திருந்து கல்விகற்கும் அவலநிலை ஏற்படுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மேலும் மாணவர்களின் ஒன்றுகூடலோ அல்லது வேறு ஏதாவது நிகழ்வுகளோ நடத்தக்கூடிய மேடையுடன் கூடிய பொது மண்டபமும் இங்கு கிடையாது எனவும், அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் தேர்தல் காலத்தில் வருகை தந்த மத்திய பொருளாதார பிரதி அமைச்சரிடம் இந்தக் குறைகளை யெல்லாம் சுட்டிக்காட்டி பாடசாலை நிர்வாகத்தால் மனு ஒன்று கையளிக்கப் பட்ட போதிலும் அதற்கு எந்த வித பயனும் இதுவரை கிட்டவில்லையென்றும் தெரிய வருகின்றது. மேலும் மின்சார வசதி இல்லாமையும் பெரிய குறையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-20)

## அக்கராயன்குள ஆற்றுப் பகுதியில் 30 வருடங்களாக புனரமைப்பில்லை



கிளிநொச்சி, நவ.6
கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் ஆற்றுப்பகுதி கடந்த 30 ஆண்டுகளாக துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் காணப்படுவதாக இங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியமர்வின் பின்னர் இந்தக்குளம் பெரும் பொருட் செலவில் புனரமைக்கப் பட்டதுடன் குளத்தின் வாய்க் கால்களும் புனரமைக்கப் பட்டன. ஆனால் ஆற்றுப் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் குளம் வான்பாயும் போது வெள்ள நீர் வயல்களில் பரவிப் பாய்ந்து அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. இதனால் அக்கராயன் ஆற்றில் குறைந்தது 3 கிலோ மீற்றர் தூரத்துக்காவது துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு வயல்நிலங்களில் பரவிப் பாயும் வெள்ளநீரை இலகுவான வகையில் கடலைச் சென்றடையக்கூடிய வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## பாடசாலைக்கு குழாய்க்கிணறு



அக்கராயன், நவ.6
அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு "சோஆ" நிறுவனம் குழாய்க்கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனது சொந்தக் காணியில் இயங்கத் தொடங்கியதில் இருந்து இங்கு கல்வி பயிலும் 174 மாணவர்களும் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வந்தனர். கரைச்சிப் பிரதேச சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பன குடிதண்ணீர் நெருக்கடியை ஓரளவு தணித்து வந்த நிலையில் "சோஆ" நிறுவனமும் குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோளை யடுத்தே கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் இந்தக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் வேலைகள் நிறைவு பெற்றதும் சீரான முறையில் இந்தப் பாடசாலைக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## நிரந்தர வீடுகள் இன்றி வித்தியாபுரம் மக்கள்

முல்லைத்தீவு, நவ.6
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வித்தியாபுரம் கிராமத்தில் சுமார் 180 குடும்பங்கள் நிரந்தர வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என தெரிய வருகின்றது.

இங்கு சுமார் 260 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் ஏற்கனவே 65 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. 14 குடும்பங்களின் பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு அவற்றைப் புனரமைப்பதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மீதமுள்ள குடும்பங்கள் நிரந்தர வீடுகள் வழங்கப் படாததால் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேலும் தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இவர்கள் தங்கியிருக்கும் தற்காலிக வீடுகள் மழைக்குத் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளன.

இந்த மக்களின் அவல நிலையைப் போக்க வேண்டுமாயின் நிரந்தர வீட்டுத் திட்டத்தை உடனடியாக வழங்க வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## வெள்ளம் பாய்ந்து செல்ல வேண்டும் பெரிய பாலங்கள்


### அக்கராயன் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ.6
அக்கராயன் குளத்தின் வான் பகுதியூடாகப் பாய்ந்து செல்லும் வெள்ளம் தடையின்றிச் செல்லும் வகையில் பெரிய பாலங்கள் அமைக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன் குளத்தின் 200 மீற்றர் நீளமான வான்பகுதியூடாகப் பாயும் வெள்ளம் அக்கராயன் திருமுறிகண்டி வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் போது ஆண்டுதோறும் போக்குவரத்து தடைப்படுகிறது.

இதற்கு குறித்த வீதியில் அமைக்கப்பட்ட சிறிய பாலமே காரணமெனக் கூறப்படுகின்றது.

அக்கராயன் குளத்தின் வான்பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் அக்கராயன் பிள்ளையார் கோயில் பகுதியிலிருந்து மருத்துவமனை வரையான பகுதியில் குறைந்தது 250 மீற்றர் அகலத்துக்கு வான் வெள்ளம் பாயக்கூடிய வகையில் பாலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.



அக்கராயன் குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான்பகுதி என்பன உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக இனிவரும் காலங்களில் வெள்ளம் அதிகளவில் வீதியைக் குறுக்கறுத்து வான் பாயும் என்பதால் மேம்பாலம் அமைக்கப்படுவதன் அவசியம் தொடர்பாக வலியுறுத்திக் கூறப்பட்ட போதிலும் மிகவும் குறுகலான பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் மழை காலத்தில் வெள்ளத்தினால் போக்குவரத்துத் தடைகள் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படும் எனவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (க-18)

## சிறுவர் இல்லங்களில் பரிசோதனை நடவடிக்கை

வவுனியா மாவட்டத்தில் இயங்கி வரும் சிறுவர் இல்லங்களைப் பரிசோதனை செய்வதில் வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

சிறுவர் இல்லங்களில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்து அவர்களின் எதிர்கால நலனைப் பேணும் வகையில் வவுனியாப் பொலிஸார், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர், சுகாதாரப் பரிசோதகர்கள், உளநல வைத்தியர்கள் ஆகியோர் இணைந்து இங்கு இயங்கி வரும் 14 சிறுவர் இல்லங்களில் சிறுவர்களின் உடல் நலம், உள நலம் மற்றும் அவர்களின் கல்வி நடவடிக்கை, பராமரிக்கப்படுகின்ற முறை உட்பட பல்வேறு விடயங்களை பரிசோதனை செய்து வருகின்றனர்.

பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள் சில இத்தகைய சோதனை நடவடிக்கையின் போது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இவ்வாறான இல்லங்களைப் பதிவு செய்யுமாறு இந்தப் பரிசோதனைக் குழுவினர் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு வருகை

## அதனையொட்டி பல்வேறு ஏற்பாடுகள்

மட்டக்களப்பு,நவ.6
இலங்கையில் எதிர்வரும் 15 ஆம்திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கும் வருகைதரவுள்ளனர். அதனையொட்டி மட்டக்களப்பில் பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்தப் பிரதிநிதிகள் குழுவில் பிரிட்டன் இளவரசர் சாள்ஸும் வருகை தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் மகாராணி எலிசபெத்தின் பிரதிநிதியாக பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.
இந்தப் பிரதிநிதிகள் தமது வருகையின் போது, எதிர்வரும் 13ஆம்திகதி மாலை மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பினரைச் சந்திப்பதுடன், மட்டக்களப்பு நகரைச்சுற்றிப் பார்வையிடுவர்.
அத்துடன் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் பார்வையிடுவர்.



அட்டாளைச் சேனை, கோணவத்தையின் அபிவிருத்திப் பணிகளை கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை உட்பட பல பிரமுகர்கள் பார்வையிட்டனர்.

# 62,000 ஹெக்ரெயரில் நெற்செய்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் 62 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளது.
இந்த வருடம் விவசாயிகளின் நன்மை கருதி இயந்திரத்தினால் தானியங்கள் விதைக்கும் கருவியை விவசாயத் திணைக்களம்அறிமுகப் படுத்தியுள்ளது என்று விவசாயத் திணைக் களத்தின் மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பாட விதான அதிகாரி ஏ.எல்.எம். சல்மான் தெரிவித்தார்.
"தற்போது அறுவடை செய்வதற்கும் இயந்திரம் வந்துள்ளது. இயந்திர மயமான உலகத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி அதிகரித்துக்கொண்டு செல்கின்ற இந்தக் காலகட்டத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கும் அவை இலகுவாக அமைகின்றன" என்று அவர் கூறினார்.
தானியங்கள் விதைக்கும் இயந்திரத்தினைப் பயன்படுத்தி விதைத்தால் களை பிடுங்குவது கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உர வகைகள் போன்றவற்றை விசிறுவது போன்றவை இலகுவாக அமையும்என்று அவர் தெரிவித்தார். (ச)

# ஆசிரியர்களுக்கான ஒப்பந்த காலம் நீடிப்பு

## கிழக்கு அமைச்சரவை தீர்மானம்

அம்பாறை,நவ.6
கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆங்கில, சிங்கள, தமிழ்மொழிப் பாடங்களுக்கான ஆசிரியர்களின் ஒப்பந்த காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானித்துள் ளது.
இந்தத் தகவலை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான எம்.எஸ். உது மாலெப்பை தெரிவித்தார்.
அட்டாளைச்சேனை லொயிட்ஸ் விடுதியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில, தமிழ், சிங்கள மொழிப் பாடங்க ளுக்கான ஆசிரியர்கள் பல வருடங்களாக பல வலயங்களில் கடமையாற்றி இருந்த போதிலும், 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து அவர்களது ஒப்பந்த அடிப்படையிலான சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பாடங்களை கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.
இந்தச் சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட 30 ஆசிரியர்களின் சேவையை நீடிப்பதற்காக கிழக்கு மாகாண காணி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்தை ஆராய்ந்த பின்னரே அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டது.-என்றார். (ச)

# உறுகாமத்தில் 49 வீடுகள் நிர்மாணம்

மட்டக்களப்பு,நவ.6
இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் செங்கலடி, உறுகாமம் மீள்குடியேற்ற கிராமத்தில் 49 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.
மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன என்று மாவட்ட செயலக திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.
ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இந்த வீடுகள் மக்கள் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படுகின்றன.
இதற்கென சுமார் இரண்டரை கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று திட்டமிடல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச)

# எல்லைகளை வரையறை செய்யுங்கள்



மட்டக்களப்பு,நவ.6
மட்டக்களப்பு மாவட்ட எல்லையோரக் கிராமங்களின் எல் லைகளை வரையறை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இதன் மூலம் இரு சமூகங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை தடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.
மாவட்ட செயலர் தலைமையில் விசேட குழுவை அமைத்து வர்த்தமானி பிரசுரத்தில் உள்ள பிழைகளை திருத்தி எல்லைகளை வரையறை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கேட்டுக்கொண்டார். (ச)

# பொழுதுபோக்கில்லை; குற்றச்செயல் அதிகரிப்பு

## கிழக்கு முதல்வரின் இணைப்புச் செயலர் கருத்து

திருகோணமலை,நவ.6
இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு வசதிகள் இல்லாமையாலேயே சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. இவ்வாறு தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளரும், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத்தின் இணைப்புச் செயலாளருமான எஸ்.எம்.சுபியான் தெரிவித்தார்.
மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 7.9 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ள ஹமீதியா பொது விளையாட்டுமைதானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மூவின மக்களும் ஒன்றாக வாழும் அதிகாரப் பிரதேசத்தையுடைய தம்பலகாமம் பிரதேச சபையால் மேற் கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களில் கல்வி, சுகாதாரம், பொழுது போக்கு, உட்கட்டமைப்பு என துறை ரீதியாகவும், இன ரீதியானதுமான பங்கீடு பேணப்படுவது உறுதி. கடந்த காலப் போரால் இளைஞர்களின் பொழுது போக்குக்கான வசதிகள் பாதிப்புற்றமையால் சமூகத் தில் குற்றச் செயல்கள் அதிகரித்துள் ளன.-என்றார். (ச)

# சட்டவிரோதமாக விவசாயத்தில் ஈடுபடுவோரை வெளியேற்றவும்

## செல்வராசா எம்.பி கோரிக்கை

மட்டக்களப்பு ,நவ.6
மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரை நிலங்களில் அத்துமீறி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்ற அம்பாறை மாவட்ட விவசாயிகளை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா வலியுறுத்தியுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல்தரை நிலம் தொடர்பான கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே அவர் இந்தக் கோரிக் கையை முன்வைத் துள் ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரிய மேய்ச்சல் தரை நிலங்களில் அம்பாறை மாவட்ட விவசாயிகள் சட்ட விரோதமாக அத்துமீறி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
அதனால் மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் தமது மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
தமது பாரம்பரிய மேய்ச்சல் தரை நிலங்களில் மாடுகளை விடுவதற்கு தடுக்கப்படுவதானது, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பண்ணையாளர்களுக்கு செய்யும் அநீதியாகும்.
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் தரை நிலங்களில் அத்துமீறி விவசாயத்தில் ஈடு பட்டுவரும் அம்பாறை மாவட்ட விவசாயிகளை உடனடியாக வெளியேற்றுவதற்கு இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்ற வேண்டும். அதற்கான உத்தரவை கிழக்கு மாகாண முதலமைச்சர் பிறப்பிக்க வேண்டும்.-என்றார். (ச-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாநாட்டில் கலந்துகொள்ளாதீர்!

## இந்திய அரசுக்கு மதுரை ஆதீனம் கோரிக்கை

> “இசைப்பிரியாவை மிகப் பயங்கரமாக கொலை செய்து விட்டு, நாங்கள் இக்கொலையை செய்யவில்லை என பொய்ப் பரப்புரை மேற்கொள்ளும் இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தலாமா?

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என இந்திய மத்திய அரசுக்கு மதுரை ஆதீனம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இனப்படுகொலை நடத்திய இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த வேண்டும் என முடிவு செய்ததே மிகப் பெரிய தவறு. அப்படிப்பட்ட முடிவுக்கு இந்தியா சம்மதம் தெரிவித்திருக்கக் கூடாது. லட்சக்கணக்கான மனிதர்களை கொன்று குவித்து, பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை அழித்து மனிதாபிமானத்திற்கு வேட்டு வைத்த இலங்கையில், பொதுநலவாய மாநாட்டை நடத்தலாமா?

சின்னஞ்சிறு பாலகன் பிரபாகரனின் மகனை ஈவு இரக்கமின்றி கொலை செய்த இலங்கையில் பொதுநலவாய மாநாடு தேவையா?

இசைப்பிரியாவை மிகப் பயங்கரமாக கொலை செய்து விட்டு, நாங்கள் இக்கொலையைச் செய்யவில்லை என பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளும் இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தலாமா?

பொதுநலவாயம் என்ற சொல்லுக்கு பொது சொத்து என்று தான் பொருள். இறைவனின் பிள்ளைகளான மனித உயிர்கள் என்ற பொதுச் சொத்தை நாசமாக்கிய இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த அனுமதிக்கலாமா? மத்திய அரசு, இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## மாணவர்களுக்கு மண்குன்று தந்த புதையல்

வத்தேகம, பாரதி தமிழ் வித்தியாலயத்தின் அயலில் இருந்த மண்மேடொன்றை வெட்டிய மாணவர்களுக்கு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் புழக்கத்தில் இருந்ததாக நம்பப்படும் 86 நாணயங்கள் கிடைத்துள்ளன.

பாடசாலை வளவில் இருந்த மண்குன்றொன்றின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்திருந்தது. அதை வெட்டி அப்புறப்படுத்தும் பணியில் வித்தியாலய மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயம், சரிந்து கிடந்த மண்ணிலிருந்து 86 நாணயங்கள் மீட்கப்பட்டன. அவை இலங்கையில் பிரித்தானிய ஆட்சியில் இருந்தபோது புழக்கத்தில் இருந்த நாணயங்கள் என அனுமானிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 1870ஆம் ஆண்டின் நாணயங்கள் 23, 1893 ஆம் ஆண்டின் பத்து சத நாணயங்கள் 11, 1892ஆம் ஆண்டின் ஐந்து சத நாணயங்கள் 52 என மொத்தமாக 86 நாணயங்கள் கிடைத்துள்ளன.

கண்டி புராதனப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் இந்த இடத்தையும் நாணயங்களையும் பார்வையிட வந்திருந்தனர்.



கொழும்பு புறக்கோட்டை பகுதியில் சேதமடைந்திருந்த குறுக்குத்தெரு வீதிகள் புனரமைக்கும் பணிகளை ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான லோரன்ஸ் பெர்னாண்டோ, சண். குகவரதன், பிரியாணி குணரட்ன மற்றும் முன்னணியின் குணசிங்கபுர அமைப்பாளர் ரவீந்திரகுமார் ஆகியோருடன் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

பிரிட்டன் முன்னாள் அமைச்சர்

## இலங்கை மாநாட்டை எதிர்த்த ஜெயாவுக்கு நன்றி தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு எதிராக தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதற்காக முதல்வர் ஜெயலலிதாவுக்கு, பிரிட்டன் முன்னாள் அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என தமிழக சட்டசபையில் சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து, பிரிட்டன் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன் மாரி ரெயன் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து இலங்கை அமர்வுகளில் இந்தியா பங்கேற்கக் கூடாது எனக் கோரி தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது. இதற்காக உலகத் தமிழர் பேரவையின் சார்பில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜோன் மாரி ரெயன், தற்போது உலகத் தமிழர் பேரவையின் கொள்கை ஆலோசகராகவும் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தக்ஷிண அதிவேகப் பாதையில் மதுபோதையுடன் திரிந்த சாரதி கைது

தக்ஷிண அதிவேகப் பாதையில் மதுபோதையுடன் திரிந்து கொண்டிருந்த வாகனச்சாரதி யொருவர் கடந்த 31ஆம் திகதி இரவு அப்பாதையில் பணியிலிருந்த போக்குவரத்துப் பொலிஸாரினால் கெலனிகம 13 ஆவது கிலோ மீற்றர் எல்லையில் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இப்பாதையில் வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்த ஒருவர் இந்த நபரின் தள்ளாட்டத்தைப் பார்த்து அதிவேகப்பாதையின் பொலிஸ் அவசர அழைப்புக்குத் தகவல் கொடுத்ததையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

53 வயதான இந்த நபர் வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த சாரதியெனவும் கைது செய்யப் பட்ட சமயம் அவர் நிறை வெறியில் இருந்ததாகவும் தெரிவித்த போக்குவரத்துப் பொலிஸார் அவரை மேலதிக நடவடிக்கைகளுக்காக பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் ஒப் படைத்துள்ளதாகக் கூறினார்.

## இரு வேறு ரயில் விபத்துகளில் மூவர் பரிதாப உயிரிழப்பு

பேலியகொட - வனவாசலபிரதேசத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில், மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயிலில் மோட்டார் சைக்கிள் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ரத்கம - வெல்லபட பிரதேசத்தில் ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நபர் கையடக்க தொலைபேசியில் பேசியவாறு ரயில் கடவையில் வாகனத்தை செலுத்திச் சென்றநிலையில் விபத்தில் சிக்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் புஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

# மூன்றரை கோடி ரூபா கொள்ளை; இராணுவச் சிப்பாய் வசமாக மாட்டினார்

## உத்தியோகபூர்வ விடுமுறையில் வந்து கைவரிசை

கொழும்பு, புறக்கோட்டை, செட்டியார் தெருவிலுள்ள நகைக் கடைக்குள் புகுந்து சுமார் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான நகைகளை யும், பணத்தையும் கொள்ளை யிட்ட சம்பவத் தில் தொடர்புடையவரெனச் சந்தேகிக்கப்படும் இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைதுசெய்யப்பட்ட சிப்பாயிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது அவர் ஏற்கனவே நான்கு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் உயரதிகாரியொருவர் கூறினார்.

வத்தளை பிரதேசத்திலுள்ள வங்கியொன்றிலிருந்து 12 இலட்சம் ரூபா பணத்துடன் வெளியே வந்த தம்பதிகளிடம் அந்தப் பணத்தைக் கொள்ளை யடித்தமை, ஜாஎல பிரதேசத்திலுள்ள வங்கியொன்றி லிருந்து பணம் எடுத்துக் கொண்டு சென்ற ஒருவரி டமிருந்து 4 இலட்சம் ரூபா வையும், மற்றொருவரிடமிருந்து 8 இலட்சம் ரூபாவையும் கொள்ளையடித்தமை உட்பட நான்கு கொள்ளைகளில் இவருக்கு ஏற்கனவே சம்பந்தம் இருந்துள்ளது.

செட்டியார் தெரு நகைக் கொள்ளையில் இவருடைய பங்காக 36 இலட்சம் ரூபா கிடைத்துள்ளதாகவும் அந்தப் பணத்தில் அவர் வாங்கியிருந்த வாகனமொன்றைக் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இராணுவச் சேவையிலிருக்கும் இந்தச் சிப்பாய் அவ்வப்போது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ விடுமுறையில் வந்து இந்தக் கொள்ளைகளை நடத்திவிட்டு மீண்டும் திரும்பிவிடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்.

தன்னுடைய பகுதியின் நிறுவனத் துக்காக வங்கியொன்றிலிருந்து 75 இலட்சம் ரூபா பணத்தை எடுத்துக்கொண்டு வந்த ஜா எல, ஏக்கல ஆடைத் தொழிற்சாலையின் முகாமையாளரிடமிருந்து அந்தப் பணத்தைக் கொள்ளையிட்டமை உட்பட 13 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புள்ள கொள்ளைக் கூட்டத் தலைவனைக் கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தியபோதே இந்த இராணுவச் சிப்பாய் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்திருக் கிறார்.

இந்தக் கொள்ளைக்கூட்டத் தலைவன் உட்பட நால்வர் கடந்த முதலாம் திகதி பயங்கர வாதத் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட கொள்ளையர்களில் ஒருவர் களனி பிரதேசத்தில் தனது மனைவியின் பெயரில் 20 இலட்சம் ரூபாவுக்கு காணியொன்றை விலைக்கு வாங்கியிருக்கிறார் எனத் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட அறுவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்ற விசாரணைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்படும் மேலும் சிலரைத் தேடிப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி யொருவர் தெரிவித்திருக்கிறார்.

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் மாட்டினர்

கொழும்பு கண் வைத்தியசாலை விடுதியொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஓய்வு பெற்ற மேஜர் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் நால்வரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனநாயக விழுமியங்களுக்கு கொழும்பு மாநாடு மேலிடம் தருமா....?

கொழும்பில் இம்மாத மத்தியில் நடைபெற ஏற்பாடாகி வரும் பொதுநலவாய மாநாடு, உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு கனகச்சிதமாக நடைபெற்று முடியுமா-அங்கத்துவ நாடுகள் அனைத்தும் பங்குபற்றுமா?-என்ற வினா மிக ஆழமாகி வருகிறது.

பல வகைகளிலும் முன்னணி வகிக்கும் கனடா, பொதுநலவாய மாநாட்டைப் பகிஷ்கரிப்பதாக ஏற்கெனவே உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது. இறுதிப்போரின் போது நடைபெற்றதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டதாகத் தெரிவித்தே கனேடியப் பிரதமர் தமது முடிவை மேற்கொண்டார் என்பது தெரிந்ததே.

போரின் போதும், அதற்குப் பின்னரும் இலங்கையில் மனித உரிமைகள் பாரதூரமாக மீறப்பட்டன; மற்றும் அனைத்துலக தரத்துக்கு ஏற்ப மனித உரிமைகள் பேணப்படவில்லை போன்ற காரணங்களை முன்வைத்தே, கனேடியப் பிரதமர் தனது பகிஷ்கரிப்பு முடிவை மேற்கொண்டுள்ளார்.

அதன் தொடரியாக, பொதுநலவாய அமைப்பின் தாய் (நாடு) என மேலெழுந்து நிற்கும் பிரிட்டனின் பிரதமர், கொழும்பில் நடைபெற ஏற்பாடாகி உள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றக் கூடாது என்ற கனதியான எழுச்சி முகிழ்த்துள்ள கட்டத்தை, அந்நாட்டில் அடைந்துள்ளதைக் காணமுடிகிறது.

தமிழர்களுக்கான பிரிட்டனின் அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் லீ ஸ்கொட், பிரதமர் கமரூனுடனும் வெளிவிவகாரச் செயலாளருடனும் இலங்கை விவகாரம் குறித்து நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இன்று (நவம்பர்) ஆறாம் திகதி பிரிட்டிஷ் நாடாளுமன்றில், பொதுநலவாய மாநாட்டில் (பிரதமர்) பங்குபற்றக் கூடாது என்ற பிரேரணை விவாதிக்கப்பட உள்ளது.

இதேவேளை, கொழும்பு உச்சி மாநாட்டில் பங்குபற்றும் விவகாரம் குறித்துக் கருத்தறிவதற்காக-ஆராய்வதற்காக-பிரிட்டனில் இயங்கும் தமிழர் அமைப்புகள் நான்கை பிரிட்டிஷ் பிரதமர் அழைத்துப் பேசுவதற்கும் ஏற்பாடாகி உள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மலேசியாவும் மற்றும் நியூசிலாந்தும் கொழும்பு மாநாட்டில் பங்குபற்றுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள போதிலும், அந்த நாடுகளின் எதிர்க்கட்சிகள் தமது பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமன்றி, மத்திய அரசின் அமைச்சர்களான ஜெயந்தி நடராஜன், ஏ.கே.அந்தோனி ஆகிய இருவரும் கொழும்பு மாநாட்டை புதுடில்லி அரசு புறக்கணிக்க வேண்டும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து இந்திய மத்திய அரசும் தள்ளாடும் நிலைக்கு வந்துள்ளது. ஆகப்பிந்தி, மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் ஜெயந்தி நடராசன், அரசு கொழும்பு மாநாட்டில் பங்குபற்றாது தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இது குறித்து கடிதம் மூலமும் பிரதமருக்கு விளக்கம் தெரிவித்திருக்கிறார்.

அந்த வரிசையில் பிரதமர் அலுவலக அமைச்சர் வி.நாராயணசாமியும், மன்மோகன் சிங் கொழும்பு செல்லக்கூடாது என்று அவரிடம் இடித்துரைத்திருப்பதாகத் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, ஆளுங்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும், பிரதமர் அதில் பங்குபற்றக் கூடாது என்று வலியுறுத்தி வந்தன. அதற்கு உறுதியான வடிவும் தரும் வகையில் தமிழக சட்டசபையில் ஒருமனதாக தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தன. மொத்தத்தில் தமிழகம் இது விடயத்தில் பற்றுறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலை மனதில் கொண்டு, புதுடில்லி மத்திய அரசு கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்வதா இல்லையா என்ற பூட்டுக்குள் அகப்பட்ட நிலையில் திண்டாடுகிறது.

கொழும்பு, பொதுநலவாய மாநாட்டில் கலந்துரை யாடப்பட உள்ள பதின்மூன்று அம்சங்களில்-விடயங்களில்-

நல்லாட்சி, சிறிய நாடுகள், நிலைபேண்தகு அபிவிருத்தி, மனித உரிமைகள் ஆகியன அதிமுக்கியத்துவத்துடன் கவனத்தில் கொள்ளப்பட உள்ளன.

இவற்றில், இலங்கை அரசு குறித்து மாநாடு கரிசனை காட்டும் மிக முக்கிய விடயம், மனித உரிமைகளைப் பேணுவதும், செயலளவில் வழுவின்றிச் செயற்படுத்துவதும் ஆகும்.

அடுத்த வாரம் இறுதி நாள்கள் மூன்றிலும் கூடும் மாநாட்டின் பெறுபேறுகளை விடவும்-

இலங்கையில் மனித உரிமைகளைப் பேணுதல், மற்றும் நல்லாட்சி குறித்தே அங்கத்துவ நாடுகளை விடவும், அனைத்துலகம் மிகக் கூர்மையுடன் நோக்கும். அவ்வளவே....!

# இன்னொரு சுருக்குக் கயிறு

தொல்காப்பியன்

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது, படையினரின் செயற்பாடுகள் குறித்து பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுதந்திரமாக நடப்பதற்கு, இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமுறை கோரியிருந்தது. ஆனாலும், அதனைச் செய்ய அரசு முன்வரவில்லை. தேர்தல் ஆணையாளரிடம் இதுபற்றிக் கோரிக்கை விடுத்தபோது, அதற்கான அதிகாரம் தமக்குக் கிடையாது என்று அவரும் கைவிரித் திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அதனைச் செய்ய முடியும் என்றும் அவருக்கே அந்த அதிகாரம் உள்ளது என்றும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். இதையடுத்து, இராணுவத் தலையீடுகளின்றி, சுதந்திரமாகத் தேர்தல் நடத்தப் படுவதை உறுதிப்படுத்தும்படி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நேரடியாகவே கோரிக்கை விடுத்திருந்தார்.

### வடக்குத் தேர்தலில் அதிகளவு இராணுவம்

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதில் அக்கறை செலுத்தியிருக்கவில்லை. இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கும் உத்தரவு கடைசிவரை பிறப்பிக்கப்படவேயில்லை. தேர்தல் கடமைகளில் படையினர் ஈடுபடுத்தப்படவில்லை என்றும், பொலிஸாரே அதனைக் கவனிப்பதாகவும், இராணுவப் பேச்சாளர் அதனை நியாயப்படுத் தினார். தேசிய பாதுகாப்புக்காகவே படையினர் நிலை கொண்டுள்ளதாகவும், பொலிஸாரின் அனுமதியின்றி சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளில் அவர்கள் தலையிடமாட்டார்கள் என்றும் இராணுவத் தரப்புக் கூறியிருந்தது. ஆனால், வடக்கு மாகாணசபைத் தேர்தலின்போது, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இராணுவத் தலையீடுகள் காணப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வெற்றி பெறப்போகிறது என்பதைத் தெரிந்து கொண்டிருந்த படையினர், அந்த வெற்றியின் வீரியத்தைக் குறைப்பதற்காக ஏராளமான குறுக்கு வழிகளைக் கையாண்டிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் தாக்கப்பட்டமை, மிரட்டப்பட்டமை போன்ற நடவடிக்கைகளில் இராணுவத்தினர் மறைமுகமாக ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. குறிப்பாக, அனந்தி சசிதரன் மீதான தாக்குதலில் படையினரே ஈடுபட்டதாக வலுவான குற்றச்சாட்டுகள் எழுந்தபோதிலும், அது பற்றிய முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதா என எந்த தகவலும் இல்லை.

### இராணுவத்துக்குக் கிடைத்த பெரும் ஏமாற்றம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க கூடாது என்று வீடு வீடாகச் சென்று படையினர் நடத்திய பரப்புரைகள், தேர்தல் பரப்புரை ஓய்ந்த பின்னரும், பல்வேறு வழிகளில் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இராணுவத் தலையீடுகள் அதிகமா கவே இருந்தன. எனினும், வெளி நாட்டுக் கண்காணிப்புக் குழுக்களின் உன்னிப்பான அவதானிப்புக்குள்ளாகியிருந்ததால், வாக்களிப்பில் படையினரின் தலையீடுகள் அதிகம் இருக்கவில்லை. ஒட்டுமொத்தமாக, வடக்கு மாகாண சபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி யைத் தடுக்கவும், ஆளும் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளவும், இராணுவம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இலங்கை இராணுவம் பாரபட்சமின்றிச் செயற்பட்டதாகவோ, அரசின் வெற்றியைச் சார்ந்து செயற்படவில்லை என்றோ ஒருபோதும் கூற முடியாது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்காக, அதனை அரியணையில் ஏற்றுவதற்காக, இராணுவம் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பல்வேறு காரியங்களை மேற்கொண்டது. வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னர், வவுனியா படைத் தலைமையகத்தில், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க நிகழ்த்திய உரை, இந்தத் தேர்தல் முடிவு இராணுவத்தினருக்குக் கொடுத்துள்ள ஏமாற்றத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது. தமிழ் மக்களுக்கு அரசு எவ்வளவோ செய்தும், அவர்கள் அரசு சார்பாக வாக்களிக்கவில்லை என்றும், அதுபற்றிப் படையினர் கவலை கொள்ள வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

### மக்களின் வெறுப்பு வெளிப்பட்டது

இந்தக் கருத்து, வடக்கிலுள்ள தமிழ் மக்கள் அரசுக்குச் சார்பாக வாக்களிக்க வேண்டும் என்ற இராணுவத்தினரின் எதிர்பார்ப்பையும், அதைச் செய்யாத தமிழ் மக்கள் மீது இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பையும் வெளிப்படுத்தியது. எனவே, வடக்கு மாகாணசபைத் தேர்தலில் இராணுவத்தினர் பக்கச்சார்பின்றி, விருப்பு வெறுப்பின்றி நடந்து கொண்டனர் என்று கூறினால் அது தவறானது. இவ்வெல்லாவற்றையும், தெரிந்து கொண்டோ, தெரியாமலோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிக்க வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடக்கில் இராணுவத்தினரின் செயற்பாடுகளில் திருப்தி வெளியிட்டதாக கூறியிருந்தார். அண்மையில் நடந்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், உரையாற்றிய போதே அவர் அவ்வாறு கூறியிருந்தார்.

வடக்கில் படையினர் ஒழுக்கத்துடன் பணியாற்றுவதாகவும் அங்கு தேர்தல் நீதியாக நடத்தப்பட்டதாகவும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கூறியதாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த சில மணிநேரத்தின் பின்னர் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை வெளியானது.

அதில் இரண்டு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

முதலாவது, வடக்கு மாகாணசபைத் தேர்தல் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு ஜனநாயக ரீதியாக நடத்தப்பட வில்லை. இரண்டாவது, தேர்தலில் இராணுவத்தினரின் ஆதிக்கம் அதிகளவில் இருந்தது.

வாக்களிப்பு பெரும்பாலும் சுதந்திரமானதாகவே இடம்பெற்றுள்ளதாக, பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது. ஆனால், வாக்களிப்புக்கு முந்திய பரப்புரைகளின் போது இராணுவத் தலையீடுகளும், குறுக்கீடுகளும் அதிகளவில் காணப்பட்டதாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இனிமேல் இதுபோன்று நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள், படையினர் ஒழுக்கத்துடன் நடந்து கொள்வதாக பாராட்டுத் தெரிவித்தனர் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். அவர்கள் அப்படியேதும் கூறினரா என்று பலரும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த போது தான், பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

### இதனை அரசு எதிர்பார்த்திருக்காது

வடக்கு மாகாணசபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றியைப் பெற்றுக் கொண்டதால், வடக்கில் தேர்தல் நியாயமாக நடத்தப்படவில்லை என்ற முழுமையான குற்றச்சாட்டில் இருந்து அரசு தப்பிக் கொண்டுவிட்டது. ஆனாலும், எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு வடக்கில் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடக்கவில்லை என்று பொதுநலவாய கண்காணிப்புக்குழு அளித்துள்ள அறிக்கை, தமக்கான இன்னும் பெரிய வெற்றி குறைக்கப்பட்டு விட்டதோ என்ற எண்ணத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இந்தநிலையில், தேர்தலில் காணப்பட்ட இராணுவத் தலையீடுகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று, பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழு பரிந்துரைத்துள்ள நிலையில், அரசு அது பற்றி வாயைத் திறக்கவேயில்லை. இது குறித்து முறையான விசாரணைகள் நடத்தத் தவறினால், அதுவும் கூட எதிர்காலத்தில், இலங்கை மீதான சுருக்குக் கயிறாக மாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாமற் போகும் கிராமங்கள்

துன்னாலை செல்வம்

தாய் மண்ணுக்காக உயிரை விட்ட வீரர்கள் பிறந்த மண்ணில் இன்று மண்ணை விற்றுப் பிழைப்பு நடத்தும் கூட்டமும் இருக்கின்றது என்று நினைக்கும் போது எமது தாய் நிலம் தலைகுனிந்து நிற்கிறது. இயற்கையின் சீற்றத்துக்கு உள்ளாகத் தக்க விததத்தில் மண் அள்ளுபவர்கள் இயற்கைச் சீற்றம் வராமல் தடுப்பதற்கான எந்த வழியையும் மேற்கொள்ளவில்லை.

**யார் தடுப்பார்?**

மழை வந்தால் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன அந்த இடங்கள். அந்த இடங்களில் வசிப்பவர்கள் வெள்ளம் காரணமாக இடம் பெயர வேண்டிய சூழலும் ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொள்ளாது மணலை அளவுக்கு அதிகமாக அள்ளிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்தப் பிரதேச மக்கள் தொடாந்து அங்கு வாழ வேண்டும் என்றோ மண்ணை அள்ளுவதால் கடற்கரையை அண்டிய அந்தப் பிரதேசம் கடலுக்குள் மூழ்கிவிடும் என்றோ நினைக் காது செயற்படும் இவர்கள் எப்படி மக்கள், பொது சிந்தனை, எதிர்காலம் பற்றிச் சிந்திக்கப் போகிறார்கள்.

**சட்டத்தை மதிக்காதவர்கள் மக்களை மதிப்பரா!**

இயற்கை வளங்களைத் தனி நபரோ, நிறுவனமோ அனு பவிக்க முடியாது. அது சட்டத்திலும் இருக்கிறது. அந்தச் சட்டத்தைப் பின்பற்றாத வர்களால் என்றைக் கும் எமது தாய் நிலத்துக்குப் பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும். இயற்கை வளங்களை பயன்படுத்துபவர்களை 'கொள்ளையர்கள்' இடுதல் என்ற அர்த்தத்திலே பார்க்க வேண்டும். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அளவுக்கு அதிகமான மணலை எடுப்பவர்களைத் தடுக்க வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க பல அரச நிறுவனங்கள் இருந்தும் அவைகளும் மண் கொள்ளையை பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றன. கொஞ்சமா வது சிந்தித்து செயற்பட வேண்டும். இயற்கையைப் பாதுகாக்காமல் வருவாய் நோக்கம் கருதி தமது செயற்பாடுகளை மேற் கொண்ட நாடுகள் இன்று இயற்கையின் சீற்றத்துக்கு உள்ளாகி வருகின்றன. இயற்கையின் சீற்றத்தால் அங்கு ஆயிரக்கணக் கானோர் இடம் பெயர வேண்டிய சூழலும் ஏற்பட்டுள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு எமது பிரதேசத்தை நாம் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். இல்லாது போயின் எமது பிரதேசமும் காணாமற் போகும் அபாய நிலை ஒற்படும் என்பது உண்மை.

வடமராட்சி கிழக்கு அம்பன் கடற்கரைப் பகுதியில் 3 கிலோ மீற்றருக்கு மண் அகழப்பட்டு 8 அடிக்கு மேல் பள்ளம் ஏற்பட்டுள்ளது. பெருங்காடு என்ற பெயர் கொண்ட இந்தக் காட்டுப் பகுதி இப்பொழுது பாலைவனம் போன்று மாறியதோடு மட்டுமல்லாமல் 10 அடிக்கு மேல் பள்ளமும் ஏற்பட்டுள்ளது. கடல் நீரானது இந்தப் பகுதிக்குள் எந்த நேரத் திலும் உட்புகக் கூடும். மண்ணை அளவுக்கு அதிகமாக அகழ்ந்ததால் அந்தப் பிரதேசம் அபாயகரமான பிரதேசமாக மாறியுள்ளது. நாவல், ஈஞ்சு, பாலை, உயில், செதிந்தின், நன்னாரி என்று மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடிய தாவரங்களும் இங்கு அதிகமாக வளர்ந்திருந்தன.

**அழிக்கப்படும் உயிரினங்கள்**

மண் அகழ்வால் அனைத்து தாவர வர்க்கங்களும் அழிவுற நேர்ந்துள்ளது. உயிர்வாழ் இனங்களான பன்றி, உடும்பு, முயல், கீரி, பாம்பு என அனைத்தும் அப்பகுதியில் அற்றுப் போய்விட்டன. இதனால் இயற்கை யில் மாற்றம் ஏற்பட்டு வடமராட்சி கிழக்குப் பிரதேசமே கடலில் மூழ்கும் அபாய நிலை காணப்படுகிறது. அளவுக்கு அதிகமாக மண் அகழ்வதை தடுப்பதற்கு அந்தப் பிரதேச மக்கள் போராடிக் கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் அந்தப் போராட்டத்தாலும் ஒரு விடிவு இல்லாமல் மக்கள் தவிக் கின்றனர். மண் அகழ்பவர்களால் அந்தப் பகுதி மக்கள் உயிர் அச்சுறுத் தலுக்கும் உள்ளாகி இருக்கின்றனர்.

மண் அள்ளுபவர்களுக்கு அந்தப் பிரதேசத்தைப் பற்றியோ மக்களைப் பற்றியோ சிறு துளியளவு கூட அக்கறை இல்லை என்பது தெட்டத்தெளிவாக, வெளிப்படையாகத் தெரிகிறது. மகேஸ்வரி நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் கொள்ளைகளை வடக்கு மாகாண சபை சட்டரீதியாக தடுத்து நிறுத்தும் என்று வடக்கு மாகாண சுற்றுச் சூழலியல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் நடந்த கோண்டாவில் பாரவூர்தி சங்கத்தினருக்கும் அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடலில் தெரிவித்தார். "தனிநபரோ அல்லது தனியொரு அமைப்போ இயற்கை வளத்தை அனுபவிக்க எந்த உரிமையும் கிடையாது. நீதிமன்றம் மகேஸ்வரி நிதியத்துக்கு அறிவுறுத்தல் வழங்கிய பின்னரும் அவர்கள் மணல் கொள்ளையில ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**தகவல் தருபவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்**

இது தொடர்பில் தகவல் திரட்டியவர்கள் கூட உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவற்றை வெளியிடத் தயங்குகின்றனர். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் இவர்கள் மணல் அகழ்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட அளவு எவ்வளவு? இவர்கள் எவ்வளவு மண்ணை அகழ்கின்றார்கள் என்ற விவரங்களை வைத்திருக்கின்றார். ஆனால் தர மறுக்கின்றார். காரணம் உயிர் அச்சுறுத்தலே. நாம் இவை ஒன்றையும் கண்டு பின் வாங்கப் போவதில்லை. எமது வடக்கு மாகாண சபையின் ஊடாக சட்டத்துக்கு அமைவாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" என்று அமைச்சர் அங்கு தெரிவித்திருந்தார்.

அம்பன் பிரதேசத்துக்கு நேரடியாகச் சென்று அந்தப் பகுதி மக்களுடன் மண் அகழ்வு தொடர்பாக பேசியபோது "கிராம அபிவிருத்தி சங்கம் மூலம் சுற்றுச் சூழல் கனியவள அமைச்சிடம் முறையிட்டோம் பயன் இல்லை. எவர் எவரோ தாங்கள் கனிய வள அமைச்சைச் சேர்ந்தவர்கள் என்று கூறி எங்கள் பிர தேசத்துக்கு வந்து பார்த்துப் போகிறார்கள். அவர்கள் கனிய வள அமைச்சு அதிகாரிகள்தானா என்று எங்களுக்கு எப்படித் தெரி யும். நாங்கள் எல்லோரிடமும் கூறிக் கொள்வது நில மட்டத்துக்கு கீழே மண்ணை எடுக்காமல் தடுக்க வேண்டும் என்பதுதான். ஒரே இடத்தில் அளவுக்கு அதிகமாக மண்ணை எடுக்காமல் பரந்து குறிப்பிட்ட அளவு மண்ணை எடுக்கவும் இயற்கை மரங்கள் அழிப்பதைத் தடுக்கவும் வேண்டும் [illegible] இவற்றைக் கருத்தில் எடுப்பதாக இல்லை. இந்தப் பகுதியில் வளர்ந்து செழித்து நிற்கும் நாவற்காடு முற்று முழுதாக அழிக்கப்பட்டால் மண் கடலுக்குள் சென்று விடும். விடுதலைப்புலிகள் இருந்த காலப் பகுதியில் அளவுக்கு அதிகமான மண்ணை அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

**இயற்கையைப் பாதுகாக்க எவரும் இல்லை**

அந்தக் காலப் பகுதியில் மர வளர்ப்புத் திட்டம் நடைமுறையில் இருந்தது. விறகுக்காக தாவரங்களை அழிப்பதை விடுதலைப் புலிகள் தடுத்தனர். அதனால் மக்களும் இதனால் ஏற்படும் சூழல் விபரீதங்களை அறிந்து செயற்பட்டனர். ஆனால் இப்பொழுது எமது இயற்கையை பாதுகாக்க ஒருவரும் இல்லையே என்ற நிலை யில் எமது எதிர்கால சந்ததியின ரின் வாழ்வு கேள்விக் குறியாக மாறிவிட்டது" என்று தெரிவித்தனர்.

வடமாகாண சபை அமைந்திருக்கும் நிலையில் அந்தப் பிரதேச மக்கள் தமக்கு ஒரு விடிவு காலம் பிறக்கும் என்று நினைக்கிறார்கள். வட மாகாண சபை நிர்வாகம் இந்த விடயத்தில் முழு அக்கறை எடுத்து அந்தப் பிரதேசத்தைப் பாதுகாக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பிரதேசத்தில் இருந்து அளவுக்கு அதிகமாக மண் அள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணப்படவில்லை. பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளனர். கல்வியில் முன்னேற்றம் காணப்படவில்லை. அந்தப் பிரதேசம் மண்ணையும் இழந்து பிரதேச மக்களையும் இழக்கும் தறுவாயில் உள்ளது. எமது உரிமைக்காக போராடினோம். தோல்வி கண்டோம். இன்று இயற்கையை பாது காக்கப் போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.



பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் இவர்கள் மணல் அகழ்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட அளவு எவ்வளவு? அவர்கள் எவ்வளவு மண்ணை அகழ்கின்றார்கள் என்ற விவரங்களை வைத்திருக்கின்றார். ஆனால் தர மறுக்கின்றார். காரணம் உயிர் அச்சுறுத்தலே. நாம் இவை ஒன்றையும் கண்டு பின் வாங்கப் போவதில்லை. எமது வடக்கு மாகாண சபையின் ஊடாக சட்டத்துக்கு அமைவாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டால் பிரதேசம் அபிவிருத்தி அடைவது உறுதி

## இரணை இலுப்பைக்குளத்தில் நடந்த வரவேற்பில் டெனீஸ்வரன்



அராலி மத்தி ஊரத்தி கிராம செந்தமிழ் சிறுவர் கழகத்தின் சிறுவர் தின விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளரும், வட மாகாண சபை உறுப்பினரு மான இ.ஆனல்ட், சிறுவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குகிறார். (ஒ-23)

யாழ்ப்பாணம், நவ.6

தமிழ் - முஸ்லிம் மக்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் ஒற்றுமைப்பட வேண்டும். அப்போதுதான் அபிவிருத்தி நடவடிக்கை களை இலகுவாக முன்னெடுக்க முடியும். எமது பிரதேசத்தின் வெற்றியும் அதில் தான் தங்கியுள்ளது.

இவ்வாறு கூறினார் வட மாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

மன்னார் மடு வலயத்தினுள் அமைந்துள்ள இரணை இலுப்பைக் குளம் கிராம அபிவிருத்திச் சங்கமும் பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கமும் இணைந்து ஒழுங்கு செய்த வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தகவாணிப மற்றும் கிராமிய அபிவி ருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கான வரவேற்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் அந்தப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோயிலில் மரநடுகை இடம்பெற்றது.

தொடர்ந்து இரணை இலுப்பைக்குளம் ஸ்ரீபத்திர காளி அம்மன் கோயிலில் விசேட பூசை வழிபாடு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் இரணை இலுப்பைக் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சென்று அதிபருடன் பாடசாலையின் குறை நிறைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் கிராம அபிவிருத்தி மண்டபத்தில் மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது அவர் தெரிவித்ததாவது:-

இங்கு வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் பின்னணியில் தான் கிராமத்தின் அபிவி ருத்தி தங்கியுள்ளது. இனிவரும் காலங்களில் நாம் அனைவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒன்றையே வெளிக் கொணர வேண்டும்.

அப்படி இருந்தால்தான் எனது அமைச்சின் கீழ் பாகுபாடின்றி மக்களுக்கு சேவையாற்ற முடியும். மதங் கள் ஒருபோதும் தீமையை மக்களுக்குப் போதிப்பதில்லை. எனவே மதங்களினூடாக மக்களை நல் வழிப்படுத்த முடியும்.

மேலும், எனது பணிகள் இலகுவான முறையில் மக்களைச் சென்றடைய நான் திட்டம் ஒன்றை வகுத்துள்ளேன். அதற்கமைவாக விசேட குழுவை நிய மித்து கிராமங்களுக்கான தேவை மதிப்பீடு ஒன்றைச் செய்து கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் 4 பேர் கொண்ட செயற்பாட்டுக் குழுவை உருவாக்க வேண்டும்.

அதில் வயது முதிர்ந்தவர்கள், இளைஞர்கள் என இரு பாலாரையும் உள்ளடக்கியதாக கிராம அங்கத்தவர்கள் அனைவரும் இணைந்து ஒரு பொதுக் கூட்டத்தின் மூலம் தெரிவு செய்து தர வேண்டும். இவர் களினூடாக ஒவ்வொரு கிராம மட்டப் பிரச்சினை களையும் நான் அறிந்து மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியும் - என்றார். (ஒ-5)

# 37 பேர் இரத்ததானம்

வடமராட்சி, நவ.6

பருத்தித்துறை கிறிஸ்தவ இளைஞர் மன்றமும் முதியோர், குழந்தைகள் நலன் புரி பேணகமும் இணைந்து நடத்திய இரத்ததான முகாமில் 37 பேர் இரத்ததானம் செய்தனர்.

முதியோர், குழந்தைகள், நலன்புரி பேணகத்தில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜே.மவுலின் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியைச் சேர்ந்த மருத்துவர் எஸ்.வாசுதேவன் தலைமையிலான குழுவினர் நடமாடும் இரத்த வங்கியில் கடமையாற்றினர். (வ-8)

# வருடாந்த பொங்கல் விழா

வவுனியா கல்நாட்டியகுளத்திலுள்ள வேப்பங்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 21ஆம் திகதி சிறப்பான முறையில் இடம்பெறவுள்ளது.

ஆண்டுதோறும் சிறப்பாக இடம்பெறும் இந்தப் பொங்கல் விழா இந்த வருடமும் சிறப்பான முறையில் இடம்பெறுவதற்கு ஆலய நிர்வாக சபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும் பொங்கல் உற்சவத்தின்போது விநாயகப் பெருமானுக்கு விசேட அலங்காரம் செய்யப்படுவதுடன் பெருமான் உள்வீதி வலம் வருவார். தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (க-421)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை

ஐப்பசி-21 வியாழக்கிழமை 07.11.2013
திதி: சதுர்த்தி மு.ப.11.29 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ.07.19 வரை
சுபநேரம்: 07.35 - 09.05 வரை
இராகுகாலம்: 01.35 - 03.05 வரை

**மேடம்**: சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். சிலரின் ஆசை வார்த்தைகளில் ஏமாந்து விடாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் கௌரவப் பிரச்சினை வந்து நீங்கும்.

**இடபம்**: உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**: சகோதர வகையில் நன்மை கிடைக்கும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும்.. உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்** : அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**சிங்கம்**: இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**கன்னி**: எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாய மடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**துலாம்**: புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகம்**: உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். அடுத்தவர்களின் விவகாரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**தனுசு**: எதிர்காலம் பற்றிய பயம், வீண் பதற்றம் ஏற்படும். அநாவசியச் செலவுகளைத் தவிருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படும்.

**மகரம்**:எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கும்பம்**: விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**மீனம்**: நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் [illegible] கிடைக்கும். பிர[illegible] உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | 4 | | 7 | 5 |
| | 8 | | | 9 | 1 | 6 | | |
| | | 6 | | 3 | | | 2 | |
| 7 | 3 | | | 5 | | | 1 | |
| | 5 | 1 | 3 | | 2 | 4 | 9 | |
| | 6 | | | 4 | | | 8 | 3 |
| | 1 | | | 8 | | 3 | | |
| | | 8 | 2 | 1 | | | 5 | |
| 3 | 2 | | 4 | | 5 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 3 | 6 | 2 | 4 | 8 | 7 | 5 |
| 2 | 8 | 5 | 7 | 9 | 1 | 6 | 3 | 4 |
| 4 | 7 | 6 | 5 | 3 | 8 | 9 | 2 | 1 |
| 7 | 3 | 4 | 8 | 5 | 9 | 2 | 1 | 6 |
| 8 | 5 | 1 | 3 | 6 | 2 | 4 | 9 | 7 |
| 9 | 6 | 2 | 1 | 4 | 7 | 5 | 8 | 3 |
| 5 | 1 | 7 | 9 | 8 | 6 | 3 | 4 | 2 |
| 6 | 4 | 8 | 2 | 1 | 3 | 7 | 5 | 9 |
| 3 | 2 | 9 | 4 | 7 | 5 | 1 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் சனிக்கிழமை பாடசாலை இயங்கும்

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை கல்விச் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. தீபாவளியை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலைகள் யாவும் மூடப்பட்டன. அதற்குப் பதிலாகவே சனிக்கிழமை பாடசாலைகள் நடைபெறவுள்ளன. (ந-35)

## கந்தசஷ்டிக்கு பொருள் வாங்கச் சென்ற முதியவர் சாவு

தென்மராட்சி, நவ.6

கந்தசஷ்டி விரதத்துக்குரிய பொருள்களை வாங்குவதற்கு சைக்கிளில் சென்ற வயோதிபர் வீதியில் மயங்கி வீழ்ந்து சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கச்சாய் தெற்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமி பரராஜசிங்கம் (வயது -73) என்பவரே சாவடைந்தவராவார்.

இவரது சாவு தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். திடீர் மரண விசாரணை அதிகாரி சி.சி. இளங்கீரன் மூலம் இறப்பு விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாரைப் பணித்தார். (ந-9)

## வாசிப்பு வாரத்தை முன்னிட்டு



சுவாமி விவேகானந்தர் பற்றிய நூல்களை வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் மாணவர்களுக்கு வழங்கினார். இதன் போது பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவும் கலந்து கொண்டார். (அ)

## சனசமூக நிலையங்களைப் பதிவு செய்க

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதியநிர் வாகத் தெரிவும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னதாக சமாசத்தில் அங்கத்துவம் பெறாத சனசமூக நிலையங்கள் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சமாசச் செயலாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள 87 சனசமூக நிலையங்களில் 16 சனசமூக நிலையங்களே சமாசத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன. எஞ்சிய 71 சனசமூக நிலையங்கள் இன்னமும் அங்கத்துவம் பெறவில்லை என சமாசப் பிரதிநிதிகளுக்கும், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மிடையே அண்மையில் இடம்பெற்ற கலந்துரை யாடலில் தெரிவிக்கப்பட்டது. (ந-8)

## வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஒக்.5

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**கட்டுரை பிரிவு I**

1 ஆம் இடம்-க.ஹனுகி (மிருசுவில் அ.த.க.பாடசாலை), 2 ஆம் இடம்-யோ.வைஷ்ணவி (உசன் இராமநாதன் ம.வி.), 3 ஆம் இடம்-சி.டிலக்ஷி (உசன் இராமநாதன் ம.வி).

**பிரிவு II**

1 ஆம் இடம்-ஸ்ரீ.தனுசா (உசன் இராமநாதன் ம.வி.), 2 ஆம் இடம்- பீ.மேரிசிந்துஜா (மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை). 3 ஆம் இடம்-சி.துர்க்கா (உசன் இராமநாதன் ம.வி.).

**வாசிப்பு**

1 ஆம் இடம்-வி.பிரிந்துவி (உசன் இராமநாதன் ம.வி.). 2 ஆம் இடம்-கு.தேனுசா (மிருசுவில் அ.த.க.பாடசாலை). 3 ஆம் இடம்-க. வர்சனா (கரம்பகம் அ.த.க. பாடசாலை).

**பேச்சு**

1 ஆம் இடம்- ஜெ.றொ. அன்சன் (உசன் இராமநாதன் ம.வி.). 2 ஆம் இடம்-ச.டிலானி (மிருசுவில் அ.த.க.பாடசாலை). 3 ஆம் இடம்-சி.சாகித்தியா (மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை).

**கதை கூறல்**

1 ஆம் இடம்-த.அனாஜிகா (மிருசுவில் அ.த.க.பாடசாலை). 2 ஆம் இடம்-டி.கயல்விழி (கரம்பகம் அ.த.க.பாடசாலை). 3 ஆம் இடம்-ல.சங்கவி (உசன் இராமநாதன் ம.வி).

**சித்திரம்**

1 ஆம் இடம்-வ.நிதோயன் (உசன் இராமநாதன் ம.வி). 2 ஆம் இடம்-பே.கவியரசன் (உசன் இராமநாதன் ம.வி). 3 ஆம் இடம்-நிலட்சன் (உசன் இராமநாதன் ம.வி.).

**பொது அறிவு**

1 ஆம் இடம்- ம.கேதாரணி. 2 ஆம் இடம்-த.ஜீவிதா. 3 ஆம் இடம்-த.யது சோபன்.

**சிறுகதை**

1 ஆம் இடம்-ச.நிறேகா (உசன் இராமநாதன் ம.வி). 2 ஆம் இடம்-ச.சுகந்தினி (உசன் இராமநாதன் ம.வி.). 3 ஆம் இடம்-கு.தஷாயினி (உசன் இராமநாதன் ம.வி.) (ந-9)

**கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கிளிநொச்சி**
**கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கனப்பிக்கு (CANOPY) தற்போதைய நவீன முறையிலான லெவல் சீற் பொருத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. உரிய வேலையினை செய்து தர விரும்புவோர் அலுவலகக் கடமை நாள்களில் உரிய விவரங்களைப் பெற்று 12.11.2013 ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலையினை மூடிய தபாலுறையிலிட்டு சங்கத்தின் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (சி/13518) (4.6.3)

தலைவர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி.

**மணமகள் தேவை** யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 83 இல் பிறந்த கிரகபாவம் -1 சதய நட்சத்திரம், கும்ப ராசி 4 இல் சூரியன், செவ்வாய் களடாவில் PR உரிமையுடைய மணமகனுக்கு தகுந்த அழகான படித்த மணமகள் தேவை (தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்பு:077 989 8467 (39742) (4.6.3)

**மணமகள் தேவை** 1986 இல் ஜேர்மனியில் பிறந்து ஜேர்மனியிலே வசித்துவரும் வாய் பேச முடியாத மணமகனுக்கு அதே தகுதியுடைய அழகான மணமகள் தேவை. (39759)(4.6.3)
தொடர்பு:077 328 1179, 021 222 7038

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவலர் றோட் முத்துத்தம்பி ஒழுங்கையில் மூன்று பக்க சுற்று மதிலுடனும், நன்னீர் கிணற்றுடனும் அமைந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C13556)(4.6.3)
தொடர்பு:077 791 7611

**தேவை**

உலர் மீன் (கருவாடு) விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை.
கீழ்வரும் தகைமைகள் கருத்தில் கொள்ளப்படும்.
1.கொடுக்கல் வாங்கல் கணக்கினை பதிவு செய்யக்கூடியவராக இருத்தல்
2.சிங்கள மொழி பேசக்கூடிய ஆற்றல்
3.யாழ். மாநகரசபை எல்லைக்குள் அல்லது மிக அருகில் வசிப்பவராக இருத்தல் அத்துடன் மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம்
உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு 15.11.2013 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.
இல. 28, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.021 222 7897 (39547)(4.6.3)

**யா/நல்லூர் செண்.பெனடிக்ற் றோ.க.த.க.வித்தியாலயம்**
**புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுவிழா - 2013**



எமது மாணவச் செல்வங்களைவழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட எம் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எம்.ஞானதர்சினி அவர்களையும் ஆசிரியர்கள் திருமதி.மார்க்வெஸ்லி அலன் கத்தரின், க.சசிகரன் ஆகியோரையும் மாணவச் செல்வங்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**1. புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் : இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில்**
மு.கிசாளன் (158), பா.நதீசன் (162), ந.யுகேந்திரன் (162), சூ.துஷாயினி (170), ப.சிந்துஜன் (165), வி.கபிசன் (168), கு.நிருக்சன் (154), மோ.கிஷாந் (157), ஸ்ரீ.மதுசாளினி (155), தே.பியானுசி (163), ஜீ.திவ்வியா (155), ற.திசானா (163)

**2. 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் : இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசையில் :**
ய.பிரியங்கா(135), நி.கிருஷிகா (108), ரா.சோபிகா (125), த.தர்சிகா (131), ம.நகமகிஷா (139), பி.பிரியங்கா (116), த.டிலக்ஷிகா (143), ஜெ.கிரிஷாந் (153), கு.கோகுல்ராஜ் (138), ச.கனுஸ்காந் (144), ம.காருண்யன் (102), சி.கௌதமன் (141), ச.கஜானன் (136), யோ.தினுஸ் (117), ஸ்ரீ.யதுர்சன் (107)

**3. இடமிருந்து வலமாக மூன்றாவது வரிசையில் :**
து.பிரசாளினி (137), ந.வைஷ்ணவி (104), [illegible] (104), [illegible] (128), ம.சலோமி (127), ஏ.மிதுஷா (141), யோ.யதுர்சிகா (136), ஜெ.திலக்ஷன் (132), மு.சோபிதன் (141), ஜெ.அபிசன் (103), ச.[illegible] (147), உ.பிரவீனன் (117), கே.கிஷோத் (123), செ.அபிஷாக் (108), ர.யூட்லக்ஷன் (109)

(39549)(2.6.3)

- வாழ்த்துவோர் பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2014

கீழேகுறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ்.பல்கலைக்கழகத்துடன் தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் /ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2013 நவம்பர் 30ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. **பாவனைப் பொருள்கள் காகிதாதிகள்**
   - 1.1 எழுது பொருள்கள் காகிதாதிகள்.
   - 1.2 வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
   - 1.3 சுகாதாரசேவை வழங்கல் தும்புதடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம் முதலியன.
   - 1.4 மழைக்கோட்டுக்கள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

2. **புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**
   - 2.1 அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதிமுத்திரைகள்.
   - 2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
   - 2.3 புத்தகங்களையும், பருவ வெளியீடுகளையும் கோர்த்தல்.

3. **தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**
   - 3.1 அலுவலகதளபாடம் - மரம் உருக்கு – கணினி மேசை, கதிரைகள்.
   - 3.2 அலுவலக உபகரணங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள்,நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
   - 3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.
   - 3.4 கணினிஷூற்றும் கணினி உபகரணங்கள் உட்படமின்னியல் பொருள்கள்.
   - 3.5 தகவல் தொழில்நுட்பவன் பொருள் மென்பொருள்களுக்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
   - 3.6 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
   - 3.7 தொலைபேசிஉபகரணங்களும் கையடக்கதொலைபேசிகளும் வழங்கல்.
   - 3.8 கணினிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

4. **பொறியியல் பொருள்கள்**
   - 4.1 சகல வகையான கட்டட நிர்மாணப் பொருள்கள்.
     - a. பெயின்டுகள் வாணிஸ், தொடர்பானபொருள்கள்.
     - b. கட்டடப் பொருள்கள் (மணல் செங்கல், உலோகம்,சுண்ணாம்பு, கூரைசார்ந்த பொருள்கள் முதலியன).
     - c. இயந்திரக் கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
     - d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
     - e. மரங்கள் - தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
     - f. பிளாஸ்ரிக்,பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
     - g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருள்கள் கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்,
     - h. குளியலறை பொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.

5. **மின்னியல் பொருள்கள்**
   மின்சாரசாதனம் உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களும்.

6. **ஆய்வு கூட பொருள்கள்/சாதனங்கள்.**
   - 6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
   - 6.2 ஆய்வு கூட இரசாயனபொருள்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

7. **வாகனபராமரிப்பு**
   - 7.1 டயர் ரியூப்புகள், பற்றரிகள்.
   - 7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
   - 7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
   - 7.4 மோட்டார் வாகனஉள்ளகவேலைகள்.
   - 7.5 மோட்டார் வாகனங்கள் வாடகைக்குவழங்குதல்.

8. **பொதுசேவைகள் வழங்கல்கள்**
   - 8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
   - 8.2 விளையாட்டும்ற்றும் நலன்புரிபொருள்கள்.
   - 8.3 புடைவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
   - 8.4 தோட்டவேலைகளுக்கான பசளைகள், இரசாயணங்கள் கருவிகள்.
   - 8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்படபிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணினி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
   - 8.6 உருக்குமரத் தளபாடதிருத்தவேலைகள்.
   - 8.7 கதிரைகள் பின்னுதல்.
   - 8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
   - 8.9 உடைகளைச் சலவைசெய்தல்.
   - 8.10 சுத்திகரிப்பு சேவைவழங்கல்.
   - 8.11 பாதுகாப்பு சேவைவழங்கல்.

9. **எந்திரவியல் சேவைகள்.**
   - 9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
   - 9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட
   - 9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல
   - 9.4 குளிரூட்டிதிருத்துதல்.
   - 9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்தவேலைகளும்.
   - 9.6 மின்சார இணைப்புவேலைகள்.
   - 9.7 நீர் விநியோகவடிகாலமைப்புவேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
   - 9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்தபொருத்துக்கள் செய்தலும்,பொருத்தலும்.
   - 9.9 கட்டடங்கள் /கட்டடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திரசாதனங்களுக்கான) உசாத்துணைசேவைகள்.
   - 9.10 மின்சாரஉசாத்துணைசேவைகள்.
   - 9.11 நிலையாகப் பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் /தச்சுவேலை.
   - 9.12 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
   - 9.13 கறையான் /பீடைகள் ஒழிப்பு வேலைகள்.
   - 9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா மற்றும் காவலாளிகள்
   - 9.15 கணியஅளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தலும்,பராமரித்தலும்.

(C/13546)(2.6.3)

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவுசெய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிவிண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொருகடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் “வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2014”எனக் குறிப்பிட்டுபதிவுத்தபால் மூலம் சகலவிண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   ❖பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் நிதியாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனமுகவரியிடல் வேண்டும்.
2. ஒவ்வொருவழங்கல் /சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேணடும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக் கட்டணமாகரூபா 2,000/= பெறுமதியானகாசுக் கட்டளை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரிற்கு பெறப்பட்டு யாழ்.தபாற் கந்தோரில் மாற்றக் கூடிய தாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. விலைமனுக்கள் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தேகோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.
4. கோரப்படும் போது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள்/சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.
5. விண்ணப்பதாரர் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வேலைகளைச் செய்ய அந்த மாவட்டத்திலுள்ள தமது கிளை/ பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரபதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.
6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலைசெய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.7 இற்குமட்டும்) தருக.
7. சேவைகளை/வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு சிரேஸ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்புகொள்ளவும்.

தொ. பே. இல. 0213205875.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
### வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்களைப் பதிவுசெய்தல் - 2014

01. தனிப்பட்டதகவல்கள்
    1.1 முழுப்பெயர் :.......................................................................................
    1.2 தே.அ.அ. இல :.......................................................................................
    (தேசியஅடையாளஅட்டையில் உள்ளபடி)
    1.3 விலாசம்:.......................................................................................
    1.4 நிரந்தரதொலைபேசி இல:......................கைத் தொலைபேசி
    இல:......................தொலைநகல்:.......................................

02. வியாபாரதகவல்கள்
    2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:.......................................................
    2.2 பதிவு இல:.......................................................................................
    2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:.......................................................
    2.4 விலாசம்:.......................................................................................
    2.5
    நிரந்தரதொலைபேசிஇல:......................கைத்தொலைபேசிஇல:......................தொலைநகல்:
    ..............................................
    2.6 மின்னஞ்சல் முகவரி:.......................................................................
    2.7 மாவட்டம்:.......................................................................................
    2.8 பிரதேசசெயலர் பிரிவு:.......................................................................

குறிப்பு: வியாபாரபதிவுசான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
இணைக்கப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

03. மேலதிகவிவரங்கள்
    3.1 வங்கியாளரின் பெயர் :.......................................................................
    3.2 கிடைக்கக்கூடியகடன் வசதிகள் :.......................................................
    3.3 ICTADபதிவு இல :.......................................................................
    (எந்திரவியல் சேவை 9.3 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறு ஆயிரம் மட்டும்) இற்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்க மட்டுமே தகுதியுடையவராவார்.

04. வழங்கல் சேவைகளுக்கான விவரங்கள்.

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

05. வழங்கப்படும் பொருள்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்

நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :.......................................
பெயர் :.......................................    திகதி :.......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவனால்

# 4 மாணவர்களுக்கு தளபாடம் அன்பளிப்பு



தென்மராட்சி, நவ.6
சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவன் அன்றூ ராஜு கல்லூரியில் கற்கும் 4 மாணவர்களுக்கென 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களைவழங்கியுள்ளார். இந்தத் தளபாடங்கள் திங்கட்கிழமை கல்லூரியில் நன்கொடையாளரின் தாயாரினால் மாணவர்கள் மற்றும் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டன. இந்தத் தளபாடங்கள் மாணவர்களால் அவர்களது வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.
(ந-9)

# விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி, நவ.6
வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களிலும் உள்ள பகுதி நுட்பமுறை ஊழியர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.
இதற்கென அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் பணியாற்றும் தகுதி வாய்ந்த ஊழியர்களிடமிருந்து அமைச்சு சுற்றறிக்கையின் மூலம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.
பகுதி நுட்பமுறைக்குட்பட்ட தச்சுத் தொழிலாளி, சமையலாளர், ஆய்வுகூட உதவியாளர், மேசன், நீர்க்குழாய் பொருத்துநர், குழாய் இயக்குநர், தையலாளர் ஆகிய 7 பதவிகளுக்கான வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன.

# பெற்றோர் சந்திப்புக்கு பெரும் வரவேற்பு

## தென்மராட்சி கல்வி வலயத்தில்

தென்மராட்சி, நவ. 6
தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெற்றோர் சந்திப்பு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அத்துடன் அத்துடன் இத்தகைய சந்திப்பை தொடர்ந்து நடத்துமாறு கோரிக்கைகளும் விடுக்கப்பட்டு வருகின்றன.
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிக்க மாணவரின் கல்வி அடைவு மட்டம் தொடர்பாக பெற்றோர்- மாணவர்-ஆசிரியர்- அதிபர் ஆகியோரை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரியர்கள் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடல் நடத்த வலயக் கல்விப் பணிப்பாளரினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
வலயத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்புகள் நடைபெறும் 31 பாடசாலைகளில் 23 பாடசாலைகளில் மட்டும் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பெற்றோர் சந்திப்பு இடம்பெற்றது. பெற்றோர் முன்னிலையில் மாணவன் கடந்த இரண்டு தவணைப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகள்தொடர்பாக பாட ஆசிரியர்களால் பெற்றோருக்கு விரிவாக விளக்கப்பட்டமை, உயர் அதிகாரிகளால் அனைவரிடமும் அது குறித்து விளக்கம் கோரப்பட்டமை என்பன தம்மையும்தமதுபிள்ளையின்கல்வி வளர்ச்சியில் அக்கறை கொள்ள வைத்துள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டம்பெற்றோரிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதால் தொடர்ந்தும் இவ்வாறான சந்திப்புக்களை நடத்துமாறு வலயக் கல்வி அலுவலகத்திடம் தாம் கோரியுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.
இது தொடர்பாக வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இந்தத் திட்டம் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் போதிய அவகாசம் இல்லாததால் எட்டுப் பாடசாலைகளில் பெற்றோர் சந்திப்பை ஏற்படுத்த முடியவில்லை எனவும், அடுத்த வருடம் முதலாம் தவணை தொடக்கம் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களையும் இரண்டாம் தவணை தொடக்கம் ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களையும் சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் பெற்றோரின் ஒத்துழைப்பு மற்றும் கோரிக்கைகள் தம்மை ஊக்குவிப்பதாகவும் தெரிவித்தார். (ந-9)

“ ”

**வலயத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்புகள் நடைபெறும் 31 பாடசாலைகளில் 23 பாடசாலைகளில் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பெற்றோர் சந்திப்பு இடம்பெற்றது.**

# நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத்துறை, நவ.6
யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்துக்கு புதிய நிர்வாக செயற்குழுத் தெரிவு அண்மையில் நடைபெற்ற கத்தோலிக்க ஆசிரியர் தின நிகழ்வில் இடம்பெற்றது.
பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்- பங்கிராஸ் (அதிபர் சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை), செயலாளர்- திருமதி யூஜின் யூலியஸ் (உப அதிபர் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), பொருளாளர்- திருமதி பப்சி மரியதாசன் (கோப்பாய் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்), உபதலைவர்- எடிசன் (அதிபர் மிருசுவில் றோ.க.பாடசாலை), உப செயலாளர்- திருமதி சந்திரிக்கா பிரபாகரன் (ஆசிரியர் முழங்காவில் ம.வி.)
நிர்வாக உறுப்பினர்களாக திருமதி வசந்தி ஆனந்தராஜா, திருமதி மேரி யோசெப்பின், திருமதி யோன் அரியதாஸ் மல்லிகா, செல்வி யூக்கிறிஸ்ரின், திருமதி ஞானப்பிரகாசம், சாந்தி சின்னத்துரை, ஜீன் அடைக் கலம், திருமதி றுகுணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
(ந-135)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி ம.மகேந்திரன் அவர்களின்
அன்புச் சகோதரி
திருமதி இந்திராதேவி சிவலோகநாதன் அவர்கள்
29.10.2013 அன்று சிவபதமடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(39747)
(12.6.3)
ஆசிரியர் கழகம், யா/சன்மார்க்க ம.வி.

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி ம.மேர்சி சுகந்தினி
அவர்களின் அன்புத் தந்தையார்
சுவாம்பிள்ளை பேனாட் லூசியன்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், காரைநகர். (39750)(3.6.4)

## மரண அறிவித்தல்



### இராமசாமி கிருஸ்ணசுந்தரம்

யாழ்.கொட்டடி, சீனிவாசகம் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி கிருஸ்ணசுந்தரம் 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி தம்பதியரின் அன்பு மகனும், துரைராசா தம்பதியரின் அன்பு மருமகனும், றஞ்சிதத்தின் அன்புக் கணவரும், கோவிந்தராஜனின் (பிரணவன் - யாழ்/இந்துக்கல்லூரி மாணவன்) அருமை அப்பாவும், காலஞ்சென்றவர்களான ஷன்முகசுந்தரம், வைரவ சுந்தரம் மற்றும் விஜயலக்ஷ்மி, றோகினி, வரதலஷ்மி (ராணி), காந்தலக்ஷமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பம், ஞானேஸ்வரி, சாந்தினி, நகுலேஸ்வரி, சாந்தா, சந்திரன், இராஜாராம், சுகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று ந.ப.12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீனிவாசகம் றோட், கொட்டடி,
யாழ்ப்பாணம். (3966) (12.6.3)
தகவல்:
சகோதரர்கள்.


## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்




யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சுப்பிரமணியம் நடராசலிங்கம் அகில இலங்கை சமாதான நீதிவானாக கடந்த மாதம் 22 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த இவர் யாழ். மாவட்ட நீதிவான் எ.எ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ந-14)

◆ ◆ ◆



கோப்பாய் பிரதேச விவசாய சம்மேளனத்தின் செயலாளர் அமிர்தலிங்கம் அகன் கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.
கோப்பாய் தெற்கு, இராஜவீதியைச் சேர்ந்த இவர், கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம் மற்றும் யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் முன்னாள் நிகழ்ச்சித் திட்ட அலுவலரும் ஆவர்.
(ந-14)

◆ ◆ ◆



அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ்.கிளையின் முகாமையாளர் கந்தையா நடராஜமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதவானாக நாவலப்பிட்டி மாவட்ட நீதிமன்ற நீதிபதி எல்.கே.மஹிந்த முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.
நாவலப்பிட்டி தர்மபால மாவத்தையைச் சேர்ந்தவரும், யாழ்.பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டதாரியுமான இவர் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளராக 15 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர் மேம்பாட்டு பிரிவின் [illegible] உத்தியோகத்தராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-14)

## கனமழை பெய்யாததால் விவசாயிகள் கவலை

வலி.வடக்கு, நவ.6
யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு நாள்களாக கடும் மழை பெய்யும் என பொது மக்கள் எதிர் பார்த்துக் காத்திருக்கின்ற போதிலும் மழை பெரியளவில் பெய்யாத நிலைமை காணப்படுகின்றது.
குறிப்பாக யாழ்.மாவட்ட விவசாயிகள் தமது நெற் பயிர்களுக்கு போதியளவு மழை கிடைக்கவில்லையென்ற கவலையுடன் காணப்படுகின்றார்கள்.
யாழ்.மாவட்டத்தில் மழையை நம்பி ஏராளமான வயல்களில் நெல் விதைக்கப்பட்டு முளைவிட்டு பயிர்களாகியுள்ள நிலையில் போதிய மழையின்மையால் பயிர்கள் வாடும் நிலையில் இருந்தன.
தற்போது கடந்த இரண்டு நாள்களாக விட்டு விட்டு மழை பெய்வதால் பயிர்கள் வாடும் நிலை மாறி இன்னும் சில நாள்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய நிலமை ஏற்பட்டுள்ளமை விவசாயிகளிடத்தில் சற்று ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.
ஆனாலும் பயிர்கள் முளைத்துவரும் நிலையில் அதற்கு உரவகைகள் விசிறுவதற்கு வேண்டியளவு நீர் வயல்களில் தேங்கிக் காணப்படாமை விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி வருகின்றது. (ந-86)


## மரண அறிவித்தல்



### நன்னித்தம்பி ஆச்சிக்குட்டி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி ஆச்சிக்குட்டி நேற்றுமுன்தினம் (04.11.2013) திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நன்னித்தம்பியின் பாசமிகு மனைவியும், மகேந்திரன், நாகேந்திரன், கனகேந்திரன், யோகேந்திரன், ஜெயலட்சுமி, புஷ்பராணி ஆகியோரின் அன்புத் தாயும், தம்பித்துரை, யோகேஸ்வரன், அஞ்சலிதேவி, சந்திரா, ஜானகி, கங்கா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றோட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.
தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்திலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியோரில் 7 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். ஜெ.ஜனிகா-170, கோ.இறையின்பன் போல்-164, வி.ரிஷானா -163, க.ஹேமவதனி -161, க.தருண்நிலா-159, த.அஸ்வினி-154, க.வர்ஷிகன்-156 ஆகியோரே சித்தியடைந்தவர்களாவர். (ந-433-400)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22.11.1934

மறைவு
31.10.2008

திருமதி
சுந்தரகாந்தா
(மல்லி)
தம்பிராசா



திதி: திருதியை 06.11.2013

ஐந்தாண்டுகள் இமைப்பொழுதில் கடந்ததம்மா
தீராது எம்கவலை தேம்புகின்றோம்
உமை நினைத்து
உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை
இறைஞ்சி நிற்கும்

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(39760)(3.4.7)

அன்புக் கணவர்
சி.தம்பிராசா

## நாகம் தீண்டியது வயோதிபரை

தோட்ட வேலைக்குச் சென்ற வயோதிபர் நாகபாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை கைதடி தெற் கில் இடம்பெற்றது.

பாம்புக் கடிக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் (வயது-74) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (ந-9)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி
அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் அரியகுட்டி
பொன்னம்பலம்



தோற்றம்
22.07.1940

மறைவு
07.10.2013

கடந்த 07.10.2013 இல் சிவபதமடைந்த சுருவில், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி பொன்னம்பலம் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி ஆத்மசாந்திக் கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (06.11.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது சகலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

401/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(39743)(45.6.3)

குடும்பத்தினர்.
பொ.அதீசன் (மகன்)

# தமிழர்களின் உணர்வை மதிக்காது இந்திய அரசு

## அடித்துக் கூறுகின்றது 'ஐக்கியப்படுத்துவோம் அமைப்பு'

கொழும்பு,நவ.6

பொதுநலவாய மாநாடு விடயத்தில் இந்தியா நிச்சயமாக இரு வேடம் போடும். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழர்களின் உணர்வை ஒருபோதும் மதிக்க மாட்டார். நிச்சயமாக மாநாட்டில் பங்குபற்றியே தீருவார் என்று அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பு நேற்றுமுன்தினம் எதிர்வு கூறியுள்ளது.

மன்மோகன்சிங்மாநாட்டில் கலந்து கொள்ளாவிடினும், அது தமிழக வாக்குகள் காங்கிரஸுக்கு குறைந்து விடும் என்றகாரணமேஒழிய தமிழர்களின் உணர்வை மதித்தல்ல என்று இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இது குறித்து தெரிவிக்கையில்,

பொதுநலவாய மாநாடு விடயத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக எதிர்ப்பை விடவும் தேச நலனுக்கே முக்கியத்துவம் அளித்து முடிவுகளை எடுப்பார்.

இலங்கையோ, இந்தியா மாநாட் டில் பங்குகொள்ளாவிடின் சம்பூர் உடன்படிக்கை, டாடா நிறுவனம், யாழ். ரயில் பாதைக்கான உடன்படிக்கை மற்றும் இந்தியன் ஒயில் கொம்பரேஷன் போன்ற அனைத்து வர்த்தக உடன்படிக்கைகளும் இரத்துச் செய்யப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் எப்படியும் இந்தியப் பிரதமர் வரவே முயற்சிப்பார். அதுமட்டுமல்ல, அவர் எப்போதுதான் தமிழர்களின் உணர்வை மதித்து செயற்பட்டுள்ளார்? அப்படி அவர் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாவிடினும், அது தமிழக வாக்குகளையே கவனத்தில் கொள்ளப்பட்டதொரு முடிவாக இருக்கும். அவர் தமிழகத்தின் எதிர்ப்பையும் மீறி இங்கு வருகை தருவாராயின், நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் நிச்சயமாக மண் கவ்வும். இதை எண்ணியே மன்மோகன் செயற்படுவாரே ஒழிய தமிழர்களின் உணர்வை மதித்து அவர் முடிவுகளை எடுக்க மாட்டார் என உறுதியாகக் கூற முடியும்.- என்றார்.

இது தொடர்பில் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்ததாவது-

மன்மோகன் சிங், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கவனத்தில் கொண்டே செயற்படுவார் என எவ்வித சந்தேகமும் இல்லாமல் எம்மால் கூற முடியும். ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு எதிராக பிரேரணையை முன்வைத்த போதும், காப்பாற்றியது இந்த மன்மோகனே. இதனால், தமிழர்களின் எதிர்ப்பை சமபாதிக்க வேண்டியேற்படும் என்று தெரிந்தவுடன் இலங்கைக்கு எதிராக வாக்களித்து அனைவரையும் ஏமாற்றி விட்டார்.

தற்போதும், இவர் இது போன்ற செயலையே செய்வார். மன்மோகன் நிச்சயமாக மாநாட்டில் பங்குபற்றியே தீருவார். பின்னர் தமிழகத்திற்கு 'நான் இலங்கையை கடுமையாக இறுக்கியுள்ளேன்' எனக் கூறி ஏமாற்றப்பார்ப்பார். இதுவே மன்மோகனின் இரட்டை வேடம் ஆகும்.

இந்த இரட்டை வேடத்தை அனைத்துத் தமிழர்களும் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும்' என்றார்.

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பலம் மிக்க மனிதராக மாற்றியதே இந்த இந்தியாதான். இவர்களே இறுதிப் போரின் போது ஆயுதங்களை வழங்கி உதவி செய்தார்கள்.

மன்மோகன் சிங்கிற்கும், சோனியா காந்திக்கும் மஹிந்தவை பகைத்துக் கொள்ள முடியாத ஒரு நிலை காணப்படுகிறது. அத்தோடு, மாநாட்டுக்கு வந்தால் தமிழர்களுக்கு பதில் கூறவேண்டியுள்ளது. இதையெல்லாம் கருத்திற்கொண்டே மன்மோகன் ஒருநாளைக்கு மட்டும் இலங்கைக்கு பயணம் செய்யப்போவதாக தெரிவித்துள்ளார்- என்றார். (ச-சி)

நீங்கா நினைவலைகளில்...

8 ஆம் ஆண்டு 27 ஆம் ஆண்டு 37 ஆம் ஆண்டு



அமரர்
சின்னப்பு முருகேசு
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)
ஆண்டவன் அடியில்
17.08.2005

அமரர்
முருகேசு ஜெயகாந்தன்
ஆண்டவன் அடியில்
06.02.1986

அமரர்
முருகேசு அன்னலட்சுமி
ஆண்டவன் அடியில்
16.03.1976

அப்பா, அம்மா, சோதரா! உங்களை மறக்கவில்லை
மனமும் தான் ஆறவில்லை. கண்ணீரைக் காணிக்கையாக்கி நிற்கும்
ரத்தத்தின் உறவுகள்
ஓம் சாந்தி!!!

பருத்தியோலை, கந்தரோடை,
சுன்னாகம்.

(39763)(2.6.3)

- குடும்பத்தினர்.

## கரு தலைமையில் தலைமைத்துவச் சபை

### தேசிய தலைவராக ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதைக்குக் கொண்டுசெல்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தலைமையிலான 9 பேரடங்கிய தலைமைத்துவச் சபை நேற்று முன்தினம் உருவாக்கப்பட்டது. கட்சியின் தேசியத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார் கட்சியின் செயற்குழுவால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் தலைமைத்துவச் சபைக்கு மாற்றப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் மாலை கூடிய ஐ.தே. கவின் செயற்குழு இதற்கு அனுமதியளித்துள்ளது.

இந்தத் தலைமைத்துவச் சபை உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப் பினர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ, திஸ்ஸ அத்தநாயக்க, மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, தலதா அத்துகோறளை, ருவான்விஜயவர்தன, கபீர்ஹாஸிம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, இணக்கம் எட்டப்படாத யோசனைகளை கட்சியின் செயற்குழுவிற்கு அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் கருவிலேயே இடப்படும் சிறுவர் வாழ்வுக்கான அடித்தளம்

## ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கருத்து

அச்சுவேலி, நவ.6

"சிறுவர்களின் வாழ்வுக்கான அடித்தளம் தாயின் கருவிலேயே இடப்படுகின்றது. அதனைக் கருத்தில் கொண்டு கருவுற்ற தாய்மாரை மனக் குழப்பத்துக்கும் பிரச்சினைக்கும் உள்ளாக்காமல் ஆரோக்கியமான நிலையில் குடும்பத்தினர் கவனிக்க வேண்டும். இந்தப் பருவத்தில் ஏற்படும் மாறுபட்ட நிலைப்பாடுகள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வையே சிதைத்து விடுகின்றன"

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்.

ஆவரங்கால் லிட்டில் மாஸ்ரர் முன்பள்ளியின் மாணவர் கலை விழாவில் விருந்தினராக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சமூகத்தில் அண்மைக் காலத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் குழந்தைகளையும் கர்ப்பிணித் தாய்மாரையும் குழப்பத்துக்கு உள்ளாக்குவதோடு இயல்பு நிலையில் குழந்தைகளை வளர விடாமல் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி விடுகின்றன.

குழந்தையின் எதிர்காலம் தாயின் கர்ப்பத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதனை குடும்பத்தினரும் சமூகமும் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த வகையில் கர்பிணித் தாய்மாரை மனக்குழப்பம். பிரச்சினைகளுக்கு உள்ளாக்காமல் ஆரோக்கியமான நிலையில் பராமரிக்க வேண்டும். இந்த நிலை அண்மைக் காலத்தில் அருகிக் காணப்படுகின்றது. இதனை எல்லோரும் அவதானிக்கக் கூடிய தாக உள்ளது. இது சிறுவர்களின் வளர்ச்சிக்கு குந்தகமாக அமைந்து விடு கின்றது.

குழந்தைகளுக்கான வளர்ச்சிக்கு மகிழ்ச்சியான குடும்பம் அவசியம். குழந்தையின் உடல்உளவளர்ச்சி சமூகத்தால் தீர்மானிக்கப்படுகின்றது. பாலர் முன்பள்ளிகளில் மகிழ்ச்சிகரமான விளையாட்டுகள் ஊடாக கற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

குழந்தைகள் ஆரம்ப நிலையில் பின்பற்றல்கள் மூலமே கற்றலை மேற்கொள்கின்றன. அதற்கேற்ற வகையில் பெற்றோரும்- முன்பள்ளி ஆசிரியர்களும் முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். திருத்தமான எண்ணக் கருவை சிறுவர்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் செய்யும் சிறிய தவறுகள் கூட சிறுவர்களால் பின்பற்றப்படும்.-என்றார். (வ-11)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு

வடமராட்சி, நவ.6

பருத்தித்துறை நகரசபை நடத்திய உள்ளூராட்சி வார விழாவில் 9 சாதனையாளர்கள் சபையால் கௌரவிக்கப்பட்டனர்.

சபைத்தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டார்.

கௌரவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் (விளையாட்டு), அ.நடராசா (அரசசேவை), ஆசிரியர் பா.ரகுவரன் (எழுத்துத்துறை), திருமதி சிவமலர் சுப்பிரமணியம் (அறநெறி), யோ.வசீகரன் (நாடகம்), பி.பிரபாகரன் (கராட்டி)

பி.சிவானந்தராஜா (ஆணமுகன்), எஸ்.தீபானந் (சமூக சேவை), என்.நிரஞ்சன் (துடிப்பான சேவை)

கௌரவிக்கப்பட்டவர்களில் எஸ்.தீபானந், என்.நிரஞ்சன் ஆகிய இருவரும் பருத்தித்துறை நகரசபை உறுப்பினர்களாவர். (வ-8)

# சமூக சேவை அலுவலர்களுக்கு வதிவிடப் பயிற்சி

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர், மாவட்ட சமூக சேவைகள் பிரிவு மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்களுக்கு மூன்று தினங்கள் வதிவிடப் பயிற்சி நெறியை நடத்தவுள் ளனர்.

வவுனியா தவசிக்குளத்திலுள்ள சேவாலங்கா நிறுவனப் பண்ணை அலுவலகத் தில் குறித்த பயிற்சி நெறிகள் எதிர்வரும் 19.20.24ஆகிய தினங்களில் நடத்தப்படவுள்ளன. (வ-9)

அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவன் செல்வன்
தவச்செல்வன் தர்ஷன்
அவர்கள் 2013ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய 19 மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கச்சாய் அ.த.க.பாடசாலை, கொடிகாமம். (29691)(12.6.3)

# பிரதேசங்களின் எல்லைகளை மாற்றும் பெயர்ப் பலகைகள்

## மக்கள் விசனம் தெரிவிப்பு

பளை, நவ.6

பிரதேச எல்லைகளில் மாற்றம் ஏற்றப்படும் வகையில் பெயர்ப் பலகைகள் போடப்பட்டமை குறித்து பிரதேச மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகார சபை ஏ-9 வீதி அகலிப்பின் பின்னர் பிரதேசங்களை குறிக்கும் பெயர்ப் பலகைகளை நட்டுவருகிறது. .

அந்த வகையில் முகமாலை பகுதிக்குரிய பெயர்ப் பலகை இத்தாவிலில் நடப்பட்டுள்ளது. கிராம அலுவலர் பிரிவு எல்லைகள் ரீதியாக எழுது மட்டுவாழ் - கிளாலி வீதி தொடக்கம் முகமாலை தேவாலயத்திலிருந்து 200 மீற்றர் தூரம் வரையும் அந்த இடத்திலிருந்து கச்சார்வெளி தொடக்கம் 200 மீற்றர் முன்பாகவும் இத்தாவில் கிராமம் அமைந்துள்ளது. எனவே கிராமங்களின் எல்லைகளில் மாற்றம் ஏற்படும் வகையில் பெயர்ப்பலகைகள் போடப்பட்டுள்ளமை குறித்து அதிருப்தி தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-9)

# நோயாளர்களுக்கு விழிப்புணர்வு உரை

சாவகச்சேரி வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு நோய்கள் பரவாமல் தடுக்கும் முகமாக விழிப்புணர்வு கருத்துரைப்பு நேற்று அந்தந்த விடுதி வைத்திய அதிகாரிகளால் நடத்தப்பட்டது.

மழைகாலம் ஆரம்பித்துள் ளதால் உணவுத் தொகுதிகள் மூலம் பரவக்கூடிய தொற்று நோய்களான வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், ஈரல் அழற்சி போன்ற நோய்களால் பாதிக்கப்படும் நோயாளர்கள் சிகிச்சை பெற விடுதிகளில் அனுமதிக்கப்படுவர்.

இந்த நிலையில் ஏனைய நோய்களால் பீடிக்கப்பட்டு விடுதிகளில் சிகிச்சை பெற்று வருவோருக்கு அந்த நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. எனவே விடுதிகளில் தங்கியிருப்போர் சவர்க்காரம் அவசியம் பாவிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டது. அத்துடன் அனைத்து விடுதி நோயாளர்களுக்கும் சவர்க்காரம் வழங்கப்பட்டன. (வ-9)

AFTER A/LEVEL'S
Develop your Career Style....
With Special Offers @ ESOFT
AutoCAD



AUTOCAD 2010
2D Duration : 20 hours
முழு நேர செய்முறைப் பயிற்சி
3D Duration : 20 hours
முழு நேர செய்முறைப் பயிற்சி
DISCOUNT 25%

Diploma in Hardware & Networking
DiHN
Duration : 3 Months

பாட உள்ளடக்கம் HARDWARE
- The total computer system
- Introduction to PC Hardware
- Identify hardware components
- Motherboard components & bus architecture
- The CPU evolution & architecture
- Types of RAMs
- Identifying different types of expansion cards
- Assembling and disassembling of different types of PC's
- Hard disk architecture
- Preparing the hard disk drive to install system software
- Installing and configuring Windows 2003,Windows XP & Ubuntu
- Troubleshooting & Maintainance

பாட உள்ளடக்கம் NETWORK
- Introduction
- Types of Network
- Transmission media
- Network Devices
- IP Configuration
- Sever Installation & Configuration 98/2003/2007
- Trouble Shooting & Managing
- Connecting to the Network

With Practical Concept

சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கற்கைநெறி முடிவில் ஊதியத்துடனான 3 மாதகால சிறப்புப் பயிற்சி...!

NEW BATCHES 9:00am
10th Nov 2013
20th Nov 2013
SMS <Your Name> Space <Course> to 077 990 56 11

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142
HOTLINE : 077 309 9 308
(C/13564)

வீடு வாடகைக்குத் தேவை
பரமேஸ்வரா சந்திக்கு அருகில் நீண்ட கால வாடகைக்கு வீடு தேவைப்படுகின்றது. வாடகைக்கு வீடு கொடுக்க விரும்புவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (சி/13586)(2.6)
தொடர்பு: 077 431 9732

காணி விற்பனை
திருநெல்வேலி பாம் ஸ்கூலுக்கு மேற்குப் புறத்தில் (100 யார் தூரத்துக்குள்) கலைவாணி வீதியில் 12' அடிப் பாதை கொண்ட 3 ஆவது காணி நான்கு பரப்பு (4) உடன் விற்பனைக்குண்டு. கருணாலயத்திற்கு மிக அருகிலுள்ளது. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (39769)(2.6)
தொடர்பு: 075 767 6739, 077 666 0631

உடனடி வேலைவாய்ப்பு
Innovage International(Pvt) Ltd.
சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Innovage நிறுவனத்தின் புதிய கிளை வவுனியாவில் ஆரம்பம்.
தகைமை: O/L or A/Lபடித்த ஆண்/பெண் இருபாலாருக்கும் பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும்.



- Customer Service
- Marketing executive
- Asst.Managers
- Managers

கல்வித் தகைமைக்கேற்ப இலவச பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் போது ஊக்கு விப்பு தொகையும் வழங்கப்படும்.
10,000/= - 15,000/= பயிற்சியின் பின்
30,000/= - 50,000/= பயிற்சியின் பின் சான்றிதழும் வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உண்டு.
தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு: (39780)(5.6)
077 700 9820, 077 632 0962
024 790 0171, 077 190 8997

இலங்கையின் முதற்தர ஆங்கிலக் கல்லூரியின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன..........
City & Guilds APPROVED CENTRE
உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்
SPOKEN ENGLISH
பகல் நேர பிரிவு (Batch 2) (50 % கட்டணக்கழிவு)
திங்கள் - வெள்ளி வரை முழு நேரபாடநெறி காலம் 2மாதங்கள். (காலை 9.00 - 12.00 வரை)
07.11.2013 காலை 9.00 மணி
எங்கும் ஆங்கிலம் கற்க முடியும்ஆனால் எம்மிடம் மட்டுமே ஆங்கிலம் கற்று பேசமுடியும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை
சனி / ஞாயிறு பிரிவு
3மாதங்கள் மற்றும் 6 மாத கால பாடநெறி காலை 7.30 -10.30 வரை நடைபெறும்
ஆரம்பம்
09.11.2013 காலை 7.30 மணி
(எமது விசேடபாடநெறி)
(39771)(2.6)



E-CITY 0773400418 /0774924166
COLLEGE OF ENGLISH
இல-372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.(வீரமாகாளி அம்மன்கோவில் அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட அலங்காரப் பேரணி சுதந்திர சதுக்கத்தைச் சென்றடைந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேரணியை வரவேற்றார். கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, சிரேஷ்ட அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி, பிரதி அமைச்சர் மொஹான்லால் கிரேரு ஆகியோரும் உடனிருந்தனர்.

# மாநாட்டை முன்னிட்டு அதிகாரிகள் வருகை

## 10 இல் இளைஞர் மாநாடு ஆரம்பம்

கொழும்பு,நவ.6

பொதுநலவாய மாநாட்டில் பங்கு பற்றும் வெளிநாட்டு முக்கியஸ்தர்கள், வெளிநாட்டு செயலர்கள் உள்ளடங்கலான உயர் அதிகாரிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முதல் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு அமைச்சர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் இலங்கைக்கு வருகை தருவர். பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டுடன் இணைந்ததாக நடைபெறும் இளைஞர் மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை ஹம்பாந்தோட்டை நகரில் நடைபெறவுள்ளது.

வர்த்தக மாநாட்டை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை சினமன் ஹோட்டலில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"-"

**பொதுநலவாய தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.**

பொதுநலவாய தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மாநாட்டில் பங்குபற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் இலங்கைக்கு வருவார்கள் என்று பொதுநலவாய மாநாட்டின் பேச்சாளர் அநுராதா ஹேரத் கூறினார்.

வெளிநாட்டு உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோரை வரவேற்க விசேட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நாடு திரும்பாதோரை அழைக்க ஏற்பாடு

## 15,000 பேர் தாயகம் வருகை

கொழும்பு,நவ.6

பொது மன்னிப்புக் காலம் முடிவடைந்த பின்னரும் சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்ப முயற்சிக்காமலிருப்பவர்களை அந்த நாட்டு சட்டதிட்டங்களுக்கமைய திருப்பியழைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சவூதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருந்த இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கான பொது மன்னிப்புக் காலம் கடந்த 3 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது.

இந்தநிலையில் அந்த நாட்டில் சட்ட விரோதமாக தங்கியிருந்த 90 வீத மானவர்கள் பாது காப்பான முறையில் நாடு திரும்பியுள்ளனர் என்று அமைச்சர் கூறினார்.

சவூதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் 16 ஆயிரம் இலங்கையர்களுள் 15 ஆயிரம் பேர் பொது மன்னிப்புக் காலத்துக்குள் இலங்கைத் தூதரகம் மற்றும் கௌன்சியூலர் அலுவலகங்களில் சரணடைந்திருந்தனர்.

சுமார் 2 ஆயிரம் வரையிலான இலங்கையர்களே பொது மன்னிப்புக் காலத்துக்குள் நாடு திரும்ப முயற்சிக்காமல் இருக்கின்றனர் என்று அவர் கூறினார். (ச)

# ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைது

கொழும்பு,நவ.6

ஹெரோயின் வைத்திருந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனவாசல, தோரண சந்தி பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து 1 கிராம் 20 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, 2 கிராம் 430 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கொட்டாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹரகம பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

# ஓட்டோ திருட்டில் ஈடுபட்ட இளைஞர் மாட்டினார்

கொழும்பு,கொட்டாஞ்சேனை விவேகானந்தா ஒழுங்கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் புளுமெண்டல் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொள்ளையிடப்பட்ட ஓட்டோவின் பெறுமதி 2,50,000 ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்திக்கு அரசு ஒதுக்கவில்லை நிதியை

## வடமேல் மாகாண எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

குருணாகல்,நவ.6

அரசு பொதுநலவாய மாநாட்டுக்கு அதிகளவு நிதியை செலவுசெய்வதால், அபிவிருத்தித்திட்டங்களுக்கு பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று வடமேல் மாகாண எதிர்க் கட்சித் தலைவர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமேல் மாகாணத்தில் மக்கள் நலத் திட்டங்கள் எனத் தெரிவித்து பல அரசியல் வாதிகள் தேர்தல் காலத்தில் இங்கு அடிக்கல் நட்டு வைத்தனர்.

ஆனால் அதற்கான பணம் இதுவரை வந்து சேரவில்லை. அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றியே வடமேல் மாகாண சபையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி கொண்டது. வாக்களித்த மக்களை அரசு ஏமாற்றுகிறது. -என்றார். (ச-200)

# பஸ் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு வருகிறது 'ஸ்கைப்' தொழில்நுட்பம்

கொழும்பு.நவ.6

தனியார் பஸ் சேவை குறித்து பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை துரிதமாகத் தீர்ப்பதற்காக 'ஸ்கைப்' தொழில் நுட்பத்தை பயன்படுத்துமாறு தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் ஜி.பி. ரத்னாயக்க அமைச்சு அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைகளுடன் இணைந்து கூட்டாக இதனை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.



தனியார் பஸ்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள், அது தொடர்பில் வழங் கப்படும் தீர்வு என்பன குறித்து உடனுக்குடன் அறியவும் அது தொடர்பில் தரவுகளை திரட்டவும் திட்டமிடப்பட் டுள்ளது என்று அவர் கூறினார்.

பயணிகளுக்கும் 'ஸ்கைப்' ஊடாக முறை யிட அவகாசம் வழங்கப்படும். அத்தோடு மின்னஞ்சல் மூலமும் முறையிட வாய்ப்பு வழங்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

# பெருந்தெரு மார்க்கங்களை விஸ்தரிக்க காணி சுவீகரிப்பு

## பெருந்தெருக்கள் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு.நவ.6

வடக்கு அதிவேகப் பெருந்தெரு மார்க்கத்தையும் தெற்கு அதிவேகப் பெருந்தெரு மார்க்கத்தையும் மத்தல வரை விஸ்தரிக்கத் தேவைப்படும் காணிகளை கையகப்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. காணிகளைக் கையகப்படுத்திக் கொள்ளும் சட்டத்துக்கு அமைய தேவைப்படும் காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகளைச் செய்து முடிப்பதற்கு குறைந்த பட்சம் 72 வாரங்கள் வரை தேவைப்படும். எனினும் குறித்த வேலையை 26 வார காலத்தில் முடித்து அடுத்த கட்ட வேலைகளை ஆரம்பிக்க அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமைச்சின் தீர்மானத்துக்கு அமைய காணிகளைப் பொறுப்பேற்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல்களை விடுத்தல், எல்லைகளை வகுத்தல், மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் போன்ற செயற்றிட்டங்கள் மேற் கொள்ளப்படவுள்ளன.

காணிகளைக் கையகப்படுத்திக் கொள்ளும் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விடயங்களையும் அமைச்சுக்கள் மட்டத்தில் நியமிக்கப்படும் குழு மூலம் நெறிப்படுத்த செயற்றிட்டம் கட்டமைக்கப்படும் என்று கூறப்படுகிறது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை காணாமல் போன வழக்கு; அறிக்கை சமர்ப்பிக்காத பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ.06

யாழ்.போதனா வைத்திய சாலையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்து ஒரு குழந்தை காணாமற்போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்றம் ஒருமாத கால அவகாசம் வழங்கிய நிலையில் நேற்றுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ள போதும் இன்னும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மேலும் கால அவகாசம் கோருகின்றனர் பொலிஸார்.

இந்த வழக்கு 9 வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது இவ்வாறு இழுபறியில் உள்ளதற்கான காரணம் தொடர்பிலும், குற்றச் சாட்டுத் தொடர்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்படாமைக்கான காரணம் தொடர்பிலும்வழக்குக்குறித்து மேலதிக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பிலும் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகருக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டிருந்தார்.

ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடந்த வருடம் நவம்பர் 5 ஆம் திகதி நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது. ஆனால் இவை தொடர்பான அறிக்கை எதுவும் நீதிமன்றில் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. பதிலாக அவற்றைச் சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் கோரியுள்ளனர். பொலிஸார்.

வழக்கில், குழந்தை காணாமற் போன காலப்பகுதியில் யாழ்.போதனா வைத்திய சாலையில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் தற்போது பணிபுரியும் இடம் தொடர்பாகவும், சம்பவத்தின் குற்றத்தைப் பரிசோதனை செய்யும் திணைக் களம் ஊடாக முற்படுத்தப்பட்ட சந்தேக நபரின் வக்குமூலத்தின் பிரதியையும், சான்றுப் பொருள் தொடர்பான விவரங்கள் அடங்கிய அறிக்கையும் யாழ். தலைமைப் பொறுப்பதிகாரி ஊடாக அழைப்பதற்கு கட் டளை கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டியிலுள்ள சிறுவர் நீதிமன்றிலும் வழக்குத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே அதன் நிலைப்பாடு பற்றிய அறிக்கையையும் பெற்றுக் கொள்ளக் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் மேலதிகவிசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இன்னும் கால அவகாசம் வேண்டும் எனவும் பொலிஸார் நீதிமன்றில் கோரியுள்ளனர்.

ஆசிரியராகப் பணிபுரியும் பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் 2004 ஆம் ஆண்டு ஜுலை 14 ஆம் திகதியன்று இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றின் பெண் குழந்தையை மட்டும் தந்துவிட்டு, ஆண் குழந்தையைத் தம்மிடம் ஒப்படைக்க வில்லையென்றும் அந்தக் குழந்தை காணாமற்போய்விட்டதாகவும் தெரிவித்து பெற்றோர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

தமது ஆண் குழந்தையைத் தம்மிடம் ஒப்படைக்கும் படி கோரியே வைத்திய சாலையில் பணிபுரிந்த மருத்துவர்கள் உட்பட 7 உத்தியோகத்தர்களுக்கு எதிராக பெற்றோர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். பாதிக்கப்பட்டவர் கள் சார்பில் சட்டத்தரணி ஜொனிமதுரநாயகம் வாதாடி வருகிறார். இந்த வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (கு-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிரிட்டன்

ஒன்றை நடத்த தமிழருக்கான பிரிட்டன் நாடாளுமன்ற குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லீஸ் கொட் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த விவாதத்தில் பிரிட்டன் பிரதமர், வெளியுறவு அமைச்சர் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

கமரூன் இலங்கை மாநாட்டில் கலந்துகொள்வதனை மறுபரீசீலனை செய்ய வேண்டும் என்று பல கட்சிகளின் உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பிரிட்டனிலுள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்களான, உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழ்த் தொழிற்சங்கம் மற்றும் தொழிலாளர்களின் தமிழர் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் நாளை வியாழக்கிழமை கலந்துரையாடவுள்ளார்.

பிரிட்டன் பிரதமருடன் வெளிவிவகார அமைச்சரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளார் என்றும் இதில் சூடான கருத்து மோதல்கள் இடம்பெறலாம் என்றும் கூறப்படுகின்றது.

தொழில் கட்சியின் நிழல் வெளியுறவுத்துறை அமைச்சர் டோக்றஸ் அலெக்ஸாண்டர், தொழில் கட்சி வெளியுறவு அமைச்சர் சேர் மல்கம் றிப்கன்ட் ஆகிய இருவரும் பிரதமர் கமரூன் கொழும்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்கு கடுமையான எதிர்ப்பை ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

அதுமட்டுமல்லாது பிரதமரின் கொழும்புப் பயணம் தொடர்பாக நாடாளுமன்ற வெளிவிவகாரத் தெரிவுக் குழுவும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து இரண்டு அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. அத்துடன் பிரிட்டனில் உள்ள ஊடகங்களான 'ரெலிகிராப்','ரைம்ஸ்' ஆகிய பத்திரிகைகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (கு-ப-400)

### வலி. வடக்கு

சாட்டையும் அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

வலி.வடக்கில் தமிழ் மக்களின் வீடுகளை அழிக்கும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

இதனையடுத்து வீடுகளை அழிக்கும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி யாழ். மாவட்ட படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த உத்தரவை மீறும் வகையில் அங்கு தொடர்ந்தும் வீடுகளை அழிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து ஜனாதிபதி தன்னிடம் விசாரித்தார் என்பதை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஒப்புக் கொண்டுள்ளார்.

" யாழ். குடாநாட்டில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், இராணுவத்தினரின் பெயரைக் கெடுக்கும் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார் "என்பதையும் அவரிடம் தெரிவித்தேன்.

நாம் பலாலிப் படைத்தளப் பகுதியில் புதிய முகாம்களை மட்டுமே நிறுவுகின்றோம். இலங்கை இராணுவத்துக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும், யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்களும் கூச்சல் போடுகின்றன.

யாழ். குடாநாட்டில் உள்ள எல்லா சிறிய முகாம்களையும் மூடிவிட்டு, பலாலி பெருந்தளப் பகுதிக்குள் புதிய முகாம்களை நிறுவுகின்றோம்" - என்றார். (கு-5)

### மக்ரேக்கு

மக்ரே, லண்டனிலிருந்து 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' வுக்குக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்துத் தொடர்ச்சியாகச் 'சனல் -4' ஊடகம் காணொலிகளை வெளியிட்டு வருகின்றது.

போர் தவிர்ப்பு வலயம், போர்க் குற்றங்கள் என்ற இரு ஆவணப் படங்களை ' சனல் -4' ஊடகவியலாளரான கெலும் மக்ரே வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்த ஆவணப்படங்களை இந்தியாவில் நாளை வியாழக்கிழமை வெளியிடுவதற்காக, புதுடில்லிக்குப் பயணமாக கெலும் மக்ரே திட்டமிட்டிருந்தார்.

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இந்தியாவின் கரிசனைக்குரிய விவகாரங்களாக உள்ளதாக மக்ரே குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாலச்சந்திரனின் ஆவணப்படத்தை வெளியிடுவதற்கு முன்னர், புது டில்லி செல்வதற்குக் கடந்த பெப்ரவரி மாதம் தான் நுழை விசைவு பெற விண்ணப்பித்ததாகவும், நுழை விசைவு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்புடன் கடவுச் சீட்டு மீள ஒப்படைக்கப்பட்டதாகவும் மக்ரே தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் பலமுறை தொடர்பு கொண்டதாகவும், கடைசியாக நேற்றும் கூடத் தொடர்பு கொண்ட போதிலும் அங்குள்ள அதிகாரிகள் எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக, இந்திய தூதரகத்துக்கும், இந்திய உள் துறை அமைச்சுக்கும் இரண்டு முறை மின்னஞ்சல் அனுப்பியதாகவும் மக்ரே மேலும் கூறினார். இலங்கையின் அழுத்தத்தின் பேரில் தனக்கு நுழைவு விசைவு வழங்க இந்தியா மறுத்திருக்காது என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் அஹமட், நுழை விசைவு வழங்குவதில் தாம் தலையிடுவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (கு-5)

### நாவற்குழியில்

பங்கள், பின்னர் நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் அத்து மீறிக் குடியேறின.

இதுவரை அந்தக் காணிகள் சிங்களக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்து வந்தன. இவ்வாறானதொரு நிலையில் சிங்களக் குடும்பங்கள் அங்கு நிரந்தர வீடுகளை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

தற்போது சிங்கள மக்களால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டுள்ள காணிகளை அளவீடு செய்து, பங்கீடு செய்வதற்காக நில அளவை செய்யும் நடவடிக்கைகள் கடந்த 3 மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. அந்த நடவடிக்கைகள் தற்போது முற்றுப் பெற்றுள்ளன.

இந்த நிலையில், சிங்கள மக்களின் காணிகளுக்குரிய சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் இதற்காக அடுத்த வாரம் கொழும்பிலிருந்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் உட்பட உயர் மட்ட அதிகாரிகள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என்றும் தெரிய வந்தது. (கு-5-115)

### 30 இந்திய

தெரிவிக்கப்பட்டது.

மீனவர்களைக் கைது செய்த கடற்படையினர் அவர்களையும் அவர்களின் நான்கு படகுகளையும் கைப்பற்றிக் காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்துக்குக் கொண்டு வந்தனர் எனக் கூறப்பட்டது.

தமிழகத்தின் ஜெகதா பட்டினம், புதுச்சேரி, இராமநாதபுரம், தங்கிச்சிமடம், பாம்பன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த 30 மீனவர்களும் நேற்று இரவு கடற்படையினரால் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த மீனவர்களை மல்லாகம் நீதிவானிடம் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை கடற்தொழில் திணைக்களம் மேற்கொண்டது.

கடற்கொந்தளிப்பு காரணமாகத் தாம் பயணித்த படகுகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் திசைமாறி வந்ததாக இந்திய மீனவர்கள் விசாரணையில் கூறியுள்ளனர். (கு-17)

### இசைப்பிரியாவின்

(விஸா) மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு செவ்வி வழங்கியுள்ளார் கெலும் மக்ரே.

இதன் போது இசைப்பிரியாவின் காணொலி போலியானது என்றும் அது நாடகம் என்றும் இலங்கை அரசு மறுத்திருப்பது தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், "எல்லாவற்றையும் எடுத்த எடுப்பிலேயே மறுக்கும் போக்கை இலங்கை அரசு கைவிட வேண்டும். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த காணொலிகளை இலங்கை இராணுவ சிப்பாய் ஒருவர் தனது நாட்டு அரசிடம் கொடுக்காமல் எங்களிடம் கொடுத்திருக்கிறார்.

இது, இலங்கை அரசு இந்தக் காட்சிகளை ஏற்கனவே பார்த்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எல்லா காணொலிகளையும் பார்த்த பின்னர் இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டதாகவே தோன்றுகின்றது. இது உண்மையில் சிக்கலான பிரச்சினை என்று குறிப்பிட்டுள்ளார். (கு-5)

### மன்மோகனை

தலைவர்கள் ஆகியோர் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய மத்திய அமைச்சர்கள் நான்கு பேரும் இதே கருத்தையே வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இந்தியாவின் ஆளும் கட்சியான காங்கிரஸ், மத்திய அரசின் முடி வுக்கு ஏற்ப பிரதமர் செயற் படுவார் என்று தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு வெளியான தன் பின்னணியில் இந்தியப் பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்களை தீர்மானிக்கும் முக்கிய அமைச்சான வெளிவிவகார அமைச்சு இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுக்க வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளது. இந்தியப் பிரதமருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியப் பிரதமர் மன்மோகன் பொது நலவாய மாநாட்டில் பங்கு பற்றுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (கு-5)

### முதலமைச்சரின்

சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில் முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் தெரிவானார். இவருக்கான நியமனக் கடிதம் கடந்த மாதம் வழங்கப்பட்டதுடன், கடந்த மாதமே ஜனாதிபதி முன்பாகப் பதவியேற்றிருந் தார்.

இந்த நிலையில் முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளராக மன்னார் மாவட்டப் பிரதித் தபால்மா அதிபராக இருந்த அ.சுந்தரலிங்கமும், முதலமைச்சரின் செயலாளராக உள்ளுராட்சி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ஆர்.வரதீஸ்வரனும், இணைப்புச் செயலாளர்களாக வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், இரத்மலானை இந்துக் கல்லூரி யின் முன்னாள் அதிபர் என்.மன்மதராஜா ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (கு-5)

### இடம்மாறியது

யோடுள்ள வீடுகள் இடித்தழிக்கும் நடவடிக்கை கள் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. தற்போது அந்த நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு, உயர்பாதுகாப்பு வலய எல்லையிலிருந்து சில மீற்றர்கள் உள்ளே இருக்கும் வீடுகள் இடித்தழிக்கும் நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வயாவிளான் சந்திக்கு அண்மையாக உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வீடுகள் இடித்தழிக்கும் சத்தங்கள் நேற்று தொடர்ச்சியாகக் கேட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (கு-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நாயகர்களின் போர்’ உதைபந்து வென்றது மானிப்பாய் இந்து

வலி.வடக்கு, நவ.6

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினால் நடத்தப்பட்ட "நாயகர்களின் போர்" உதைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது திறமையான விளையாட்டையும் நுட்பங்களையும் பயன்படுத்தி இரண்டு கோல்களைப் போட்டது. இதனால் மானிப்பாய் இந்து 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் மிகவும் விறு விறுப்பான ஆட்டமாக இருந்தது. மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கே இரண்டாம் பாதி ஆட்டத்திலும் வெற்றி வாய்ப்புக் கிடைத்தது. மேலும் 2 கோல்களை மானிப்பாய் இந்துக் கல்லூரி போட்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வென்று சம்பியனாகியது. (த-86)

# சதீஸ்கரனின் அபார ஆட்டம் வாகை சூடியது கரவெட்டி

மாங்குளம், நவ.6

யாழ்.மாவட்ட செயலகத்தின் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் "அரச அதிபர்" கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட அரையிறுதியாட்டம் ஒன்றில் கரவெட்டி பிரதேச செயலகம் வெற்றி பெற்றுள்ளது.

வடமராட்சி குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

இதில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது. முற்பாதியாட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இரு அணிகளும் மிகவும் பலமாக மோதிக் கொண்டன. இதில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் முன்னணி வீரர் மனோராஜ் 12 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி கோலாக் - கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது கரவெட்டி பிரதேச செயலக அணி வீரர்கள் தமது ஆட்டத்தில் புதிய வியூகங்களை அமைத்து முன்னேறினர். இதனை நல்லூர் பிரதேச செயலக அணியினர் தடை செய்து கொண்டிருந்தனர். பேற்றுப் பிர தேசத்தில் வைத்து நல்லூர் பிரதேச செயலக வீரர் ஒருவர் கையால் பந்தை தடுக்க முற்பட்ட போது கரவெட்டி பிரதேச செயலக அணிக்குத் தண்டனை உதை கிடைத்தது. இதனைச் சரியாகப் பயன்படுத்திய அந்த அணி வீரர் சதீஸ்கரன் 8 ஆவது நிமிடத்தில் கோலாக்கினார். இதனால் நல்லூர் பிரதேச செயலக அணி நிலை குலைந்தது.

அதன் பின்னர் மேலும் உற்சாகமடைந்தனர் கரவெட்டி பிரதேச செயலக அணியினர். இவர்களின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் நல்லூர் பிரதேச செயலக அணி வீரர்கள் திணறினர். 14 ஆவது நிமிடத்தில் மீண்டும் சதீஸ்கரன் தனக்கு கிடைத்த வாய்ப்பை அழகாகப் பயன்படுத்தி கோலாக்கினார். இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-422)

## மேசைப் பந்தாட்டம் யாழ்ப்பாணத்தில்

ஜேர்மன் விளையாட்டுப் பரிமாற்றத் திட்ட நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களின் மேசைப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் தேசிய மட்ட மேசைப் பந்தாட்டப் போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் யாழ். மாவட்டத்தில் நடை பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 8 வயது ஆண்-பெண், 10 வயது ஆண்-பெண், 12 வயது ஆண்-பெண், 17 வயது ஆண்-பெண், 18 வயது ஆண்-பெண், 21 வயது ஆண்- பெண், 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்-பெண் , 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்-பெண் போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும்.

இந்தப்போட்டியில் பங்குபற்றவுள்ள வீரர்கள் விண்ணப்பப் படிவங்களை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் மோகனிடம் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.6

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்சத்திர உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.45 மணி

விண்மீன் விளையாட்டுக் கழகம் எதிர் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.45 மணி

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பொமர்ஸ் விளையாட்டுக் கழகம். (த-23)

★★★

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வை விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம். (த-23)



யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாசம் சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேசத்தில் நடத்திய விளையாட்டு விழாவில் பெண்கள் தேங்காய் துருவும் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். (த-17)

# ஹென்றிஸ், மேரிஸ் ஆட்டங்களில் அசத்தின

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச்சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக மன்னார் உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்ற மன்னார் சின்னக் கடை கிறீன்பில்ட் விளையாட்டுக்கழக அணித்தலைவரிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் ஆகியோர் கிண்ணத்தை வழங்குகின்றனர். (த-23)

# ஸ்ரான்லியை இலகுவாக வென்றது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம், நவ.6


நியூஸ்ரார் வெற்றிக்கிண்ணத்துக்கான நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றின் 4 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை 11 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி ஸ்ரான்லி அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றனர். சியாம்சன் 40, றொசான் 45, குணதாஸ் 30 ஓட்டங்களைப் பெற்றனர். ஜொலிஸ்ரார் சார்பில் அருண், மதுஸன் தலா 2 இலக்குகளையும் சைலேஸ் ராஜா, வாமணன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 17.1 பந்துப் பரிமாற்றங்களால் 5 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. மதுசன் ஆட்டமிழக்ககாது 50 (தொடரின் 47 ஆவது அரைச்சதம்) ஓட்டங்களையும், சைலேஸ் 25 , நவயுகன் 22, வாமணன் 17 ஓட்டங்களை பெற்றன. ஸ்ரான்லி அணி சார்பில் கஜதீபன் 2 இலக்குகளையும், றொசான், வசி, உதயன் தலா 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் ஜொலிஸ்ரார் அணி 15.63 (5 போட்டிகள்) புள்ளிகளையும், ஸ்ரான்லி அணி 14.82 (5 போட்டிகள்) புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலுக்குத் தயார்



டெஸ்ட் போட்டிகளின் சவாலுக்குத் தயாராக இருப்பதாக ஆஸ்திரேலிய ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தற்காலிகத் தலைவரான ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார். தற்போது சிறந்த கிரிக்கெட்டை விளையாடி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆஸ்திரேலிய அணி அண்மையில் இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் அணித் தலைவராகச் செயற்பட்டிருந்த ஜோர்ஜ் பெய்லி மிகச் சிறப்பான துடுப்பாட்டப் பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தார்.

அண்மைக் காலமாக மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளில் ஜோர்ஜ் பெய்லி மிகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வரும் நிலையில், இம் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ள ஆஷஷ் தொடரில் ஜோர்ஜ் பெய்லி சேர்க்கப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. டெஸ்ட் போட்டிகளுக்குத் தயாராக உள்ளாரா எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த ஜோர்ஜ் பெய்லி, தயாராக இருப்பதாக தான் உணர்வதாக அவர் குறிப்பிட்டார். தனது வாழ்வில் தான் விளையாடிய கிரிக்கெட்டில் தற்போதே மிகச் சிறப்பான கிரிக்கெட்டை விளையாடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

31 வயதான ஜோர்ஜ் பெய்லி, தனது வயது காரணமாகத் தனக்கு அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறாது என்பதை உணர்வதாகவும், ஆகவே கிடைக்கும் வாய்ப்பில் தனக்கு விரும்பியவாறு விளையாட விரும்புவதாக ஜோர்ஜ் பெய்லி குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக இடம்பெற்ற சில தொடர்களில் தான் சிறப்பாக விளையாடியமை காரணமாக அதிக தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, அதன் காரணமாகத் தனது பாணியிலான விளையாட்டின் மீது தைரியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (த)

# தரப்படுத்தல்கள் அறிவிப்பு

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் முடிவடைந்துள்ளதையடுத்தே இந்தத் தரப்படுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலில் துடுப்பாட்டத்தில் முதலிடத்தைத் விராட் கோஹ்லி பெற்றுள்ளார். இதுவரை காலமும் முதலிடத்தில் காணப்பட்ட ஹசிம் அம்லாவைப் பின்தள்ளியே அவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அத்தோடு, இத்தொடரில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஜோர்ஜ் பெய்லி 6 இடங்கள் முன்னேறி 3ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் சயீட் அஜ்மல் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இதுவரை காலமும் 3ஆவது இடத்தில் காணப்பட்ட அவர் 2 இடங்கள் முன்னேறி முதலிடத்தைப் பெற்றார். முதலிடத்தில் காணப்பட்ட சுனில் நரைன் ஒரு இடம் பின்தங்கியுள்ளதோடு, முதலிடத்தில் இணைந்து காணப்பட்ட ரவீந்திர ஜடேஜா 2 இடங்கள் பின்தங்கி 3ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தலில் மொஹமட் ஹபீஸ் முதலிடத்தைப் பெற்றுள்ளார். அவர் ஷகிப் அல் ஹசனை முந்தியே முதலிடத்தைப் பெற்றுள்ளார். (த)

எனது நிலை விரைவில் மாறும் என நம்புகிறேன், என் மீது எந்த தவறும் இல்லை என்பது விரைவில் தெரியவரும். மோசமான நேரத்தால் தான் இப்படி மாட்டிக்கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



# மீண்டும் வருவேன்

வாழ்நாள் தடையில் இருந்து மீண்டு, மறுபடியும் போட்டிகளில் பங்கேற்பேன் என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ராஜஸ்தான் அணி வீரர் ஸ்ரீசாந்த் கைது செய்யப்பட்டார். இதனையடுத்து நடைபெற்ற விசாரணையில், வாழ்நாள் தடை விதித்து உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் தற்போது டுவிட்டரில் ஸ்ரீசாந்த் வெளியிட்டுள்ள செய்தியில், கடவுள் எப்போதும் கடினமான போராளிக்கு மட்டும் தான் கடினமான தருணத்தைத் தருவார். விரைவில் அதற்கான விடையும் கொடுப்பார்.எனது நிலை விரைவில் மாறும் என நம்புகிறேன், என் மீது எந்த தவறும் இல்லை என்பது விரைவில் தெரியவரும்.

மோசமான நேரத்தால் தான் இப்படி மாட்டிக்கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளார். (த)

# ஒலிம்பிக்கில் இரண்டு முறை தங்கம் வென்ற வீரர் கைது

ஒலிம்பிக் போட்டியில் இரண்டு முறை தங்கப் பதக்கம் வென்ற சீன நீச்சல் வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனாவை சேர்ந்த பிரபல நீச்சல் வீரர் சன் யாங்(வயது 21) ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தவர்.


சொந்த ஊருக்குச் சென்ற சன் யாங், உறவினர் ஒருவரின் காரை எடுத்துக் கொண்டு ஜாலியாக அந்த நகர வீதிகளில் ஓட்டிச் சென்றார். அப்போது தனக்கு முன்னால் சென்ற பேருந்தின் மீது காரை மோதி விட்டார். இதனால் போக்குவரத்துத் தடைப்பட்டது.

இதனையடுத்து போக்குவரத்துப் பொலிசார் விசாரணை நடத்தினர். தான் ஒரு பிரபலமான வீரர் என்று சொல்லியும் விடாத பொலிசார், கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் அவருக்குக் கணிசமான அபராதமும், இரண்டு வாரச் சிறை தண்டனையும் கிடைக்க உள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் பயிற்சி வகுப்புக்குச் செல்லாமல் நண்பியுடன் ஊர் சுற்றியதற்காக இவர் பயிற்சி வகுப்பிலிருந்து இடைநிறுத்தப் பட்டார்.

இவருடைய ஒரு மாத ஊக்கத்தொகையும் நிறுத்தப்பட்டது, பகிரங்க மன்னிப்புக் கேட்டதால் பயிற்சி வகுப்பில் ஒரு மாதம் கழித்து சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(த)



# உபாதை தொடர்பாக அச்சமில்லை



தனக்கு ஏற்பட்டுள்ள பின்தொடைத் தசைநார் உபாதை தொடர்பாக அதிக அச்சம் காணப்படவில்லை என ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் தெரிவித்துள்ளார். அத்தோடு ஆஷஷ் போட்டிகளில் பங்கு பற்றும் நம்பிக்கையும் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் பங்குபற்றிய ஷேன் வொட்சன், அதன் 7ஆவது போட்டியில் பந்துவீசும் போது பின்தொடைத் தசைநார் உபாதைக்கு உள்ளானார். உடனடியாக அவர் மைதானத்தை விட்டு வெளியேறியிருந்தார்.

ஆஸ்திரேலிய அணி பின்னர் துடுப்பெடுத்தாடும் போது ஷேன் வொட்சன் துடுப்பெடுத்தாடியிருந்ததோடு, அதிரடியாக 49 ஓட்டங்களையும் பெற்றிருந்தார். ஆனால் அவரது உபாதை தொடர்பான அச்சம் தொடர்ந்தும் காணப்படுகிறது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஷேன் வொட்சன், ஆஸ்திரேலியாவுக்கு திரும்பியதும் 'ஸ்கான்' பரிசோதனைக்கு உள்ளாகவுள்ளதாகவும், அதன் பின்னரே தனது உபாதை தொடர்பாக மருத்து முடிவு கிடைக்கப்பெறும் எனக் குறிப்பிட்டார். ஆனால், இவ்வாறான உபாதைகள் அண்மைக்காலத்தில் தனக்கு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஷேன் வொட்சன், அதிகளவு வலியை எதிர்கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வென்றார் ஜோகோவிச்

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் சேர்பியாவின் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.



பிரான்சில் பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டிகள் நடந்தன. இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், நடப்பு சம்பியனான ஸ்பெயினின் டேவிட் பெரரை எதிர் கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 7-5, 7-5 என்ற நேர் செற்களில் ஜோகோவிச் எளிதாக வெற்றி பெற்றுப் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் சர்வதேச தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. (கு)

# அதிருப்தியில் சச்சின்



கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் தனது 199ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாட வுள்ள சச்சின் டெண்டுல்கருக்காக வியத்தகு சிறப்பு ஏற்பாடு களை மேற்கு வங்க கிரிக்கெட் சங்கம் செய்து வருகிறது.

ஆனால், அந்த ஏற்பாடுகளைக் கண்டு சச்சின் டெண்டுல்க்கர் கடும் அதிருப்தியிலும், சற்றே கோபத்திலும் இருக்கிறார்.

இது தொடர்பாக சச்சின் குறிப்பிட்டுள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் கூறியது:-

நான் விளையாட்டை விட மேலானவன் கிடையாது.

இங்கு நான் மட்டுமே இல்லை; என்னோடு இந்திய அணியில் 14 பேர் இருக்கிறார்கள் என்றார் சச்சின்.

கிரிக்கெட் வாழ்க்கையில் கடைசித் தொடரும், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரும் இன்று ஈடன் கார்டனில் தொடங்குகிறது. இது, சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டி.

சச்சினால் மறக்க முடியாத வகை யில் இந்தப் போட்டியை நடத்த திட்டமிட்ட மேற்கு வங்கக் கிரிக்கெட் சங்கம், பல நாள்களாக அதற்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கியது.

ஈடன் கார்டன் மைதானத்தில் திரும்பிய திசையெல்லாம் சச்சினை வரவேற்கும் வகையில் அவருடைய பதாதைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சச்சினின் துல்லியமான உருவ அளவிலான மெழுகுச் சிலை ஒன்று வீரர்களின் உடைமாற்றும் அறை முன்பு நிறுவப்பட்டுள்ளது. போட்டிக்கான ரிக்கெட்டுக்கள் அனைத்திலும் சச்சினின் புகைப்படம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் முதல் நாளில் மைதானத்துக்கு வரும் 70 ஆயிரம் ரசிர்களுக்கும் விழா மலருடன் சச்சினின் முகமூடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. போட்டியின் 3ஆவது நாளில் சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டியை குறிக்கும் வகையில் 199 பலூன்கள் பறக்கவிடப்படுகின்றன.

அதைத்தொடர்ந்து 4ஆவது நாளில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பங்கேற்றுச் சச்சினைப் பாராட்டவிருக்கிறார். 5ஆவது நாள் போட்டியின்போது சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டியை குறிக்கும் வகையில் ஈடன் கார்டன் மைதானத்தில் விமானங்கள் மூலம் 199 ரோஜா பூக்களைத் தூவத் திட்டமிடப்பட்டுள்ளது.

(கு)


புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

வங்கியியல் கற்கை நெறிகள்
CBF & DBF (Weekday classes)
(Tamil & English Medium)

Chartered
CAB 1 & CAB 11
(Tamil & English Medium)

Aat (srilanka)
Final(Tamil & English Medium)

Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
021 222 3382 (சி/13543) (7.6.3)

வீணை விற்பனைக்கு
எம்மிடம் நல்ல வீணை விற்பனைக்குண்டு. (39745) (4.6.3)
தொடர்பு:077 711 5453

A/L CHEMISTRY
திரு சு. சுரேஸ்குமாரின் நூல்கள் வெளிவந்து விட்டன.
Inorganic- S&P -BLOCK
PHYSICAL - அவத்தைச் சமநிலை
நாட்டின் அனைத்து மாவட்ட புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொ.பே. 077 5559028

உதயன் அங்காடி - இலவச விளம்பரம்
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
வியாழக்கிழமைக்கு முன்னர் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்படும் "மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு" விளம்பரம் வரும் ஞாயிறு அங்காடியில் இலவசமாக பிரசுரிக்கப்படும்
இந்த சலுகை இம்மாதம் 10ஆம் 17ஆம் திகதி அங்காடி விளம்பரங்களுக்கு மாத்திரமே!
361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
07 6603 6604, 021 567 4455

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(8-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007) University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.11.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 09.11.2013 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. மாலை 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00(இடமில்லை)
வாரநாள் (செவ்வாய்,வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 07.11.2013
1. காலை 09.00-11.00 2. காலை 11.00-01.00
குறிப்பு: பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை
SAAMSON Language School
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

FREE
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிநெறி
WebDesigning,Multimeida,Networking
பங்குபற்ற விரும்புவோர் உங்களது <NAME> Free என type செய்து 772 395 895 க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.

MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT
ALDERSGATE COLLEGE
Accredited and UGC approved





Duration : 1 year
Admission Requirements
• A Bachelor Degree - must be from a recognized University or College.
• An Accepted Professional Qualification
• Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.
IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
மேலதிக விபரங்களுக்கு :
021 4 900 900
077 999 2484

கணக்கீடு, பொருளியல்
ஆசிரியர்
K.S.சிவராஜா
(யாழ். பிரபல ஆண்கள் தேசிய பாடசாலை ஆசான்)
ஆரம்பம்:- 07.11.2013 (வியாழன்) 4.30pm
அக்கடமி ஒவ் லொஜிக்
(பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி)

சங்கென் வடமாகாண கிளைக்கு கட்டடத் துறையில் முன் அனுபவமுள்ள (குறைந்தது 5வருடங்கள்) Civil Engineers தேவை.
விவரங்களுக்கு: 021 222 4840
சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி:
Jayanthi@sankan.lk
(சி/13557) (3.6.4)

உடனடி வேலை வாய்ப்பு
அங்காடி- உதயன் விளம்பர சிறப்பிதழின் சந்தைப்படுத்தல் துறையில் உடனடி வேலைவாய்ப்பு
* விளம்பர முகாமையாளர் (35,000/= ++)
* விளம்பர உத்தியோகத்தர் (20,000/= ++)
* விளம்பர சேகரிப்பாளர் (10,000/= ++)
இன்றும் நாளையும் காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை நேரில் வரவும்.
உதயன் - அங்காடி பணிமனை
361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P- 021 567 4455
(c/ 13570)(14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஒன்றைச் செய்வதற்கு
நல்ல காரணம் இல்லை
யென்றால் அதைச்
செய்யாமல்
இருப்பதற்கும் காரணம்
உண்டு
-சீனப் பழமொழி


# புதன் பொய்கை A

உதயன் | நவம்பர் 6 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு


# நல்லவர்களுக்கு எப்போதும் மகிழ்ச்சிதான்

ராஜராஜன்



எல்லோருக்கும்
எல்லாமும் கிடைக்
குமென எதிர்பார்க்க
முடி யாத இன்றைய
நிலையில், நல்ல
வர்களாக வாழ்
வதற்கு மட்டுமா
வது நாம் முயற்சி
செய்ய வேண்டும்.
அப்போதுதான்
மகிழ்ச்சிக் காற்று
எம்மை நோக்கி வீச
ஆரம்பிக்கும்

நல்ல குணவியல்புகள் மனிதர்களிடம் இருந்து மெல்ல மெல்ல விலகிச் செல்வதைக் காண முடிகின்றது. வஞ்சகமும், எடுத்ததற்கெல்லாம் கொதித்து எழுவதும், ஆத்திரத்தை அடக்க முடியாமல் அவஸ்தைப்படுவதும், எந்தவகையிலாவது மற்றவர்களுக்குத் தீமை புரிய நினைப்பதும்தான் மனிதப் பண்புகள் என்றதொரு நிலை உருவாகி வருகின்றது.

தனது ஆறாவது அறிவை மனிதன் இழந்து வருகின்றானோ என்ற ஐயத்தை இவையெல்லாம் ஏற்படுத்தி வருகின்றன.

இதற்கு ஏற்றாற் போன்று, தற்போது வெளிவரும் திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில் இடம் பெறும் நாடகங்கள் என்பன மனிதனின் சிந்தனையைத் திசை திருப்பிவிடுகின்றன. அடிதடி, வஞ்சகமான செயற்பாடுகள், வக்கிர உணர்வுகள் என்பன இவற்றில் முக்கிய இடத்தை வகிப்பதால், மனிதர்கள் இவைதான் வாழ்க்கை முறைமையென எண்ணுவதாகத் தெரிகின்றது. இதன் விளைவுதான் மனிதர்களிடமிருந்து நல்ல பண்புகள் விலகிவிடுவதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றது.

இந்தப் பூவுலகிலே கோடான கோடி உயிரினங்கள் வாழ்கின்ற போதிலும், மனிதகுலம் மட்டுமே தலையாய படைப்பாகக் காணப்படுகின்றது. ஏனைய உயிரினங்களை வழி நடத்த வேண்டிய பொறுப்பும் மனிதர்களுக்கே உண்டு. இந்த நிலையில் மனிதர்களே நிலை தடுமாறி நின்றால் இந்த உலகம் எப்படி இயங்குவது என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மிருகங்கள் பிறக்கும்போதே அவற்றின் இயல்புகளைக் கொண்டிருக்கும். சிறு புலிக் குட்டியொன்று ஒருமுறை வேறொரு உயிரின் இரத்தத்தை ருசி பார்த்து விட்டால் அந்தக் கணமே தனது சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்துவிடும். கொடிய விஷத்தைக் கொண்ட பாம்பொன்றின் குட்டி கூட, சமயம் வாய்க்கும்போது விஷத்தைக் கக்குவதற்குத் தயங்காது.

ஆனால் மனிதர்கள் பிறக்கும்போது எந்தவிதமான கெட்ட குணங் களும் அவர்களிடம் இருப்பதில்லை. அப்பழுக்கில்லாத தெளிந்த நீரோடை போன்று அவர்களின் நிலை காணப்படும். பின்னர் சக மனிதர்களின் சகவாசம் அவர்களை மெல்ல மெல்ல மாற்றி விடுகின்றது. அதிலும் கெட்டவர்களுடன் சேரும்போது இவர்களும் அவ்வாறே மாறி விடுகின்றனர்.

மனிதனொருவன் இரக்க சிந்தனை படைத்தவனாக மட்டுமே இருந்தால்போதும், நல்ல பண்புகள் தானாகவே அவனைத் தேடிவரும். அந்த இரக்கத்தைக் காட்டுவதற்கு எங்குமே தேடியலைய வேண்டியதில்லை. மனிதர்களிடம்தான் இரக்கம் காட்ட வேண்டும் என்ற கட்டுப்பாடும் தேவையில்லை. ஓரறிவு படைத்த மரத்திடம் கூட நாம் இரக்கம் காட்டலாம். நீரின்றி அந்த மரம் வாடி நிற்பதைக் காணும்போது அதற்குத் தேவையான நீரை வழங்குவதன் மூலமாக ஒரு பேருதவி வழங்கிய திருப்தியை நாம் அடையலாம்.

தெருவோரத்தில் பல நாள்கள் உணவின்றி சோர்வடைந்த நிலையில் காணப்படும் சிறிய நாய்க்குட்டி ஒன்றுக்குத் தேவையான உணவையும் நீரையும் வழங்குவதன் மூலமாக அதன் வேதனையைப் போக்கலாம். அது நன்றியுடன் தனது வாலை ஆட்டுவதைக் காணும்போது எமக்குக் கிடைக்கும் மனத் திருப்தியை நாம் வேறெங்கும் பெற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு நாம் பல்வேறு வகையிலும் எமது இரக்கவுணர்வை வளர்த்துக் கொள்ள முடியும். சிலர் மற்றவர்களிடத்தில் இரக்கவுணர்வைக் காட்டுவதைக் கௌரவக் குறைவாக எண்ணுகின்றனர். இதனால் தம்மைச் சுற்றி எது நடந்தாலும் கண்களை இறுக மூடியபடி காணப்படுவார்கள். ஆனால் எமக்கு உதவுவதற்கு எவராவது வருவார்களா என இத்தகையவர்கள் காத்திருப்பார்கள். இது எந்த வகையில் நியாயமானது என்பதை இவர்கள் ஏனோ புரிந்து கொள்வதில்லை.

சில அலுவலகங்களில் பணிபுரியும் மேலதிகாரிகள் தமக்குக் கீழே வேலைபார்ப்பவர்களை எப்போதுமே வறுத்தெடுத்துக் கொண்டிருப்பார்கள். எடுத்ததற்கெல்லாம் பிழை கண்டுபிடித்துக் கண்டித்துக் கொண்டே இருப்பார்கள். காரணமில்லாமல் எரிந்துவிழுவார்கள். தமக்குக் கீழேயுள்ளவர்கள் சிறப்பாகச் செயற்பட்டாலும், பாராட்ட மாட்டார்கள். அது தமக்கொரு கௌரவக் குறைவான செயல் எனவும் இவர்கள் எண்ணுவார்கள். ஆனால் இவர்கள் தமது பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இத்தகையோரால் மனவேத னைக்கு உள்ளான எவரும் இவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். ஏதோவொரு அற்ப புழுவைப் பார்ப்பது போன்றே பார்ப்பார்கள். இவர் முன்னர் விதைத்ததைத் தற்போது அறுவடை செய்யும் அவலத்தை இங்கு காண்கின்றோம்.

மனிதனொருவன்
இரக்க சிந்தனை
படைத்தவனாக
மட்டுமே இருந்
தால்போதும்,
நல்ல பண்புகள்
தானாகவே
அவனைத்
தேடிவரும்.

ஆகவே நாம் மற்றவர்களை மதிக்கும் பண்பை முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். எம்மால் மதிக்கப்படுபவர்கள் எமக்கும் மதிப்பு வழங்குவார்கள்.

எந்தவிடத்தில் அநியாயம் நடந்தாலும் நாம் எமது சக்திக்கு ஏற்ற வகையில் செயற்பட்டு அதனைத் தடுப்பதற்கு முயற்சியாவது செய்ய வேண்டும்.

தேவையில்லாத விடயத்தில் நாம் எமது மூக்கை ஏன் நுழைக்க வேண்டும் என எண்ணுவோமாயின், மற்றவர்களும் எமது விடயத்தில் ஒதுங்கி இருக்கவே செய்வர்.

மனிதன் ஒருவன் மனிதனாக இருக்க வேண்டுமென்றால், அவனது மனதில் வக்கிர உணர்வுகள் தலை தூக்கவே கூடாது. குறிப்பாகப் பெண்களுக்கு எப்போதுமே உயர்வான இடத்தை வழங்க வேண்டும். என்னைப் பெற்றவள் ஒரு பெண் என்பதை எப்போதுமே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தனது மனைவி தவிர்ந்த வேறு எந்தப் பெண்ணையும் தவறான நோக்கத்துடன் பார்ப்பதற்குக் கூட முயலக் கூடாது. அவ்வாறு தப்பித் தவறி ஏதாவது தவறான சிந்தனை மனதில் எழுந்தால், தனது தாயை நினைத்துப் பார்க்க வேண்டும். அந்தக் கணமே அவனது மனதில் ஏற்பட்ட தீய சிந்தனைகள் மறைந்துவிடும்.

ஆகவே மனிதர்கள் தமது செயல்களாலேயே நல்ல குணவியல்புகளை வளர்த்துக் கொள்ள முடியும். இந்த உலகில் நாம் வாழ்கின்ற சில வருடங்கள் எம்மை நாமே பண்படுத்திக் கொள்வதற்குப் பயன்பட வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்குமென எதிர்பார்க்க முடியாத இன்றைய நிலையில் நல்லவர்களாக வாழ்வதற்கு மட்டுமாவது நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சிக் காற்று எம்மை நோக்கி வீச ஆரம்பிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்று அந்தப் பாடசாலையில் சிறுவர் தினம். சிறுவர்கள் தம் பெற்றோருடன் வண்ண வண்ணச் சட்டைபோட்டு மன மகிழ்வுடன் பள்ளிக்கூடத்துள் நுழைந்தனர். ஆசிரியைகள் கண்ணைக் கவரும் சேலைகளுடன் பல வகையான தலை அலங்காரங்களுடன் வந்திருந்தனர். பல மாணவர்கள், பலூன் கட்டி மேடைகளை அலங்கரித்தனர். சிலர் பூங்கன்றுகளை அழகுபடுத்திக் கொண்டிருந்தனர். சிறுவர் தின வேலைகள் தடல்புடலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஆனால் தரம் 9 இல் கற்கும் துர்க்கா மட்டும் தன் வகுப்பறை மேசையில் படுத்துக் கொண்டு "தம்பி தம்பி" எனப் புலம்பிக் கொண்டிருந்தாள். அவளுடைய தம்பி ஆனந்தன் தற்போது தரம் ஐந்தில் கற்க வேண்டியவன். அவன் இப்போது உயிருடன் இல்லை. அவளது மனதில் தன் தம்பியைப் பற்றி சிந்தனையோட்டம். தம்பி ஆனந்த் மாநிறம் என்று சொல்ல முடியா விட்டாலும் கூட அழகானவன். மிகவும் கெட்டிக்காரன். அவன் துர்க்கா பிறந்து 4 வருடங்களுக்கு பிறகே பிறந்ததால் இருவரும் மிக அன்பாக இருந்தனர். தனது தம்பிக்கு சிறுநோய் என்றால் கூட துர்க்கா பாடசாலை செல்லமாட்டாள். தன் தம்பியுடனே இருப்பாள். இருவரும் நகமும் சதையும் போல நெருக்கமானவர்கள்.




'ஆனந்'தின் முன்பள்ளிக் காலத்திலே வெற்றி அவனுக்கு சொந்தமாயிருந்தது. அவன் நன்றாக பாடுவான். பாடல் போட்டியென்றால் அவன்தான் முன்னணியில். நல்லவர்களைக் கடவுள் நீண்ட நாள் வாழவிடுவதில்லை. அவன் இவ் உலகில் ஆறு வருடங்களே வாழ்ந்தான்.

2009 ஆம் ஆண்டு வன்னியில் போர் ஆரம்பமானது. செல்வீச்சுக்கள் குண்டு வீச்சுக்கள் துர்க்கா, ஆனந் அவர்களின் தாய், தந்தையர் களுடன் எங்கெங்கோ ஓடிக் கொண்டிருந்தனர் . அப்போது ஆனந்துக்கு 6 வயது. ஏதும் அறியாப் பாலகன். வலைஞர் மடத்துக்கு இறுதியாக வந்து சேர்ந்தனர். எப்படியோ ஒரு பதுங்குகுழி வெட்டி அதனுள்ளே முடங்கிக் கிடந்தனர். ஒருநாள் காலை துர்க்காவும் தாயும் காலைக்கடன் முடிக்க வெளியே சென்றிருந்தனர். குபீர் என எங்கோ குண்டு சத் தம் காதைப் பொத்திக் கொண்டனர். ஆனந்தும் தந்தையும் பதுங்கு குழிக்குள் இருந்தனர். கூவி வந்த எறிகணைகள் அவர்களின் பதுங்கு குழிக்குள் விழுந்தது. ஆனந்தன் 'அம்மா' என்று கதறும் சத்தம் மட்டும் கேட்டது. அதற்குப் பின் அவனின் குரல் ஒலிக்கவில்லை. மூச்சும் நின்றது. தந்தைக்கு இருகால்களும் போயிருந்தன.

"அடுத்த நிகழ்வாக கவிதை துர்க்கா" என்ற அதிபரின் அழைப்பு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மனத்திரையைக் கலைத்துக் கொண்டு "எப்பொழுது விழா ஆரம்பமானது? நான் கவிதை வாசிக்கும் நேரமும் வந்து விட்டதே என சிந்தித்துக் கொண்டு மேடைக்கு சென்று கவிதை வாசிக்கிறாள் துர்க்கா. சின்னச் சின்ன குருவிகள் நாம் சிறுவர் சிறுமி குருவிகள்..." அவளின் கவிதை நீள்கிறது.

இ.கலைப்பருதி. தரம்-7பி.
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

## விடுகதைகள்

அம்மா வாங்கி வந்த பசுவுக்கு வயிற்றிலே கொம்பு அது என்ன?
கேத்தல்

சின்ன மச்சான் தலைகுனிய வச்சான் அது என்ன?
முள்

உச்சிக் கொப்பிலே உலக்கை தூங்குது அது என்ன?
முருங்கைக்காய்

மடியிலே எடுத்து கடையிலே விற்பர் அது என்ன?
பால்

தண்டில்லாத வட்ட இலை அது என்ன?
அப்பளம்

அம்மா வைத்த தட்டிலே நீர் விட்டால் நிற்காது அது என்ன?
தாமரை இலை

அத்துவானக் காட்டிலே குடை பிடித்து நிற்கிறார் அது என்ன?
காளான்

அழைக்காமலே வருவான் அலைக்கழிக்காமல் செல்லமாட்டான் அவன் யார்?
நோய்



முறையின்றித் தொட்டால் வரையின்றித் தாக்குவான் அவன் யார்?
மின்சாரம்

நதன்ஷிகா.
யா/நல்லூர். [illegible]

## விநோதமான உயிரினங்கள்

- ஆமை நீண்ட ஆயுளைக் கொண்டது
- ஒட்டகத்தின் பால் கறந்த சில நிமிட நேரத்திலேயே கட்டியாக உறைந்து இறுகிவிடும்
- திமிங்கிலத்துக்கு நீண்ட முதுகெலும்பு உள்ளது
- சிறுத்தை மிக வேகமாக ஒடும் வலிமை கொண்ட விலங்கு
- முதலையின் மூக்கிலும் பல் உண்டு
- நாய்க்கு நாக்கிலும் வியர் கின்றது




சி.கஜானி. தரம்-9டி.
கிளி/ இந்துக் கல்லூரி

## தகவல் களஞ்சியம்

- அந்தாட்டிக்கா கண்டம் உலக நாடுகளுக்குத் தெரிய வந்தது 1820 ஆம் ஆண்டிலாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் 160 லட்சம் இடி. மின்னல்கள் பூமியில் ஏற்படுகின்றன.
- தவளைகள் தண்ணீரில் வாழ்ந்தாலும் அந்தத் தண்ணீரைக் குடிக்காது.
- 11 நாடுகளை எல்லையாகக் கொண்டது சீனா.
- காந்திஜி முதன் முதலில் சென்ற நாடு இங்கிலாந்து.
- பிறந்த குழந்தை என்னதான் அழுதாலும் கண்ணீர் வராது ஏனெனில் கண்ணீர் சுரப்பி செயற்பட குறைந்தது 15 நாள்கள் எடுக்கும்.
- அமெரிக்காவில் காணப்படும் "லாமா" என்னும் விலங்கு எதிரியின் மேல் எச்சில் துப்பும் பழக்கம் உடையது.

சி.சிந்து.
சுதுமலை.

## வியக்க வைக்கும் கட்டுப்பாடு!



கண்டம் விட்டுக் கண்டம் வழிமாறாமல் பறந்துசென்றுவிட்டுத் தாய்நாடு திரும்பும் பறவைகள் இரவு பகலாக ஓய்வின்றிப் பறக்கின்றனவே, அவை எப்பொழுது உறங்கும் என்று நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? பறவை ஆராய்ச்சியாளர்கள் நுட்பமாகக் கவனித்துக் கூறும் விவரம் இது - அவை கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லும்போது அவைகளிடையே ஒரு வியத்தகு கட்டுப்பாடு உருவாகி விடுகின்றது. பறக்கும்போதே ஒரு பக்க இறக்கையில்




தலையை வைத்து ஓய்வெடுக்கின்றன. உறங்குகின்றன. பத்து முதல் பதினைந்து நிமிடங்களே நீடிக்கும் இந்த உறக்கத்தின்போது தொடர்ந்து வழிகாட்டத் தங்கள் காதுகளையே நம்பி இருக்கின்றன பறவைகள்.


தங்களோடு பறக்கும் பறவைகளின் சிறகுகளின் சப்தத்தைக் கொண்டு பறக்கின்றன. இப்படி ஒரு அணி ஓய்வெடுத்த பிறகு அடுத்த அணி ஓய்வெடுக்கும். இப்படியே எல்லாப் பறவைகளும் ஓய்வெடுத்துக் கொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000இக்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**
**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத, உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருள்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருள்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருள்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய நட்சத்திர கூட்டம்

விண்வெளி மண்டலத்தில் மிகவும் அதிக தொலைவில் உள்ள நட்சத்திர கூட்டத்தை வான் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். டெக்சாஸ் ஏ அண்ட் எம் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்யும் கோவாவைச் சேர்ந்த இந்திய விஞ்ஞானி [illegible], அமெரிக்கா வின் டெக்சாஸ் பல்கலைக்கழக பேராசிரியர் பாவகல் ஸ்டீல், அவருடைய ஆராய்ச்சி மாணவர் மிமி சாங் ஆகியோர் இணைந்து புதிய நட்சத்திரக் கூட்டத்தை கண்டுபிடித்துள்ளனர். இதுதான் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதில், மிக அதிக தொலை வில் உள்ள நட்சத்திர கூட்டம். இது பூமியில் இருந்து ஆயி ரத்து 300 கோடி ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள் ளது. 'பிக் பேங்' என்ற அண்டவெளியில் ஏற்பட்ட மிகப் பெரிய வெடிப்புக்குப் பின் 700 மில்லியன் ஆண்டுகளில் இந்த நட்சத்திர கூட்டம் உருவாகியுள்ளது. இது குறித்து விதால் தில்வி கூறுகையில், "உலகிலேயே முதல் முறையாக நாங்கள் இந்த நட்சத்திர கூட்டத்தை பார்த்தது மிகவும் உற்சாகமாக இருக்கிறது. இந்தக் கண்டுபிடிப்பு பிரபஞ்சம் உருவானது பற்றி பல கேள்வி களை எழுப்பியுள்ளது" என்றார்.







வீசா இல்லாமல் படகு மூலம்
அவுஸ்திரேலியாவுக்கு வரும்
எவருமே அங்கு
குடியமர முடியாது

- வீசா இன்றி, படகுகள் மூலம் வரும் புகலிடக் கோரிக்கையாளர்கள், பப்புவா நியூகினி அல்லது நெளறு போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
- நீங்கள் ஒரு அகதியாக அடையாளம் காணப்பட்டாலும், இப்போது நீங்கள் பப்புவா நியூகினி அல்லது நெளறு போன்ற நாடுகளிலேயே குடியமர்த்தப்படுவீர்கள்.
- அகதிகள் அல்லாத அனைத்துப் புகலிடம் கோருவோரும் மீண்டும் இலங்கைக்கே அனுப்பப்படுவர்.

அவுஸ்திரேலியாவுக்கு
படகில் போக வேண்டாம்

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி
மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa



## உங்கள் நாணயத் தாளினைத் தெரிந்து கொள்ளுங்கள்.




### 1 நீர்வரி அடையாளத்தைப் பாருங்கள்

தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக தெளிவான வாளேந்திய சிங்கம் ஒன்றினைப் பார்க்கலாம். தாளின் இரு புறங்களிலும் இதனைப் பார்க்கக்கூடியதாயிருக்கும்.

தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக தெளிவான வாளேந்திய சிங்கம் ஒன்றினைப் பார்க்கலாம். தாளின் இரு புறங்களிலும் இதனைப் பார்க்கக்கூடியதாயிருக்கும்.

தாளினை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடிப்பதனால் நீர்வரி அடையாளமாக நாணயத் தாளின் வலப் புறத்திலுள்ள பறவையும் காணப்படுவதைப் பார்க்கலாம். நாணயத் தாளின் பெறுமதி இலக்கங்களில் நிலைக்குத்தாக தெளிவான நீர்வரி அடையாளமாகக் காணப்படுகிறது.

### 2 பாதுகாப்பு நூலினைப் பாருங்கள்

சாய்த்துப் பிடிக்கும்போது சிவப்பிலிருந்து பச்சைக்கு நிறமாற்றமடையக்கூடிய நூல், அல்லது உருவமைப்புடன்கூடிய அடர்த்தியான வெள்ளி நூல் அல்லது உடைந்த கோடு போல தென்படும் மெல்லிய வெள்ளி நூல். தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது உடைந்த கோடுகள் ஒரே கோடு போல காட்சியளிக்கும்.

உடைந்த கோடு போல் தென்படும் வெள்ளி நூல் தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது "CBSL 1000" என்ற சிறிய எழுத்துக்களுடன் கூடிய உடைந்த கோடுகள் ஒரே கோடு போல காட்சியளிக்கும்.

தாளினை சாய்த்துப் பார்க்கும்போது சிவப்பிலிருந்து பச்சைக்கு நிறமாற்றமடையக்கூடிய அடர்த்தியான மங்கலான நூல். வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும்போது "RS 1000" மற்றும் "CBSL" என்ற சிறிய எழுத்துக்களுடன் கூடிய தொடர்ந்து செல்லும் நூலினைக் காணக்கூடியதாயிருக்கும்.

### 3 மேற்கிளம்பிய அச்சிடலை உணருங்கள்



தாளின் மீது உங்கள் விரல் நுனியினை ஓடவிடுவதன் மூலம் தடிப்பான மை படிந்த இடங்கள் அல்லது மேற்கிளம்பிய அச்சிடல் தாக்கத்தினை உணருங்கள்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

100% பருத்திக் கம்பளியினால் தயாரிக்கப்பட்ட நாணயத் தாள் சாதாரண கடதாசியிலுள்ள எழுத்துக்களிலிருந்து வேறுபடுவதனை உணருங்கள்.

30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 ☎ 0112477245, 0112477587 0112477726, 0112477701 @ currency@cbsl.lk www.cbsl.gov.lk

குற்றக் கோவையின் கீழ் போலி நாணயத் தாள் தயாரித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிப்புறச் சுவர்களைப் பாதுகாக்க தரமுயர்ந்த உன்னதமான ஒப்பனை தரும் நிப்போலக் வெதர் புரூவ் பெயின்ற்கள்.

நிப்போன் பெயின்ற் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்;
நிப்போலக் டவர்ஸ், இல.6வெ, புத்கமுவ வீதி, ராஜகிரிய, இலங்கை.
தொ: 0114 356 900-8 ஃபெக்ஸ்: 0114 356 909

**உடனடி அழைப்பு : நஸ்லின் – 077 3171992**



Nippolac®

ரூ.1035

விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கி, விவசாயியை அரசனாக மதிக்கும் பெருமை மிக்க வரலாற்றுக்கு உரிமைகோரும் இலங்கையின் விவசாயத்துறைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது 137 வருடங்கள் பழமை வாய்ந்த பிரவுன்ஸ் நிறுவனமாகும்.

மிகப் புதிய விவசாய உபகரணங்களை இலங்கையின் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி விவசாயிகளின் மனதை வென்ற பிரவுன்ஸ் நிறுவனம் பரம்பரை பரம்பரையான விவசாயியுடன் இணைந்திருந்த கனவு டிரக்டரான MF 240 டிரக்டரின் தொழில்நுட்பத்திலேயே உற்பத்தி செய்யப்பட்ட பிரவுன்ஸ் TAFE டிரக்டரை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்து விநியோகிப்பது அந்தக் கனவை நனவாக்குவதற்காகவே.

உலகமே ஏற்றுக்கொண்ட பேர்கியூசன் திரவ அழுத்தத் தொகுதி மிகச் சிறப்பாக உபகரணங்களை செயற்படுத்தும் தன்மையை TAFE க்கு பெற்றுக்கொடுக்கிறது. எண்ணெய் மூழ்கடிக்கப்பட்டுள்ள ஹைட்ரோலிக் பம்பின் மிகக் குறைந்த பழுதுபார்ப்பு மற்றும் சிறந்த பாவனையின் மூலம் விவசாயி பிரவுன்ஸ் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மேலும் உறுதி செய்யப்படுகிறது. சந்தையிலுள்ள டிரக்டர்களில் அதிகூடிய விட்டத்தைக் கொண்ட பிரதான கிளச்சைக் கொண்டிருப்பதனால் மிக இலகுவாகவும் சிறப்பாகவும் பாரம் சுமக்கும் தன்மையை TAFE கொண்டுள்ளதுடன், 46+hp வகையிலான டிரக்டர்களிடையே மிகக் குறைவான பாரத்தைக் கொண்ட டிரக்டரான TAFE சேற்றில் புதையாமல் மிக இலகுவாக உழவும் வாய்ப்பை பெற்றுள்ளது.

டிரக்டரின் சிறந்த செயற்பாடும் குறைந்த பழுது பார்ப்பையும் கொண்ட எண்ணெயில் மூழ்கடிக்கப்பட்டுள்ள ஹைட்ரோலிக் பம்பும் எஞ்ஜின் கியர்பெட்டி மற்றும் ஹைட்ரோலிக் தொகுதிக்கு ஒரே வகையான எண்ணெய் பயன்படுத்தக்கூடிய தன்மையையும் கொண்டுள்ளதனால் TAFE டிரக்டர் சந்தையில் மிகக் குறைந்த பராமரிப்பு செலவை கொண்ட டிரக்டராக புகழ்பெற்றுள்ளது.

விசேட PTO அமைப்பின் காரணமாக மிகக் குறைந்த எஞ்ஜின் RPM பெறுமதியிலும் PTO RPM அலகினை 540 க்கு கொண்டுவரும் தன்மை பிரவுன்ஸ் TAFE க்கு மிகச் சிறந்த எரிபொருள் செயற்பாட்டை பெற்றுக்கொடுக்கிறது. TAFE டிரக்டரின் சொகுசான வசதியான வில்லுத்தகடுகள் மீது அமைந்திருக்கும் ஆசனம் மற்றும் நேரான முன் அக்சல் மற்றும் உயர்த்தக்கூடிய பொனட் விவசாயிக்கு மிகவும் வசதியை பெற்றுக்கொடுக்கிறது.

# நிலத்திலும் சேற்றிலும்

TAFE

# டிஸ்க் பிரேக்

ரூபா 219,000/-*
செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்
நீங்களும் இன்றே TAFE முகவர்களை அல்லது LOLC முகவர்களை சந்திக்கவும்.
மாதாந்தம் அல்லது போகத்திற்கு 6 வருடத்தில் செலுத்தவும்
இவ்விசேட சலுகை 2013 அக்டோபர் 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை மட்டுமே.

| | | |
|---|---|---|
| வடக்கு, வடமத்திய மாகாணங்கள் | துஷான் குணரத்ன | 0773 457 988 |
| கிழக்கு மாகாணம் | லக்ஷித சந்தருவன் | 0773 457 987 |
| தெற்கு, ஊவா மாகாணங்கள் | சந்துன் கஞ்ஆரச்சி | 0773 457 982 |
| வடமேல், மத்திய மாகாணங்கள் | அனுராத பண்டார | 0773 457 981 |

பிரவுன்ஸ் அண்ட் கம்பனி அதன் முழுமையான உத்தரவாதத்தைக் கொண்டுள்ள TAFE டிரக்டருக்கு காப்புறுதியையும் பதிவையும் இலவசமாக பெற்றுக்கொடுப்பது விவசாயிகளின் தேவைப்பாடுகளை நன்கு அடையாளம் கண்டுள்ளதனாலாகும். நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் TAFE தரமான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விசேட சேவைக்குழுவின் சேவைகளையும் எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

நாடு முழுவதும் அமைந்துள்ள வர்த்தக முகவர்களின் வலையமைப்பினையும் விசேட தொழில்நுட்ப அறிவுடன் கூடிய ஊழியர்களைக் கொண்டுள்ள பிரவுன்ஸ் விவசாயப் பிரிவு TAFE நாமத்தை இலங்கையின் நான்கு சக்கர டிரக்டர்களிடையே உச்சத்திற்குக் கொண்டு செல்வதற்கு முடிந்திருப்பது அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவைகளினாலாகும்.

இலங்கை விவசாயிகளின் மனதை வென்ற, என்றும் விவசாயிகளின் கரங்களுக்கு துணையாய் நின்று விவசாயத்துறைக்கு பெறுமதி சேர்த்த பிரவுன்ஸ் நிறுவனம் இம்முறை சேற்றிற்கும் நிலத்திற்கும் ஒரே விதத்தில் செயற்படக்கூடிய TAFE டிஸ்க் பிரேக் கொண்ட டிரக்டரை விவசாயிக்கு மிகவும் பெறுமதியுடன் அறிமுகப்படுத்துகிறது.

அத்துடன், 2013 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 வரை நீங்கள் கொள்வனவு செய்யும் TAFE டிஸ்க் பிரேக் டிரக்டருக்கு LOLC நிறுவனத்தின் மூலம் மிக இலகுவான லீசிங் வசதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

LOLC யிடம் இருந்து விவசாயி கொள்வனவு செய்யும் அனைத்து TAFE டிரக்டர்களுக்கும் ஆரம்பக் கட்டணமாக ரூபா 219,000 செலுத்தி 06 வருடங்களுக்கு மாதாந்தம் அல்லது போகங்களின் அடிப்படையில் செலுத்துவதற்கு பிரவுன்ஸ நிறுவனம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது விவசாயிகளின் மனதை நன்கு அறிந்து கொண்டதனாலாகும்.

இந்தப் போகத்திலும் எமது நிலத்திற்கு பழக்கமாக பாரம்பரிய தொழில்நுட்பமாக எமக்கு உரித்தான TAFE டிரக்டருடன் புதிய அனுபவத்துடன் இணைந்து கொள்ளுமாறு பிரவுன்ஸ நிறுவனம் இந்நாட்டு விவசாயிகளுக்கு கௌரவத்துடன் அழைப்பு விடுக்கிறது.




ரூ. 345,000/- தொடக்கம்

ரூ. 1,499,000/- (டிஸ்க் பிரேக்)



ரூ. 319,000/-

சிறந்த MF தொழில்நுட்பம் • பிரவுன்ஸ் உத்தரவாதம் • விற்பனைக்கு பிந்திய சேவை • சிறந்த உதிரிப்பாகங்கள்

1

• பதிவு மற்றும் காப்புறுதி இலவசம் • மிகச் சிறந்த எரிபொருள் சிக்கனம் • அதிகூடிய மீள் விற்பனை பெறுமதி

BG டிரேலர் | HOWARD ரோட்டவேட்டர் | TAFE | Browns Agriculture | Browns தம்பிக்கையின் பாரம்பரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## மது விலக்கு அவசியம்

*துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்' -திருக்குறள்-*

குடி குடியைக் கெடுக்கும். குடி மதியையும் கெடுக்கும். குடி குடும்பத்தையே சீரழித்து விடும். ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், நாட்டு மக்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ வேண்டுமானால், அந்த நாட்டுக்கு பூரண மது விலக்கு அவசியம். பூரண மது விலக்கை நடைமுறைப்படுத்த வழி உண்டு.

மது பாவிப்பவர்களின் நன்மைக்காகவும் மதுவால் பாதிக்கப்படும் குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும் சில ஆலோசனைக்களை முன்வைக்கிறேன்.

மது பாவிக்கும் அன்பர்கள் தமக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான அளவைக் குறிப்பிட வேண்டும். தீர விசாரித்து தேவையான அளவுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். இதனால் குடிகாரர்கள் பெருக இடமில்லாமல் போகும். அதன் பின் சகல மக்களும் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்வார்கள்.

மக்களுக்காக வாழ்ந்து காட்டிய தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் பூரண மது விலக்கைக் கொண்டுவரப் பெரும்பாடுபட்டார். ஆனால் முடியவில்லை. மக்களின் நல்வாழ்வுக்காகப்பாடுபடும் தொண்டர் களும், ஸ்தாபனாங்களும், அரசியல் தலை வர்களும் ஒன்றுபட்டு மது அரக்கனை அழித்து விட்டால் நாடு தெய்வலோகமாக மாறும். மக்களும் இன்பமாக வாழ்வார்கள்.

பொ. கந்தையா, திருகோணமலை

## வீதியைப் புனரமைப்பார்களா?

யாழ். வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலய முன்பகுதியிலிருந்து நாவற்காடு, குடமியன், மிருசுவில் கிராமங்களின் ஊடாக மிருசுவில் சந்திக்குச் செல்லும் வீதி மிக முக்கிய போக்குவரத்துப் பாதையாகும் .இந்த வீதி பெரும் சேதத்துக்கு உள்ளாகி இருக்கின்றது. குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலை, மிருசுவில் அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, வரணி மகா வித்தியாலயம், உசன் மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, கொடிகாமம் அ.த.க.பாட சாலை ஆகிய பாடசாலைகளுக்கு மேற்படி கிராமங்களிலிருந்து பல நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இந்த வீதியால் பயணம் செய்கின்றனர்.

மேற்படி கிராமங்களில் மிக அதிகளவான மக்கள் விவசாயம் செய்பவர்களாகவும், சிலர் உத்தியோகத்தர்களாகவும் உள்ளனர். அதிகளவான மக்கள் நெற்செய்கை செய்கின்றனர். நெற்செய்கைக்காக செயற்கை உரம் கொள் வனவு செய்து கொண்டு செல்லல், விதை நெல், அறுவடை செய்த நெல், போக்குவரத்து உழவு இயந்திரம், அறுவடை இயந்திரம் ஆகியவற்றின் போக்குவரத்துக்கு ஏற்றதாக வீதி சீராக இருப்பது இன்றியமையாதது.

தினமும் இந்த வீதியால் நூற்றுக்கணக்கான சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும், உழவு இயந்திரங்களும் பாரவூர்திகளும் செல்கின்றன.

எனவே சிட்டிவேரம் அம்மன் ஆலய முன்பக்கத்திலிருந்து மிருசுவில் வடக்குச் சந்தி வரை செல்லும் பாதை மிக அவசரமாகத்திருத்தப்பட வேண்டும். கவனிப்பார் அற்றுக் கிடக்கும் இப்பாதை எப்பொழுது திருத்திய மைக்கப்படும்? எத்தனை காலத்துக்கு மக்கள் சிரமங்களை அனுபவிப்பது? எனக் கேட்கின்றனர் இப் பகுதி மக்கள். உரியவர்கள் இந்த விடயத்தில் உடனடிக் கவனம் எடுப்பார்களா?

வி. சுகுமாரன்

## ஈச்சமோட்டை வீதியில் பயணிப்போர் சிரமம்

கடந்த 40 ஆண்டுகளாக எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படாமல் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட ஈச்சமோட்டை இணை வீதிகள் காணப்படுகின்றன. இந்த வீதிகளைத் திருத்தம் செய்து தருமாறு கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பல்வேறு கோரிக்கைகளை விடுத்தும் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் அன்றாட தேவையின் பொருட்டு செல்பவர்கள் மழை காலங்களில் ஒரு அடி வெள்ளத்தில் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. கடந்த காலங்களில் மாநகர சபைக்கு இரண்டு உறுப்பினர்களை தெரிவு செய்த பிரதேசமும் இதுதான். அதேபோன்று இவ்வாண்டும் இரண்டு மாகாணசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்து விட்டு தமது அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்கு இப்பகுதி மக்கள் அலைந்து திரிய வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் முன்னுரிமை அடிப்படையில் வீதிச் செயற்பாடுகளையாவது செய்து தருமாறு இப்பகுதி மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

இ. கிருஷ்ணகுமார், ஈச்சமோட்டை

## வீதியில் வெள்ளம் தேங்காமல் செய்வார்களா?

யாழ். மனோகராச் சந்தியில் இருந்து ஐந்து சந்தி நோக்கிச் செல்லும் நாவலர் வீதியின் கே.கே.எஸ். வீதியை தொடும் பகுதி மழை நாள்களில் குளமாகக் காட்சியளிக்கிறது. இந்த சந்திக்கு அருகில் உள்ள நாவலர் பாடசாலைக்கு நடந்து செல்லும் ஆசிரியர்களும், மாணவர்களும் இதனால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அந்த வேளை அந்த வீதியில் பயணிக்கும் வாகனங்கள் இவர் களது சீருடைகளிலும் வெள்ளத்தை வாரியிறைத்துச் செல்கின்றன.

இரண்டு, மூன்று நாள் மழைக்கே சுமார் ஒரு அடி உயரத்தில் இந்த வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. தொடர் மாரி காலத்தில் இந்த வீதியின் நிலை இதை விட மோசமாகும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வெள்ளம் தேங்கி நிற்காத நிலையை ஏற்படுத்தித் தரு மாறு பயணிகள் கேட்டு நிற்கின்றனர்.

கி. வே. கிருஷ்ணானந்தன்

# தமிழரசுக் கட்சிக்காக உழைத்த வன்னித் தமிழன் தமிழ் அரசு மலர்ந்த மகிழ்ச்சியில் உலகைப் பிரிந்தான்

இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ற பெயர்ப் பலகையை தனது வீட்டு முற்றத்தில் நட்டு, கோயிற்குடியிருப்பு முல்லைத்தீவு என்றவிலாசத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியை பதிவு செய்து ஆரம்பித்து வைத்த முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சி அமைப்பாளரும், தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவருமான பிலிப் மார்க்குப்பிள்ளை ஐப்பசி மாதம் ஐந்தாம் திகதியன்று (05.10.2013) காலமாகிவிட்டார்.

1920 ஆம் ஆண்டு மார்ச் இரண்டாம் திகதி வினாசித்தம்பி பிலிப் சுவாம்பிள்ளை, நேசம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்த மார்க்குப்பிள்ளை, தனது ஆரம்பக் கல்வியை முல்லைத்தீவு புனித பத்திரிசியார் ஆண்கள் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். கொழும்புத்துறை புனித யோசப் கல்லூரியிலும் பயின்று இலங்கை மீன்பிடித் திணைக்களத்தில் உயர் பதவியை வகித்த ஒருவராவார். அடங்காத் தமிழன் என அழைக்கப்பட்ட சி. சுந்தரலிங்கம் வவுனியாவில் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்று வந்த காலம் அது. சுந்தரலிங்கத்தின் துணிச்சலான அரசியல் நடவடிக்கைகள் மார்க்குப்பிள்ளைக்கு சுந்தரலிங்கத்தின் மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியது. அரசியலில் ஈடுபாடு கொள்ள வைத்தது. இது தனிப்பட்ட முறையில் சுந்தரலிங்கத்துடன் நெருக்கத்தையும் ஏற்படுத்தியது.

1956 ஆம் ஆண்டு சுந்தரலிங்கம் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய, மார்க்குப்பிள்ளையும் தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக தனது பதவியை இராஜினாமாச் செய்து முழு நேர அரசியலில் இறங்கினார்.

ஆனால் எல்லோரும் எதிர்பார்த்ததுபோல, சுந்தரலிங்கத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி' என்ற கட்சியில் இணையாமல், தமிழ் காங்கிரஸில் இருந்து பிரிந்து தந்தை செல்வாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியில் இணைந்து தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிரான சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் என்று சட்ட எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு தமிழரசுக் கட்சியின் முழுநேர தொண்டனாக மாறினார்.

வடக்கு கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களது ஆதரவைப் பெற்று வந்த போதிலும், வவுனியாவில் மட்டும் நீண்டகாலமாகசிசுந்தரலிங்கமும் அவரை தொடர்ந்து ரி. சிவசிதம்பரமும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகி வந்தனர்.

இதைமுறியடித்துஇலங்கைத் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை நிலைநாட்ட பொறுப்பான தொண்டர்கள் வவுனியா மாவட்டம் எங்கும் அனுப்பப்பட்டார்கள்.

அந்த வரிசையில் வவுனியா மாவட்டம் முல்லைத்தீவில் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்து வளர்க்கும் பொறுப்பு பிலிப் மார்க்குப்பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டது. போதிய நிதி வசதி கட்சியிடம் இல்லாததால் தனது வீடுகளில் ஒன்றை கட்சி அலுவலகமாகப் பதிவு செய்து கட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தார் மார்க்குப்பிள்ளை. தனது கட்சி சகாக்கள் சிவப்பிரகாசம், எஸ்.ஏ. பிலிப் பையா, குணம் சம்மாட்டி, இவர்களுடன் கால்நடை யாக கிராமம் கிராமமாகச் சென்று வீடு வீடாகப் பரப்புரை செய்து மக்கள் மத்தியில் அரசியல்

### நீத்தார் நயப்புரை

விழிப் புணர்வை ஏற்படுத்தி தந்தைசெல்வாவின்தலைமையில் வளர்ந்துவரும் தமிழரசுக் கட்சி பற்றி பரப்புரை செய்தது மார்க்குப் பிள்ளையின் பரப்புரைக்குழு.

இவர்களுக்கு தேவைப்படும்போது நேரடியாக சந்திக்கவும் ஆலோசனை வழங்கவும் மன்னார் நாடாளுமன்ற உறுப்பினர் அழகக்கோன் நியமிக்கப்பட்டிருந்தார். வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தமிழரசுக் கட்சியால் நடத்தப்படும் சட்ட எதிர்ப்புப் போராட்டம்மற்றும்உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்று மார்க்குப்பிள்ளையின் தலைமையில் பெருந்தொகையான தொண்டர்கள் கலந்துகொள்வார்கள். குறிப்பாக இன்று அறுபத்தைந்து எழுபது வயது இருக்கக் கூடிய அன்றைய இளைஞர்கள் 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம், சிறீ எதிர்ப்புப் போராட்டம் என்று இரண்டு தடவைகள் இரண்டு நாள்கள் சிறை சென்றிருந்தனர். ஆனால் முல்லைத்தீவில் தனக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இருந்த செல்வாக்கை நிரூபிக்க முல்லைத்தீவு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட போதும் தோல்வியுற நேர்ந்தது. இவ்விதம் தொடர்ந்து மூன்று தடவைகள் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இருந்தாலும் வவுனியா ரி. சிவசிதம்பரத்துடன் போட்டியிட்டு வெல்லக் கூடிய பலம்மிக்க சக்தியாக எக்ஸ். எம். செல்லத்தம்பு வரழைக்கப்பட்டு வவுனியா மாவட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தமிழரசுக் கட்சியின் கையில் கிட்டும் வரை அவரது போராட்டம் ஓயவில்லை. வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு தனித்தேர்தல் மாவட்டமா கப் பிரிக்கப்பட்டு எக்ஸ். எம். செல்லத்தம்பு முல்லைத்தீவு நாடாளுமன்ற உறுப்பினராகும் வரை மார்க்குப்பிள்ளை தமிழரசுக் கட்சிக்காக உழைத்தார்.

அவரை வெகுவாகப் பாதித்த விடயம் தந்தை செல்வாவின் இழப்பு. தனது வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழரசுக் கட்சிக்காகவே அர்ப்பணித்த அந்த முதுபெரும் தமிழன் தனது கடைசி வாக்குப் பதிவையும் சென்ற செப்ரெம்பர் 21 ஆம் திகதி தமிழரசுக் கட்சிக்குப் பதிவு செய்து தேர்தல் முடிவுகளை கேட்டு மகிழ்ந்த திருப்தியுடன் படுக்கைக்குச் சென்றவர் இரண்டு வாரங்களாக சுகவீனமுற்றிருந்து ஐந்தாம் திகதி காலை இறுதி மூச்சை விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 இயக்குநர்களின் பார்வை

# தனக்காகப் படமெடுத்தவர் இயக்குநர் ஆங் லீ



சர்வதேச அளவில் சமகால இயக்குநர்களில் முக்கியமான ஒருவர் ஆங் லீ ஆவார். இவர் தாய்வானில் பிறந்தவர். ஆசியாவில் ஒஸ்கார் விருது பெற்ற முதல் இயக்குநர் இவரே ஆவார்.13 திரைப்படங்களை இயக்கி, இயக்குநர்களில் வித்தியாசமான பார்வை கொண்டவராக திகழ்ந்தார். இவர் இயக்கிய சகல படங்களும் வெவ்வேறு களங்களை அடிப்படையாகக் கொண்டவை. வசூலில் கொடிகட்டிப் பறந்ததோடு ஒஸ்கார், கோல்டன் க்ளோப் விருதுகளைப் பெற்றார். தனது எண்ணப்படி மனதில் உருவாகும் கருக்களை படங்களாக எடுத்து வெற்றி பெற்றார்.

பார்வையாளர்கள் தான் எடுக்கும் படங்களை விரும்பிப் பார்க்க வேண்டும் என்று சிறுதுளியளவு கூட சிந்திக்காமல் அதாவது பார்வையாளர்களின் இரசனையை கருத்தில் கொள்ளாது, தான் விரும்பும் விதத்தில் படங்களை எடுத்து வெளியிட்டார். இவர் எடுத்த சில படங்களுக்கு எதிர்ப்புக்களும் எழுந்தன. சில படங்களுக்கு ஆதரவு கிடைத்தது. ஆனாலும் தான் எடுத்த படங்களில் எதிர்ப்பு ஏன் வந்தது. ஆதரவு ஏன் கிட்டியது. என்று பார்க்காமல் தனது எண்ணப்படி படம் எடுக்கும் இயக்குநர் இவர் ஒருவர் மட்டுமே என்பது ஆச்சரியம் தான்.

ஆங் லீ சின்ன வயதில் இருந்து நிறைய வரலாற்றுப் புத்தகங்களைப் படித்து வந்தார். எந்தப் புத்தகமாக இருந்தாலும், அவை எத்தகைய கருத்தைச் சொன்னாலும், எல்லாப் புத்தகங்களையும் படிக்கும் ஆர்வம் இவரிடம் தொற்றிக் கொண்டமை ஓர் அபூர்வம் தான். பின்னர் அது தான் சினிமாவை நோக்கி இவரை இழுக்கவும் காரணமாக அமைந்தது.

படிக்கும் காலங்களில் நாடகங்களில் நடித்தார். வெளிவரும் திரைப்படங்கள் எல்லாவற்றையும் தவறாமல் பார்ப்பார். அந்தத் திரைப்படங்களின் காட்சி அமைப்பு, தொழில்நுட்பம் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதை உன்னிப்பாகப் பார்த்து அறிந்து கொள்வார். இப்படியாக தன்னை வளர்த்துக் கொண்டதுதான் திரைப்பட உலகில் அவர் பிரவேசிக்கக் காரணமாக அமைந்தது எனலாம்.

தமது முதல் திரைப்படத்தை எடுக்க முன்னரே இவருக்குத் திருமணம் நடந்தது. அதனால் தனது இலட்சியமான திரைப்படம் எடுக்கும் கனவு நனவாகாமல் போய்விடுமோ என்று பயந்தார். ஆனால் இவருக்கு மனைவியாக வந்த ஜேன்லினுக்கும் கலை மீது ஆர்வம் இருந்ததால், அந்த பயத்தைப் போக்கிக் கொண்டார். ஆங் லீக்கு மனைவி ஜேன்லினும் துணையாக இருந்தார். உயிரிய லாளரான மனைவியின் சம்பாத்தியத்தில் தான் குடும்பம் நகர்ந்தது. ஆங் லீயின் சினிமா இலட்சியத்துக்கு மனைவி கொடுத்த ஆதரவு அவரை மேலும் மேலும் நம்பிக்கையுடன் சினிமாத்துறையில் முன்னேற வைக்கக் காரணமாக அமைந்தது.

'க்ரோச்சிங் டைகர் ஹிட்ன் டிராகன்' சீன மொழியில் இவர் எடுத்த படம். சர்வதேச அளவில் இந்தப் படம் பெரும் வசூலை அள்ளியது. 'ஹல்க்' படம் இவருக்கு பெரிய வெற்றியைத் தராததால் ஒரு கட்டத்தில் சினிமாவில் இருந்து ஒதுங்கி விடவும் தீர்மானித்தார். பின்னர் பலரின் அறிவு ரைகளைக் கேட்டு அந்த முடிவை கைவிட்டார்.

தனது படத்தைப் பார்க்கும் பார்வையாளர்கள் யார் என்பதில் தெளிவாக இருப்பார். பாலியல் தொடர்பான கதையை அடிப்படையாகக் கொண்டு படத்தை எடுத்தால் சிறுவர்கள் அந்தப் படத்தைப் பார்க்கக் கூடாது என்பதில் தெளிவாக இருப்பார். இவர் எடுத்த ப்ரோக்பேக் மவுன்டென் எனும் படத்தை கலாசார காவலர்கள் எதிர்த்தார்கள். இந்தச் சமூகத்தால் ஒதுக்கப்படும் ஒரு காதல் கதை இது. அதாவது இரு ஆண்களின் காதல் கதை. ஓரினச் சேர்க்கையை வெளிப்படுத்தியது இந்தப் படம்.

இவரது லைஃப் ஆஃப்பை படத்தின் கதையில், நாம் எல்லோருமே அந்நியர்கள் என்ற விதத்தில் கடலில் ஒரு படகு. அதில் ஒரு பையன், கூடவே ஒரு புலி. காட்சி நகர்கிறது. பாண்டிச்சேரியை சேர்ந்தவன் பை. மிருகக் காட்சி சாலை நடத்தும் அவனது தந்தை அரசியல் சூழல் காரணமாக விலங்குகளை விற்றுவிட்டு வெளிநாட்டில் குடியேற நினைக்கிறார். பையின் குடும்பம் விலங்குகளுடன் ஒரு சரக்குக் கப்பலில் பயணிக்கிறது. வழியில் பெரும் புயல். இறுதியில் உயிர் தப்பும் படகில் ஐந்து பேர். ஒரு கழுதைப்புலி, ஒராங்குட்டான், வரிக்குதிரை, புலி, பை, முதலில் வரிக்குதிரையையும், ஒராங்குட்டானையும் கழுதைப் புலி கொல்கிறது. அடுத்து கழுதைப் புலியை புலி கொல்கிறது. இப்போது மீதமாக இருப்பது இரண்டே பேர். புலியும் பையும். ஒரு பக்கம் ஆள் அரவமற்ற நடுக்கடல். இன்னொரு பக்கம் 'பை'யை இரையாக்கிக் கொள்ளத் துடிக்கும் புலி. இதனைப் பை எப்படி எதிர் கொள்கிறான். இது தான் கதை.

> 2002 ஆம் ஆண்டுக் கான மேன்புக்கர் பரிசை வென்றது. இப்போது 11 ஆண்டுகள் கழிந்து ஆங் லீயின் இயக்கத்தில் சினிமாவாக வெளிவந்துள்ளது. இந்தப் படம்தான் இவரை சினிமாத் துறையின் உச்சிக்கே கொண்டு சென்றுள்ளது எனலாம்.

இந்தக் கதையை எழுதிய யான் மார்டெல் நாவலாக்கிப் புத்தகமாக வெளியிட முயற்சி செய்த போது லண்டனில் முக்கியமான பதிப்பகங்கள் பல அதனைநிராகரித்தன. ஆனால் 2001 இல் புத்தகமாக இந்தக் கதை வெளிவந்தது. விற்பனையில் உச்சத்துக்குச் சென்றது. 2002 ஆம் ஆண்டுக் கான மேன்புக்கர் பரிசை வென்றது. இப்போது 11 ஆண்டுகள் கழிந்து ஆங் லீயின் இயக்கத்தில் சினிமாவாக வெளிவந்துள்ளது. இந்தப் படம்தான் இவரை சினிமாத் துறையின் உச்சிக்கே கொண்டு சென்றுள்ளது எனலாம். இயக்குநர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம் கொண்டவர்கள். ஆனால் இவரோ தனக்காகவே படம் எடுப்பவர் என்ற பெயரை நிலை நிறுத்தியுள்ளார்.

பார்வையாளன்

# அதிகார பதவி நிலையானதன்று

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

பயங்கரக் காட்சிகள் கொண்ட திரைப்படங்களைப் பார்த்திருக்கிறோம். அந்தப் படங்களில் வரும் பயங்கரக் காட்சிகளை மற்றவர்களுக்கு வர்ணித்து ரசித்திருக்கிறோம். பயங்கரமான விதத்தில் ஏதாவது சாதனை செய்பவர்களையும் நாங்கள் பார்த்திருக்கிறோம்.

அவர்களில் ஒருவர் தான் பிலிப்பெட்டி. இவர் உயரமான இடங்களைப் பார்த்தால் உடனே உயரத்தில் இரு பக்கங்களிலும் கயிறு கட்டி அந்தக் கயிற்றில் நடக்க ஆரம்பித்துவிடுவார். 1949 இல் பிரான்சில் பிறந்த இவருக்கு நடக்கப் பழகிய நாள்களிலேயே இந்த ஆர்வம் வந்துவிட்டது. கயிற்றில் நடப்பார், ஓடுவார், குட்டிக் காரணம் அடிப்பார். சைக்கிள் ஓடுவார். தரையில் செய்வதையெல்லாம் கயிற்றில் செய்வார். இவர் செய்கிற ஒவ்வொரு விடயங்களையும் பார்க்கும் போது உடல் சிலிர்க்கும். அமெரிக்காவின் உயரமான இரட்டைக் கோபுரங்கள் மீது கம்பி கட்டி நடந்தார். அந்தக் கோபுரங்கள் 1368 அடி உயரமும் 140 அடி இடைவெளியும் கொண்டவை. அது முடியவே முடியாது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர் நடந்து காட்டி விட்டார். கோபுரங்களுக்கு இடையில் கம்பிமீது உயரத்தில் நடந்தபோது சாகச வித்தைகளை நிகழ்த்திக் காட்டியபடி நடந்தார். அவரைப் பொலிஸார் கைது செய்தனர். "உனக்கென்ன பைத்தியமா. இங்கிருந்து விழுந்தால் என்ன ஆகும் தெரியுமோ?" என்று கண்டித்த பொலிஸாரிடம் பிலிப் "இங்கிருந்து விழுந்து மரணமடைந்தால், அது எத்தனை இனிமையான மரணமாக இருக்கும் தெரியுமா?" என்று சொன்னாராம். அவருடைய அந்தச் சாதனையையும் அதை அவர் செயற்படுத்திய விதம் பற்றியும் மேன் ஆன் வயர் என்ற பெயரில் திரைப்படமாக எடுத்து அந்தப் படம் ஒஸ்கார் விருதைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல்தான் காலில் கயிறைக் கட்டி உயரமான இடத்தில் அதாவது பாலமோ அல்லது மலையிலோ இருந்து கீழே குதிப்பதிலும் 'த்ரிலிங்' இருக்கும். என்ன? சண்முகம் 'த்ரிலிங்' பற்றிக் கூறுகிறாரே என்று பார்க்கிறீர்களா? சம்பந்தம் இருக்குது. இந்த விதமாய் எப்போதுமே 'த்ரிலிங்காக' எதையுமே செய்யும் ஓர் அதிகாரியின் செயற்பாடுகள் வலு தகிடுதத்தங்களாய் இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் இடர்களைச் சந்தித்து வருகினம். இப்படியான த்ரிலிங்கான விளையாட்டுக்களை விளையாடி உலக சாதனை படைக்காவிட்டாலும் பரவாயில்லை. தனது பதவிக்கான சேவையைச் சரிவரச் செய்து மக்கள் மத்தியில் பேரெடுத்தால் நல்லதல்லவா? ஆனால் இந்த அதிகாரிக்கு எதிராக பொது மக்களே போராட்டம் செய்தார்கள் என்றால் பாருங்களேன். எப்படித்தான் இந்த முகத் தோடை பிறகும் அலுவலகத்துக்கு வந்து போகிறாரோ தெரியவில்லை? மக்களுக்கு சேவை செய்யத்தான் அரசு அவரை ஓர் அதிகாரியாகத் தெரிவு செய்தது. மக்களுக்கு இவரால் பிரயோசனம் இல்லையாயின் இவருக்கு எதற்கு அந்த அதிகாரப் பதவி? கடந்த 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற சுனாமிப் பேரலையாலும் போராலும் பாதிப்படைந்த அந்தப் பகுதி மக்கள் இன்னமும் வாழ்கைப் பிரச்சினையில் இருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். இந்த அதிகாரியின் தன்னலம் மிக்க செயற்பாடுகளால் அந்தப் பகுதி மக்கள் வாழ்வாதாரத்தில் பின்னடைவு கண்டு வருகின்றனர்.

வலையைப் பரப்பி இருக்கும் அந்த வட பகுதியில் உள்ள வளைப் பிரதேசத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் எனது நண்பனைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். அந்தப் பிரதேசம் மணலால் சூழப்பட்டு இருப்பதால், மோட்டார் சைக்கிளில் ஒழுங்கைக்குள்ளால் போகச் சிரமமாய் இருந்தது. ஒரு மாதிரிச் சமாளித்து எனது நண்பனின் வீட்டு வாசலில் சென்று நிற்கிறேன். குடிசையின் வெளியே எடுத்து வைத்திருக்கும் வாளித் தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்டிருந்த எனது நண்பன் என்னைப் பார்த்ததும் படலைக்கு வந்தான். "உள்ளே வாவன்" என்றான். மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு அவனது வீட்டிற்குள் நுழைகிறேன்.

குடிசைக்குள் இருக்க இடமில்லை என்பதால் ஒரு மரத்தின் கீழ் பிளாஸ்ரிக் கதிரையைக் கொண்டு வந்து போட்டான். மணலில் கதிரை புதைந்து சரிய ஒரு மாதிரிச் சரி செய்து கொண்டு அமர்கிறேன். "என்ன இந்தப் பக்கம் காற்றடித்து இருக்கு" என்று என்னைக் கேட்டான். நானோ "காற்று இன்னும் இங்கே அடிக்க வில்லையாம். அதுதான் பார்த்துவிட்டுப் போவோம் என்று வந்தேன்" என்று சொன்னேன். அவனோ "எங்கடை இந்தப் பிரதேசம் பின்தங்கி இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு பல பேர் கிளம்பி இருக்கினம். தங்களுடைய தேவையை மட்டும் நிறைவு செய்கினம். இதைத் தட்டிக் கேட்பதற்கு ஆக்கள் இல்லை. நாங்கள் ஒன்றாகக் கூடி ஒரு நாள் அதிகாரிக்கு எதிராக போராட்டம் நடத்தினோம். அந்தப் போராட்டம் மூலம் எந்தவொரு மாற்றமும் ஏற்படவே இல்லை" என்றுசொல்லி விட்டு வீட்டுக்குள் சென்று ஒரு கடிதப்பிரதியை எடுத்து வந்து என்னிடம் தந்துவிட்டு எங்கள் "போராட்டத்தின் போது நாங்கள் வழங்கிய கோரிக்கைக் கடிதம்" என்று சொன்னான். கடிதத்தைப் பார்த்தேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதில் பாரபட்சம், கடற்றொழில் செய்யும் மக்களுக்கு உதவிகள் வழங்கும் நிறுவனங்களை மக்களுடன் பேசவிடாது இரகசியமான உதவிகளைப் பெற்றமை, வீதிகள் மற்றும் பொது இடங்களை அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டாமை, தன்னிடம் உள்ள உத்தியோகத்தர்களை வைத்து செய்து முடித்தமை சாதி, சமய, பேதம் காட்டி வெளிப்படையாகப் பேசிக்கொள்வது ஒப்பந்தங்களை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்காமை, நியாயம் கேட்கச் செல்லும் மக்களைக் கதைக்க விடாமல் தரக்குறைவான வார்த்தைகளை பிரயோகித்து ஏனைய உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தல் போன்ற முறைப்பாடுகள் அந்தக் கடிதத்தில் காணப்பட்டன.

"என்னடா பிறகு எதற்காக இவரை இன்னமும் அதிகாரியாக வைத்திருக்கிறாங்கள்" என்று அவனைக் கேட்டேன். அவனோ" இவரைப் பற்றி இன்னும் பல கதைகள் சொல்லலாம்" என்றான். நானோ "இவ்வளவையும் பார்க்கும் போதே தலையைச் சுற்றுகிறது. நீ வேற இவரைப் பற்றி இன்னும் நிறைய இருக்கிறது என்கிறாய். வேண்டாம் சொல்லாதே. ஓர் அதிகாரியால் ஒரு பிரதேசம் எவ்வளவு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்று தான் பார்க்க வேண்டும். ஆனால் இந்த அதிகாரியால் "ஒன்றுமே நடக்கவில்லை என்றால் என்ன செய்ய முடியும் என்றேன்" அவனோ "அதிகாரியை மாற்ற வேண்டும்" என்றான். நானோ புதிதாக வருகின்ற அதிகாரியும் இவரைப் போல நடந்து கொண்டால் என்ன செய்ய முடியும்" என்று கூற அவனோ 'ஓமோம் என்னதான் செய்ய முடியும்" என்று திருப்பி என்னைக் கேட்டான். "நானோ "இது உங்கள் ஊர்ப் பிரச்சினை. நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்" என்றேன். அவனோ "அது தெரியாதபடியால்தானே இந்தப் பிரதேசம் பின்தங்கியிருக்கிறது" என்றான்.

"இந்த அதி காரியைக் கொண்டே இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். அதை விட்டு விட்டு இவரை இடமாற்றம் செய்துவிட்டால் இவர் போற இடத்தில் உள்ள மக்களுக்கும் இதே கதிதான் ஏற்படும். ஆகவே இவரை வைத்தேஇந்தப் பிரதேசத்தை கட்டியெழுப்புவதற்கான வழியைத் தேட வேண்டும். அப்பொழுதுதான் இந்த அதிகாரி தனது கடமையை பொறுப்பை உணர்வது மட்டுமல்லாமல் இந்த வேலையின் தாற்ப்பரியத்தையும் உணர்ந்து கொள்ள முடியும். அப்படி உணர்ந்து கொண்டால் மட்டுமே இவர் தனது கடமையை நியாயமான முறையில் மேற்கொள்வார். அதில் எந்தப் பிழையும் வராமல் தன்னை வளர்த்துக் கொள்வார்" என்றேன்.

அவனோ நக்கல் சிரிப்புடன் "ஓ தன்னை வளர்த்துக் கொள்வார்" என்றான். நானோ "என்ன சொல்கிறாய்" என்றேன். அவனோ "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு" என்றான். அவன் சொன்னதில் இருந்து புரிந்து கொண்டேன் இந்த அதிகாரி மீது எவ்வளவு நெருப்பாக மக்கள் இருக்கிறார்கள் என்பதை அந்தக் கதையை அத்தோடு நிறுத்திக் கொண்டு அவனுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி விசாரித்து விட்டு அவனிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு வரும் போது ஒரு தடவை திருப்பி அவ்னது வீட்டைப் பார்த்து விட்டு வந்தேன். அவனது குடிசை வாழ்க்கைக்கும், அந்த வீதிக்கும் எப்பொழுது தான் விடிவு கிடைக்குமோ என்று எனது மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனை போன்ற குரங்கு



அமேசான் காடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் 441 புதிய தாவரங்கள், விலங்குகள் மற்றும் பூச்சியினங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

அவற்றில் பூனை போல் முகம் கொண்ட குரங்கு வகை ஒன்றும் அடங்கும். இது குறித்து விலங்கின ஆராய்ச்சியா ளர் தோமஸ் டெப்லர் கூறுகையில்,

"புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த குரங்கினம் மிகவும் அபூர்வமானதாகும். குட்டிக் குரங்குகள் கிட்டத்தட்ட பூனை போலவே தோற்றம் அளிக்கின்றன. மேலும், மகிழ்ச்சி ஏற் படும் போது, பூனை போலவே ஒலி எழுப்பி, தகவல் பரி மாற் றத்தை வெளிப்படுத்துகின்றன" என்று தெரிவித்துள்ளார்.

# மக்களைக் கவரும் 'பபிள் ரூம்'

## காதலை வெளிப்படுத்த இது ஓர் சிறந்த இடம்!



இன்றைய காலகட்டத்தைப் பொறுத்த வரையில் மக்கள் நாளுக்கு நாள் புதுமைக ளையே எதிர்பார்க்கின்ற னர். அந்த வகையில் பிரான் சில் மக்களிடையே தற்போது வேகமாக பிரபலமடைந்து வருகிறது Bubble Rooms விடுதி.

தென்கிழக்கு பிரான்சின் கடற்கரையில் இருந்து 10 மைல்தொலைவில் இத்தகைய ஒரு விடுதி உள்ளது.

அதன் சிறப்பம்சம் என்ன வென்றால், இங்கு உள்ள அறைகள் யாவுமே பிளாஸ் டிக்கால் ஆனவை. அவை பார்ப்பதற்கு குமிழிகள் போன்றே உள்ளன. ஒவ் வொரு அறைக்கும் டெலெஸ் கோப் ஒன்று வழங்கப் பட்டுள்ளது. அதன் மூலம் இரவு நேரங்களில் நட்சத்தி ரங்களின் அழகைக் கண்டு ரசிக்கலாம். தம்பதிகள் மத்தி யில் பிரபலமைந் துள்ளது இந்தவிடுதி. குறிப்பாக இதுதங் கள் காதலை வெளிப்படுத்த சிறந்த இடமாக திகழ்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையை எப்போதும் துணிச்சலுடன் எதிர்கொள்ளுங்கள்

மயூரி

உங்கள் மனதை மற்றவர்கள் எளிதில் உடைத்து விடுகிறார்களா? தினமும் யாரோ ஒருவரால் கவலையைச் சுமந்து திரிகிறீர்களா? அழக்கழ வருத்தங்களையும், அவமானங்களையும் சந்திக்கிறீர்களா? எதையும் சந்திக்க வேண்டிய திட மனது உங்களிடம் இல்லையா? அப்படியென்றால் உங்களைப் பற்றி சில விடயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

எதிலும் உறுதியான பிடிப்பு இல்லை. உங்களுக்கென்று சரியான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அனேக அவமானங்களையும் ஏமாற்றங்களையும் அதிகமாகச் சந்திக்கிறீர்கள். மனம் வெறுமையாகக் கிடக்கிறது. அதில் எதை வைத்து அனுபவிப்பது என்றே தெரியவில்லை. யாரும் உங்களை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. என்னடா வாழ்க்கை? நான் சபிக்கப்பட்டவன். சாபம் நிறைந்து வாழ்கிறேன் என்ன செய்வதென்றே தெரியவில்லை. இதுதான் உங்கள் ஜாதகம் உங்களை பற்றி நீங்கள் இப்படித்தான் நினைக்கிறீர்கள். தன்னை பற்றிய தாழ்வான எண்ணங்களே மனபலவீனத்துக்கு முக்கிய காரணமாகும். வாழ்க்கையில் நடக்கும் ஒரு நடைமுறை உண்மை உங்களுக்குத் தெரியுமா! கஷ்டப்படுகிறவனைத் தான் திரும்பவும் கஷ்டங்கள் வந்து ஒட்டிக் கொள்ளும். ஏனென்றால் அவன் தன்னைத் தரித்திரன் என்றே எண்ணி விடுகிறான். அவன் எண்ணங்களே தவறாமல் மீண்டும் துன்பத்தை அள்ளிக் கொடுத்து விடுகிறது.

நீங்களும் அறியாத குழந்தையாக இருந்தபோதே நடந்த சின்னச் சம்பவங்களை அழுகையாக, சோகமாக நினைத்து பிஞ்சிலேயே ஒடிந்து விழுந்து கிடக்கிறீர்கள். மீண்டும் நிமிர்ந்து கொள்ளாமல் திரும்பத் திரும்ப நான் பாவப் பிறவி என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் எண்ணப்படியே நீங்களும் தவறாமல் பாவப்பிறவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது நீங்கள் புதிய எண்ணங்களை விதையுங்கள், சபிக்கப்பட்டவன் என்ற எண்ணத்தைப் புரட்டிப் போட்டு அதன் மறுபுறத்தில் ஏறி உட்காருங்கள்.

பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் ஒரே மனத்திடத்தோடு பிறப்பதில்லை. சிறு பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதைக் கவனியுங்கள். இரண்டு மூன்று பிள்ளைகள் ஒன்றாகக் கூடி பேசிக்கொண்டே போவார்கள். ஒரு குழந்தை மட்டும் அவர்களோடு ஒட்டாமல் சற்று விலகிச் செல்லும். சின்னவர், பெரியவர் என்றில்லாமல் ஒவ்வொருவரின் குணாதிசயமும் வேறு வேறாகவே இருக்கின்றன. எனவே நான் மட்டும் தான் இப்படி என்று நினைக்காதீர்கள். இல்லாத திடத்தை நிச்சயம் வளர்த்துக் கொள்ள முடியும்.

ஐயோ என்ன வாழ்க்கை இது என்று கதறிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து இவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான் என்று துணைக்கு அவர்களுடன் ஒட்டிக் கொள்ளாதீர்கள். சிறிது சிறிதாக மகிழ்ச்சியான, தைரியமான சூழலுக்கு, புதுமையான எண்ணங்களுக்கு உங்களைப் பழக்கிக் கொள்ளுங்கள். மாற்றங்கள் நிறைந்த சூழலுக்கு உங்கள் மூளையைப் பழக்கி விடுங்கள். மூளையானது நெகிழ்வுத் தன்மையுடையது. நீங்கள் விரும்பும் சூழலுக்கு அதைத் தயார்படுத்தி வைக்க முடியும்.

உங்கள் பலவீனங்களைப் பார்த்து யாரேனும் உங்களை அவர்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்தக்கூடும். அடிமைப்படுத்தி வைக்கக் கூடும். இன்னும் அந்த அடிமைத் தனத்தைத் தொடராதீர்கள். அவைகளை மறுத்து விடுங்கள். முதலில் உங்களை வெறுப்பார்கள். வெறுக்கட்டும். முதலில் கெட்ட பெயர்தான் கிடைக்கும். கிடைக்கட்டும். சில தினங்களுக்குப் பின்னர் அவனா! அவன் அப்படித்தான் என்று உங்களுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும்.

எனவே வேண்டாத தாழ்வான எண்ணங்களைத் தொலைத்து, எதையும் எதிர்கொள்ள வேண்டிய தைரியத்தை வளர்த்து மனதை உறுதியாக நிலைநிறுத்தி வையுங்கள். கவலைகளை மறந்து துணிவான எண்ணங்களை வளர்க்க ஆரம்பித்தீர்களானால், இதுவரை பட்ட வேதனைகளும் அவமானங்களும் மீண்டும் சோதனையை ஏற்படுத்தாமல், உறுதியை, தைரியத்தை, துணிச்சலையே கற்றுத்தரும். வாழ்க்கையைத் துணிச்சலுடன் எதிர்கொள்ளுங்கள்.

**மகிழ்ச்சியான, தைரியமான சூழலுக்கு, புதுமையான எண்ணங்களுக்கு உங்களை பழக்கிக் கொள்ளுங்கள். மாற்றங்கள் நிறைந்த சூழலுக்கு உங்கள் மூளையை பழக்கி விடுங்கள், மூளையானது நெகிழ்வுத் தன்மையுடையது நீங்கள் விரும்பும் சூழலுக்கு அதை தயார்படுத்தி வைக்க முடியும்.**

# வழிகாட்டுங்கள்

மிது

கண்ணிருக்கிறது: ஆனால் வழி தெரியவில்லை. எங்கே போவது என்று தெரியும். ஆனால் எப்படிப் போவது என்று தெரியாது. எல்லாத் திறமைகளும் இருக்கிறது அதை எப்படி செயற்படுத்துவது என்பது தெரியவில்லை. இப்படித்தான் பல திறமைசாலிகள் தங்களிடம் பல வரங்கள் இருந்தாலும் அவற்றை எப்படி உலகிற்கு காட்டுவது என்பது தெரியாமல் அடைக்கப்பட்ட பாதையில் நிற்பவனைப்போல விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பல மனிதர்கள் தமக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லிக் கொடுக்க விரும்புவதில்லை. தான் மட்டுமே சாதிக்க வேண்டும். தான் மட்டுமே பணம் சம்பாதிக்க வேண்டும். மற்றவர்கள் தன்னைப் போல வரக்கூடாது என்று நினைக்கிறார்கள். சில வெற்றியாளர் தன்னைப் பற்றி சொல்லும் போது மிகவும் கடுமையான உழைப்பினால்தான் நான் உயர்ந்து நிற்கிறேன் என்று மட்டுமே சொல்லுவார்கள். அந்த வெற்றியிலுள்ள வேறு சூட்சுமங்களைச் சொல்ல மாட்டார்கள்.

எந்த மனிதனும் கஷ்டங்களை மட்டுமே அனுபவித்து வெற்றியாளனாவதில்லை. அதன் பின்னே பல ஆர்வங்கள், அதிலுள்ள ஈடுபாடுகள், அவைகளைச் செய்யத் தூண்டிய விடயங்கள், அதிலிருக்கும் சந்தோஷங்கள், எதையும் இறுக்கமாக எடுத்துக் கொள்ளாமல் இயல்பாக எடுத்துக்கொள்ளும் விதங்கள், இப்படியாகத் தனது முன்னேற்றங்களின் பின்னால் பல விடயங்கள் இருந்தாலும் அவைகளைச் சொல்லாமல் கஷ்டப்பட்டேன்; முன்னேறினேன்; நீயும் கஷ்டப்படு; முன்னேறு; என்பார்கள்.

அவர்கள் உழைப்பு மிகவும் பெரியதுதான். மிகவும் கஷ்டப்பட்டவர்கள் தான். ஆனால் அதை மட்டுமே சொல்வதால் கேட்பவர்கள் மென்மேலும் வெறுப்படைவார்களே தவிர, எதையும் செய்வதில் ஆர்வம் காட்டமாட்டார்கள். அதுவே சிரமமான வெற்றியையும் கஷ்டப்பட்டுச் செய்யாதே, விருப்பப்பட்டுச் செய் என்று அதன் அழகான கூறுகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தால் அவனும் சில சூட்சுமங்களை தெரிந்து கொள்வான்.



நாம் செய்தவற்றை மட்டுமல்ல தவற விட்டவற்றையும் பிறருக்குச் சொல்லிக் கொடுத்து வழிகாட்டுவதே நல்ல மனிதப் பண்பாகும்.

அவனுக்கும் அந்த வெற்றியை நோக்கி ஓட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்

எனவே நாம் பிறருக்கு நல்ல வழி காட்டிகளாக இருப்போம். எம்மிடம் மட்டுமே விசேட குணங்கள் உள்ளன. இது போல பிறர் எதையும் செய்ய முடியாது என்று மற்றவர்களை மட்டமாக நினைக்காமல் எமக்குத் தெரிந்ததையெல்லாம் உலகுக்குச் சொல்லுவோம். நாம் மற்றவர்களுக்குச் செய்யும் கடமையாக அதை நினைப்போம். இருபது வயதிலே வெற்றிக்கான திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியவன் பத்து வருடங்களைத் தொலைத்து முப்பது வயதில் அதனை ஆரம்பிக்கிறான். காரணம் அவனுக்கு வழிகாட்ட ஆளில்லை.

எம்முடைய நேரத்தை நாம் பயன்படுத்தினால் நாம் நன்றாக இருப்போம். பிறருக்கும் வழிகாட்டி, அவர்களுடைய நேரத்தையும் பயன்படவைத்தால், இந்த நாடே நன்றாக இருக்கும். தீய விடயங்களைத் தான் இரகசியம் என்று சொல்லி மறைக்கிறார்கள். அதுபோல நல்லவைகளை ஏன் இரகசியமாக வைக்க வேண்டும். பிறர் வளர்ச்சியில் எரிச்சலை காண்பதாக மனித வாழ்வு. நாம் செய்வதை மட்டுமல்ல தவற விட்டதையும் பிறருக்குச் சொல்லிக் கொடுத்து வழி காட்டுவதுதான் நல்ல மனிதப் பண்பாகும்.

எனவே, நீங்கள் ஒரு வழிகாட்டியாக இருங்கள். அங்கே போ.. அங்கே முத்துக்கள் இருக்கின்றன. இப்படிப் போ.. அங்கே மாணிக்கங்கள் கிடக்கின்றன. நேரே போ.. அங்கே வைடூரியங்கள் சிதறிக் கிடக்கின்றன என்று நீங்கள் கண்ட கனிகளைச் சொல்லிக் கொடுங்கள். அதைவிடுத்து நீ எப்படி வாழப் போகிறாய், என்று பரிதாபப்படுவது போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். உங்களால் ஒருவனும் வீழ்ச்சியடையாமல் வளர்ச்சியடைய வேண்டுமானால் அவர்களின் கையைப் பிடித்து நடத்திச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org